www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 27
கதிர் 144

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 15 திங்கட்கிழமை (28/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## வயோதிப மாது சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மே 28

அச்சுவேலியில் தனியாக வசித்து வந்த வயோதிப மாது நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது கொலையாக இருக்கலாம் என்ற போர்வையில் விசாரணைகளை நடத்திவருவதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரி 04↘



மன்னாரில் அமைச்சர் றிஷாட் பதியுதீனுக்கு எதிராக நடைபெற்ற கண்டன நிகழ்வில் கலந்துகொண்ட மக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும்.

## றிஷாட்டுக்கு எதிராக திரண்டது மன்னார்

மன்னார், மே 28

கத்தோலிக்க, இந்து, இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த மக்கள் பல்லாயிரக்கணக்கில் ஒன்று திரண்டு நடத்திய அமைச்சர் றிஷாட்டுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தால் மன்னார் மாவட்டமே நேற்று அதிர்ந்தது.

அமைச்சர் றிஷாட் பதியுதீனுக்கு எதிராக நேற்று மன்னாரில் மாபெரும் கண்டன நிகழ்வு திட்டமிட்டபடி நடைபெற்றது.

மன்னார் ஆயருக்கு எதிரான கருத்துகளை அமைச்சர் றிஷாட் நாடாளுமன்றத்தில் வெளியிட்டிருந்தார். இதனைக் கண்டித்தே மன்னார் மக்கள் இந்தக் கண்டன நிகழ்வை நடத்தினர். கத்தோலிக்க மக்களுடன் இந்து மக்களும், முஸ்லிம் மக்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அத்துடன் கத்தோலிக்க மத குருமார்கள், அருட்சகோதரிகள், இந்து மதகுருமார்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், வினோநோதராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் பேராலய முன்ற 04↘

# சர்வதேச ஆதரவுடன் உரிமைப் போராட்டம்

## இதுவே கூட்டமைப்பின் புதிய வழிமுறை – சம்பந்தன் உரை

மட்டக்களப்பு, மே 28

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டம் இப்போது முற்றிலும் வேறுபட்ட புதியதோர் அத்தியாயத்திற்குள் நுழைந்திருக்கிறது. சர்வதேசத்தின் ஆதரவுடன் உரிமைப் போராட்டத்தை வென்றெடுக்கும் புதிய வழிமுறையை கூட்டமைப்பு தேர்ந்தெடுத்துள்ளது. என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

இனப்பிரச்சினைத் தீர்வில் இலங்கை அரசு கபடப்போக்கைக் கைவிடாத பட்சத்தில் நாடு வரலாற்றுப் பின்னடைவைச் சந்திக்குமெனவும் அவர் எச்சரித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பேராளர் மாநாட்டில் உரையாற்றிய சம்பந்தன், தமிழ் இனத்தின் இருப்பையே கேள்விக்குறியாக்கும் வகையில், அபிவிருத்தி என்ற மரணப்பொறியை இலங்கை அரசு உருவாக்கியுள்ளதால் அதில் சிக்கிவிடக் கூடாதென்றும் சுட்டிக்காட்டினார். 04↘



## பொன்சேகா விடுதலை பற்றி நான் பதிலளிக்க முடியாது

### கோத்தபாய சீற்றம்

"சரத் பொன்சேகா விடுதலை செய்யப்பட்டது தொடர்பான எனக்கு ஒன்றும் தெரியாது. அதுபற்றி என்னிடம் கேள்வி கேட்க வேண்டாம். இது பற்றியே கேட்டுக் கொண்டிருந்தால் நான் பதில் ஏதும் சொல்ல மாட்டேன்" இவ்வாறு ஊடக ஆசிரியர் ஒருவரிடம் கடுமையாக பதில் சொல்லியிருக்கிறார் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ.

கொழும்பில் இருந்த வெளியாகும் 'சண்டேலீடர்' வாரஏட்டின் ஆசிரியர் பிரெட்ரிகா ஜோன்சுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு சீறிப்பாய்ந்துள்ளார்.

அந்தச் செவ்வி 04↘

## இலங்கை தூதரகங்களுக்கு வாய்ப்பூட்டுப் போடும் அரசு

### ஐ.நா. மீளாய்வுக் கூட்டத்தை முன்னிட்டு

கொழும்பு, மே 28

ஐ.நா. மற்றும் ஐ.நா. அதிகாரிகள், வெளிநாட்டு அரசுகளுக்கு எதிராக எந்த அறிக்கைகளையோ கருத்துக்களையோ வெளியிட வேண்டாம் என்று கோரும் கடிதத்தை இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளிநாடுகளில் உள்ள தமது தூதரகங்களுக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தைக் கருத்தில் கொண்டே இந்தக் கடிதம் அனுப்பப் படவுள்ளது. 04↘

## எட்டு வயதுப் பாலகி மீது பாலியல் துஷ்பிரயோகம்

### நாவற்குழியில் கொடூரம்

யாழ்ப்பாணம், மே 28

தென்மராட்சி நாவற்குழியில் எட்டுவயதுப் பாலகி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

குறித்த சிறுமியின் உறவினர் எனத் தெரிவிக்கப்படும் 19 04↘

## 'ஹைஏஸில்' பறந்து வந்தவர் தூக்கிச் சென்றார் பெண்ணை

### கோண்டாவிலில் நேற்றுப் பரபரப்பு

யாழ்ப்பாணம், மே 28

மோட்டார் சைக்கிளில் வீதியில் சென்று கொண்டிருந்த இளம் பெண்ணை ஹைஏஸ் வானில் வந்தவர்கள் திடீரென இறங்கி தரதரவென இழுத்து அதில் ஏற்றிக்கொண்டு பறந்து சென்ற பரபரப்பான சம்பவம் கோண்டாவிலில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

கோண்டாவிலிலுள்ள பழைய ஆணித் தொழிற் 04↘

## மனித உரிமை மீறல்களில் படையினரா? அமெரிக்காவிடம் சீறுகிறது இலங்கை

இலங்கை இராணுவத்துக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அமெரிக்கா அறிக்கை வெளியிட்டுள்ளதாக இலங்கை அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்கா அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் படையினருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இலங்கை இராணுவத்தினரின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படுத்தும் மேரிகொள் எப்படும் மற்றுமொரு முயற்சியாக இந்த அறிக்கையை நோக்குவதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோதப் படுகொலைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை. துணை இராணுவக் குழுக்கள் இலங்கையில் இயங்கவில்லை சீருடை தரித்த இராணுவத்தினர் மட்டுமே நாட்டில் ஆயுதம் ஏந்திக் கடமையில் ஈடுபட்டுள்ளனர் 04↘

## இலங்கைக்குள் நுழைய ஐ.நா.குழுவுக்குத் தடை

கொழும்பு, மே 28

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க மஹிந்த அரசு தயாராக இல்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்துக்கு அமைய, ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது குறித்து ஆராய ஜெனிவாவில் இருந்து ஒரு குழுவை இலங்கைக்கு அனுப்ப ஐ.நா. மனித உரிமைகள் சபை முடிவு செய்துள்ளது.

இது குறித்து 04↘

## பள்ளிவாசல் அகற்றப்படாது

### பாதுகாப்புச் செயலர் உறுதி

தெஹிவளை குர்ஆன் மத்ரஸா எக்காரணம் கொண்டும் தற்போதுள்ள இடத்திலிருந்து அகற்றப்படமாட்டாதென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அ.இ.மு.கா. தலைவரும் அமைச்சருமான றிஷாத் 04↘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில்...



படங்கள் - சலீம்

# அடக்குமுறை நிகழும் என்று தெரிந்திருந்தால் ஆங்கிலேயர்களே நாட்டைப் பிரித்திருப்பர்

## முஸ்லீம் காங்கிரஸ் செயலர் தெரிவிப்பு

**பள்ளிவாசல்களுக்கு எதிராக நாட்டில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவது குறித்து அரசிடமிருந்து இன்னும் உறுதியாக எந்தவொரு அறிக்கையும் கிடைக்கப்பெறவில்லை.**

கொழும்பு, மே 28

பள்ளிவாசல்களுக்கு எதிராக நாட்டில் கட்டவிழ்த்து விடப்படும் குரோதத்தனமான நடவடிக்கைகளுக்கு அரசு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்காவிட்டால், முஸ்லிம் மக்களின் கடுமையான எதிர்ப்பலைகளை அரசு சந்திக்க நேரிடும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிறுபான்மையின மக்களுக்கெதிராக நாட்டில் இவ்வாறான அடக்குமுறைகள் இடம்பெறும் எனத் தெரிந்திருந்தால் அன்று நாட்டை இரண்டாகப் பிரிட்டிஷ்காரர்கள் பிரித்துக் கொடுத்திருப்பர்கள் என்று மு.காவின் செயலாளர் நாயகம் ஹசன் அலி எம்.பி. 'உதய'னிடம் தெரிவித்தார்.

பள்ளிவாசல் உடைப்பு விவகாரம் குறித்து அரச உயர் மட்டத்திலிருந்து இன்னும் உறுதியான வாக்குறுதிகள் கிடைக்கப்பெறவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மைக்காலமாக பள்ளிவாசல்களுக்கு எதிரான போர் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுராதபுரம், தம்புள்ள என அந்தப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

அதிலும் குறிப்பாக, பௌத்த பிக்குகளின் பூரண அனுசரணையுடனேயே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பௌத்த பிக்குகள் பள்ளிவாசல்களைத் தாக்குவதற்கு முற்படும் போது படையினரும் கைகட்டிவேடிக்கை பார்ப்பதானது முஸ்லிம் சமூகத்தை அதிர்ச்சியில் உறையவைத்துள்ளது.

தம்புள்ள பள்ளிவாசல் அகற்றப்படும் விவகாரம் நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்த அந்தப் பிரச்சினை தணிவதற்கு முன்னரே, தற்போது தெஹிவளையில் அமைந்துள்ள குர்ஹான் மதரஸாவை அகற்றக்கோரி பிக்குகளின் தலைமையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தெஹிவளை மிருகக் காட்சிச்சாலைக்கு அருகிலுள்ள கல் விஹாரை வீதியிலுள்ள குர்ஹான் மதரஸா மீது கடந்த வெள்ளிக்கிழமை மாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பஸ்களில் பெருந்திரளில் வந்த பிக்குகள் சுமார் இரண்டு மணி நேரம் தாக்குதலை தொடுத்ததால் அந்தப் பிரதேசத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நாட்டை பௌத்த மயப்படுத்தும் நோக்கிலேயே அரசு இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது என்றும், அன்று கோவில்களை உடைத்தனர்; இன்று பள்ளிவாசல்களை உடைக்கின்றனர் என எழும் குற்றச்சாட்டுகளை நிராகரிக்க முடியாத வகையிலேயே அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளன என்றும் அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துமாறு சர்வதேச சமூகம் இலங்கையை வலியுறுத்திவரும் நிலையிலேயே நாட்டில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன எனச் சுட்டிக்காட்டியுள்ள புத்திஜீவிகள், இது நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்றும் எச்சரித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க, தெஹிவளையில் குர்ஹான் மதரஸாவை அகற்றக்கோரி பிக்குகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் மற்றும் அங்கு கட்டவிழ்த்து விடப்பட்ட மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் குறித்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி எம்.பியிடம் 'உதயன்' வினவியது.

இதன்போது அவர் கூறியவை வருமாறு:-

பள்ளிவாசல்களுக்கு எதிராக நாட்டில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவது குறித்து அரசிடமிருந்து இன்னும் உறுதியாக எந்தவொரு அறிக்கையும்கிடைக்கப்பெறவில்லை.

தம்புள்ள பள்ளிவாசல் அகற்றப்படும் எனத் தெரிய வந்ததும் அனைவரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அத்துடன், அவர்கள் நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டனர். ஆனால், ஒன்று, இரண்டு, மூன்று எனத் தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

பள்ளிவாசல்களுக்கு எதிராக நாட்டில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் இனியும் தொடரக்கூடாது. இதற்கு அரசு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அரசு அவ்வாறு செய்யாவிட்டால் முஸ்லிம் மக்களின் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டிய நிலைமை அரசுக்கு ஏற்படும்.

இவை மதம் சம்பந்தப்பட்ட விடயம். எனவே, எம்மால் மௌனமாக இருக்கமுடியாது. அரசியலுக்காக மதத்தை விட்டுக்கொடுக்க முடியாது. அவற்றுக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும்.

எமது சமூகத்துக்கும் மதச் சுதந்திரம் உள்ளது. முஸ்லிம் அரசமைப்புச் சட்டம் உள்ளது. பிரிட்டிஷ்காரர்கள் நாட்டை விட்டுச் செல்லும்போது அனைத்து இன மக்களும் சம உரிமைகளுடன் வாழ வேண்டும் என்ற நம்பிக்கையுடனேயே திரும்பினர்.

சிறுபான்மையான மக்களுக்கு பாதுகாப்பு இல்லை எனத் தெரிந்திருந்தால் பாகிஸ்தானைப் போன்று அன்று இலங்கையையும் இரண்டாகப் பிரித்துக் கொடுத்து விட்டே சென்றிருப்பர். பள்ளிவாசலுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்வது பாரதூரமான விடயமாகும். எனவே, இவற்றுக்கு உடனடியாக தீர்வுகாணப்பட வேண்டும்.

தொடர்ந்தும் அரசு இவ்வாறான நடவடிக்ககைகளை முன்னெடுக்க விரும்பினால் சவூதிஅரேபியா போன்று நாட்டின் பெயர்களை மாற்றிக்கொண்டு செயற்படுங்கள் - என்றார்.

## வெந்த புண்ணில் மஹிந்த வேல் பாய்ச்சுகிறார்

### கருணாநிதி வேதனை

வெளிநாடுகளின் நெருக்குதல்களுக்குப் பணிந்து தமிழர் பகுதிகளிலுள்ள இராணுவத்தை குறிப்பிட்ட இடங்களில் இருந்து திரும்பப் பெற முடியாது என்று இலங்கை ஜனாதிபதி சொல்லியிருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போல உள்ளது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி வேதனை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் 200 நாடுகளில் மனித உரிமை நிலை குறித்த 2011ஆம் ஆண்டுக்கான அறிக்கையை வொஷிங்டன் நகரில் வெளியிட்டிருக்கிறார். குறிப்பாக, தமிழர்கள் பெரும்பாலும் வசிக்கும் பகுதிகளில் சிங்கள இராணுவம் மற்றும் அரசு ஆதரவுக் குழுக்கள் சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்பட்டு கொலைகளை நிகழ்த்தி வருகின்றன. மனித உரிமை மீறல்களால் எண்ணிலடங்காத தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கைக்கான பிரிட்டன் தூதர் ஜான் ரான்கின், இலங்கையில் தமிழர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இராணுவம் அதிகம் குவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருக்கிறார். இதனை நிராகரித்து இலங்கை ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார். இதையெல்லாம் பற்றி விவாதித்து முடிவெடுக்கத்தான் டெசோ மாநாட்டினை விரைவிலே கூட்டுவதாக அறிவித்திருக்கிறோம். என்றும் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்கள் நுகர்வு நிலை குடாநாட்டில் பெரும் வீழ்ச்சி

## வர்த்தகர்கள் பாதிக்காதவாறு யாழ். வணிகர் கழகம் நடவடிக்கை

*யாழ்ப்பாணம், மே 28*

*நாட்டில் பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் குடாநாட்டில் நுகர்வில் மக்கள் நாட்டம் காட்டாமையால் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் யாழ். மாவட்ட வர்த்தகர்கள், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் பாதிப்புக்கள் குறித்து வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்.வணிகர் கழகம் இவ்வாறான ஆலோசனைகளை வழங்கி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.*

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

✱ வர்த்தகர்கள் அளவுக்கு அதிகமான பொருள்களைக் கொள்வனவு செய்வதை உடன் நிறுத்துவது.

✱ தற்போதைய வட்டி வீதம் நாட்டில் கூடியிருப்பதால் அதிகமாக கடன்பட்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தல்.

✱ நுகர்வோர் தேவைக்கு ஏற்ப விற்பனை செய்யக் கூடிய பொருள்களைக் கொள்வனவு செய்தல்.

✱ வர்த்தகர்கள் வர்த்தக ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடும் போது சட்ட ரீதியாக அதனைச் செயற்படுத்தல் (பதிவு செய்து நடைமுறை ரீதியாகச் செயற்படல்) வேண்டும்.

✱ விலைக் கட்டுப்பாடு, காலாவதியான பொருள்களை விற்பனை செய்வதைத் தவிர்த்தல்.

✱ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களை விற்பனை செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுதல்.

✱ விலைப்பட்டியலிடுதல் போன்றவற்றில் அதி முக்கிய கவனம் செலுத்துதல்.

யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கு பற்றிய கூட்டம் கடந்த சனிக்கிழமை யாழ். வணிகர் கழக பணிமனையில் நடைபெற்றது. அதற்கமைய வர்த்தகர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு முன்னோடி நடவடிக்கையாக இந்த அறிவிப்புக்கள் விடுக்கப்படுவதாகவும் யாழ்.வணிகர்கழகம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தது.

வணிகர் கழகத் தலைவர் எஸ்.ஜெயசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் வணிகர் கழகத்தின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (ம-7)

# செயலிழந்த கேபிள் தொலைபேசி இணைப்புகள் திருத்தப்படுகின்றன

வடமராட்சி, மே 28

கரவெட்டிப் பிரதேசத்தின் ஒரு பகுதியில் செயலிழந்த 360 கேபிள் தொலைபேசி இணைப்புகள் வேகமாகத் திருத்தப்பட்டு வருகின்றன.

நெல்லியடி நகரில் தளபாடக் கடை ஒன்று தீப்பற்றி எரிந்ததைத் தொடர்ந்து அந்தக் கடைக்கு அருகாக நெல்லியடி மேற்குப் பகுதிக்கு கரவெட்டியின் மற்றொரு பகுதிக்கு ஆயிரக் கணக்கான கேபிள் தொலைபேசி இணைப்புக்கான கம்பிகள் கொண்ட லைன்கள் உள்ளன. கடை தீப்பற்றியதால் எரிந்த லைன்களும் தீயின் தாக்கத்துக்குள்ளாகி எரிந்து விட்டன.

இந்தச் சம்பவத்தால் குறித்த பகுதியில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த 360 கேபிள் தொலைபேசி இணைப்புகள் செயலிழந்துபோயின.

செயலிழந்த தொலைபேசி இணைப்புக்களைச் சீரமைப்பதில் ரெலிகொம் நிறுவனத்தின் பணியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதுவரை செயலிழந்த தொலைபேசிகளில் அரைவாசிக்கு மேற்பட்ட எண்ணிக்கையான கேபிள் தொலைபேசிகள் திருத்தியமைக்கப்பட்டுச் செயற்படத் தொடங்கியுள்ளன.

எஞ்சியவற்றின் திருத்த வேலைகள் இன்று திங்கட்கிழமை அல்லது நாளை செவ்வாய்க்கிழமைக்குள் திருத்தியமைக்கப்பட்டு தொலைபேசிகளின் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-8)

## திரைப்படக் காட்சி




ஆஸ்திரேலியாவின் புகழ் பெற்ற நகைச்சுவைத் திரைப்படமான "பிறன் நியுஏ டயி'' நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலைய மண்டபத்தில் காண்பிக்கப்பட உள்ளது.

கொழும்பில் உள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இலவசமாகக் காண்பிக்கப்படும் ஒன்றரை மணிநேர இந்தத் திரைப்படம் அந்த நாட்டின் சுதேச வாழ்க்கை முறையைப் பிரதிபலிப்பதாகும்.

2010 ஆம் ஆண்டில் சர்வ தேச விருதுபெற்ற ''பிறான் நியுஏ டயி'' தெருக்கூத்து வடிவத்தில் அமைந்துள்ளது. (அ)



*சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் சு.பத்திசிகாமணியின் 'சுவடிகள்' நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் நகரசபைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை தூது சஞ்சிகையின் ஆசிரியரும் எழுத்தாளருமான அருட்பணி நீ.எஸ்.யோசுவா அடிகளும் ஆய்வுரையை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளையும் நிகழ்த்தினர். நூலின் முதற்பிரதியை நகரசபைத் தலைவர் சி.தேவசகாயம்பிள்ளை வெளியிட அகில இலங்கை இந்து குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ச.பா.வாசுதேவன் குருக்கள் பெற்றுக் கொண்டார். (ம-9)*

# நெல்லியடி வர்த்தகருக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை

வடமராட்சி, மே 28

நெல்லியடி நகரில் மின் ஒழுக்கால் தளபாடக் கடை ஒன்று கடந்த வாரம் முற்றாக எரிந்து நாசமானதைத் தொடர்ந்து இழப்புக்குள்ளான வர்த்தகர் மீண்டும் தொழிலை ஆரம்பிக்க தேவையான உதவிகளை வழங்க நெல்லியடி வர்த்தக சங்கம் முன் வந்துள்ளது.

சங்கத் தலைவர் எஸ். அகிலதாஸ் தலைமையில் நடைபெற்ற நெல்லியடி வர்த்தகர் சங்கக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடை தீப்பற்றி எரிந்ததால் அந்தக் கடை உரிமையாளரான வர்த்தகருக்கு 50 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டது.

எதிர்பாராத விதமாக இழப்பைச் சந்தித்துள்ள அந்த வர்த்தகர் மீண்டும் கடை ஒன்றைப் பெற்று வியாபாரத்தை ஆரம்பிக்க நகரில் மையப் பகுதியில் அவருக்கு கடை ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதோடு ஒவ்வொரு வர்த்தகர்களும் நிதி வழங்கி அந்த நிதியை அவர் முதலீடு செய்து மீண்டும் கடையை ஆரம்பித்துத் தொழிலை புரிய வேண்டிய உதவிகளை வழங்குவதென வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது.

எரிந்த கடைக் கட்டடம் பலமாகச் சேதமுற்றுள்ளதால் அந்த இடத்தில் புதிய கடை கட்டி முடிக்க நீண்ட காலம் பிடிக்கும் என்பதால் அதற்குப் பதிலாக நகர மையப்பகுதியில் இழப்பைச் சந்தித்துள்ள வர்த்தகருக்கு கடை ஒன்றை சங்கமே பெற்றுக் கொடுக்கவும் முன் வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

# 4 ஆயிரத்து 500 வீடுகளில் டெங்கு ஒழிப்புச் சோதனை

## உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வாரம்

யாழ்ப்பாணம், மே 28

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வாரம் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளுக்கு 4 ஆயிரத்து 500 வீடுகள் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

சுகாதார திணைக்களம் மற்றும் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் சுற்று நிருபத்துக்கு அமைவாக டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வீடுகள், கடைகள், பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பொது மருத்துவ மாதுகள், சுகாதாரத் தொண்டர்கள், பொலிஸார் இணைந்து வீடு வீடாகச் சென்று இந்தச் சோதனைகளை மேற்கொண்டனர்.

> இந்த நடவடிக்கையின்போது ஆயிரத்து 126 வீடுகள் டெங்கு நோய் பரப்பக் கூடிய நிலையில் நீர் தேங்கி காணப்பட்டமை இனங்காணப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது ஆயிரத்து 126 வீடுகள் டெங்கு நோய் பரப்பக் கூடிய நிலையில் நீர் தேங்கி காணப்பட்டமை இனங்காணப்பட்டது. இதனையடுத்து அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் அந்த நீர்த் தேங்கும் இடங்களும் இல்லாது செய்யப்பட்டன.

நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட 21 வீடுகளில் 18 வீடுகள் எச்சரிக்கை செய்யப்பட்ட நிலையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

3 வீடுகள் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தவறிய நிலையில் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நடவடிக்கையில் கிராம மட்ட அலுவலர்கள் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்காத போதிலும் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் பொது மருத்துவ மாதுக்களும் மும் [illegible] பிடத்தக்கது. (ம-86)

## காசநோய் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், மே 28

தீவுப் பகுதி மற்றும் வலி. வடக்கு பகுதிகளில் காசநோய்க்கான விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று மாவட்டக் காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் எஸ்.யமுனாநந்தா தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் காசநோயின் தாக்கம் பரவலாகக் காணப்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம் என்று அவர் தெரிவித்தார். (ம-17)

# மாடு களவாடும் சம்பவங்கள் அரியாலைப் பகுதியல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 28

மாடுகள் களவாடப்படும் சம்பவங்கள் அரியாலை பகுதியில் அதிகரித்துள்ளதாக அந்தப் பகுதியைச் சேர்ந்தோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாடுகள் களவு போவது தொடர்பில் அங்குள்ள பாதுகாப்புக் குழுவினர் சம்பந்தப்பட்டவர்களைப் பிடித்து நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்தாலும் கூட இரண்டொரு தினங்களுள் அவர்கள் திரும்பவும் வந்து மாட்டுக் களவில் ஈடுபடுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்தப் பகுதியில் இடம்பெறும் குற்றச் சம்பவங்கள் தொடர்பாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் எடுத்துக் கூறப்படும் போதெல்லாம் பொலிஸார் அந்தப் பகுதிகளில் தமது கடமைகளினூடாக எதிர்காலத்தில் குற்றச் செயல்கள் இடம்பெறுவது குறித்து கண்காணிப்பார்கள் எனக் கூறப்படுகிறது.

எனினும் பொலிஸாரின் நடவடிக்கைகள் இந்தப் பகுதிகளில் இல்லை எனவும் மக்கள் கூறுகிறார்கள். (ம-7)

## நிகழ்வுகள் இன்று

### இறுவட்டு வெளியீடு

இணுவில் கந்தசுவாமி ஆலய பெருமஞ்சநாயகனே இறுவட்டு வெளியீட்டு விழா இரவு 8 மணிக்கு இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது. வெளியீட்டுரையை ஆசிரியர் மகாலிங்கசிவம் நிகழ்த்துவார்.

### நூல் வெளியீடு

திருமதி உதயலதா நவதீசனின் கல்விப் பொதுத் தராதர உயர்தர தமிழ் இலக்கண நூலான 'ஐநூறு பல்தேர்வு வினா விடைகளும் சுருக்க வினா விடைகளும்' எனும் நூலின் வெளியீட்டு விழா பிற்பகல் ஒரு மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் சிவசம்பு மண்டபத்தில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆசிரியர், ஊழியர், நலன்புரி சங்கத் தலைவர் ந.செல்வராசா தலைமையிலே நடைபெறவுள்ளது. வெளியீட்டுரையை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.இராஜேந்திரன் நிகழ்த்த முதற்பிரதிகளை யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி பெற்றுக் கொள்வார். (ம-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை மீறல்களில் படையினரா? அமெரிக்காவிடம் சீறுகிறது இலங்கை

01 எனவும் இராணுவம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்களுக்கும் படையினருக்கும் தொடர்பு இல்லை எனவும் அவ்வாறு தொடர்பு இருந்தால் ஆதாரங்களை அமெரிக்கா சமர்ப்பிக்கலாம் எனவும் இலங்கை சவால் விட்டுள்ளது.

அண்மையில் வன்னிப் பகுதியில் கொலை செய்யப்பட்ட கனேடிய பிரஜையை படையினரே கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. எனினும், இறுதியில் கொலையாளிகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறான படையினர் மீதான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களுக்கு இந்தக் கைது சிறந்த பதிலாக அமைந்துள்ளது என்றும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அமெரிக்காவின் இந்த அறிக்கையையே தற்போது இலங்கை முழுமையாக நிராகரித்துள்ளது. (ங)

## பள்ளிவாசல் அகற்றப்படாது

01 பதியுதீனிடம் உறுதியளித்துள்ளார்.

தெஹிவளை குர்ஆன் மத்ரஸா விவகாரம் தொடர்பில் அமைச்சர் றிஷாத் பதியுதீனுடன் நேற்று முன்தினம் தொடர்புகொண்ட பாதுகாப்புச் செயலாளர் மேற்படி உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

குர்ஆன் மத்ரஸா பதிவு செய்யப்பட்டு சுமார் 15 வருடங்களுக்கு மேலாக தற்போதுள்ள இடத்தில் செயற்பட்டு வருவதை இதன்போது பாதுகாப்பு செயலாளரிடம் சுட்டிக்காட்டிய அமைச்சர் றிஷாத் பதியுதீன், மத்ரஸாவின் பாதுகாப்பு குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

தொடர்ச்சியாக இஸ்லாமிய மத ஸ்தாபனங்கள் மீதான தாக்குதல்கள் இடம்பெறுவது தொடர்பிலும் சுட்டிக்காட்டிய அமைச்சர் றிஷாத் பதியுதீன் தனது கவலையையும், வேதனையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

முஸ்லிம்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இது தொடர்பில் உரிய விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் பாதுகாப்புச் செயலாளர், அமைச்சர் றிஷாத் பதியுதீனிடம் உறுதியளித்துள்ளார்.

அதேவேளை, அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெஹிவளை - கல்கிஸை மேயருடன் நேற்று தொடர்புகொண்டு, குர்ஆன் மத்ரஸா தொடர்பில் நீண்ட நேரம் உரையாடியுள்ளார். (ங)

## எட்டு வயதுப் பாலகி மீது பாலியல் துஷ்பிரயோகம்

01 வயது இளைஞர் ஒருவர் சிறுமியை கடந்த 2 வருடகால மாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கி வந்துள்ளார். எனினும் இந்த விடயம் எவருக்கும் தெரியாமலே இருந்தது.

எனினும் நேற்றுமுன்தினம் சிறுமி பாடசாலையில் திடீரென மயக்கமடைந்து விழுந்தாள். இது தொடர்பாக ஆசிரியர்கள் சிறுமியிடம் விசாரித்தபோதே குறித்த இளைஞரால் தான் பாலியல் தொந்தரவுக்கு ஆளாகி வரும் விடயத்தை சிறுமி போட்டுடைத்தாள். இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதன்பின்னர் துரித நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நாவற்குழியைச் சேர்ந்த சந்தேக நபரைக் கைது செய்தனர்.

இவர் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவரை விசாரணைக்கு உட்படுத்திய நீதிவான் குறித்த சந்தேகநபரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ங-15-9)

## வயோதிப மாது சடலமாக மீட்பு

01 வித்தனர். இச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

அச்சுவேலிப் பகுதியில் உள்ள வீட்டில் தனியாக வசித்து வந்த வயோதிப மாது மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முகத்தில் துணியால் இறுக்கமாக மூடப்பட்ட நிலையில் சடலம் கிடக்கக் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலை நீண்டநேரமாகியும் நித்திரை விட்டு எழுந்து வெளியே வராததை அவதானித்த அயலவர்கள் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது இவர் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார். இவரின்வீட்டில்உள்ளஅலுமாரிகள் மற்றும் உடுபுடவைகள் கிண்டிக் கிளறப்பட்ட நிலையில் காணப்பட்டிருந்தன.

இந்நிலையில் இது தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த அச்சுவேலிப் பொலிஸாரும் மல்லாகம் நீதிமன்ற நீதிவான் கே.ஜீவராணியும் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினர்.

சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது அச்சுவேலியில் வசித்து வருகின்ற திருமதி திருநாவுக்கரசு அன்னமுத்து (வயது-77) என்பவராவார். இது கொலையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். (ங-3-11-15)

## பொன்சேகா விடுதலை பற்றி நான் பதிலளிக்க முடியாது

01 யில் சரத் பொன்சேகா தொடர்பாக பிரெட்ரிகா ஜோன்ஸ் எழுப்பிய கேள்விகளும், அதற்கு கோத்தபாய ராஜபக்ஷ வழங்கிய சீற்றமான பதில்களும் வருமாறு-

கேள்வி - சரத் பொன்சேகாவுக்கு ஜனாதிபதி ஏன் பொது மன்னிப்பு வழங்கினார்? ஏன் இப்போது?

பதில் - சரத் பொன்சேகா குறித்த எதற்கும் பதில் சொல்ல விரும்பவில்லை. சரத் பொன்சேகா பற்றிய கேள்விகள் வேண்டாம்.

பி.பி.ஸி. கூட என்னிடம் இதுபற்றிக் கேட்டது, ஆனாலும் எதைப் பற்றியும் எனக்குத் தெரியாது என்று தான் அவர்களுக்கும் பதில் அளித்தேன். பொன்சேகாவுக்கு மன்னிப்பு அளித்த விடயம் என்னுடன் தொடர்பு பட்டதல்ல.

கேள்வி - அனைத்துலக அழுத்தங்களால் தான் இது நடந்ததாக, பலர் நம்புகிறார்கள், குறிப்பாக வொசிங்டனின் அழுத்தமே இதற்குக் காரணமா?

பதில்- எனக்குத் தெரியாது. ஜனாபதிபதியிடம் இது பற்றிக் கேளுங்கள்- எனக்குத் தெரியாது. இது என்னுடன் தொடர்புடைய விடயம் அல்ல. அதுபற்றி என்னால் கருத்துக்கூற முடியாது.ஏனென்றால்,அதுபற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது.- எனக்கு அதில் அக்கறையில்லை. எனக்கு புனர்வாழ்வு, மீள்குடியமர்வு, பாதுகாப்பு போன்ற பரப்புகளில் கவனம் செலுத்த நிறைய வேலைகள் உள்ளன

கேள்வி - ஆனால், இப்போது சரத் பொன்சேகாவுக்கு ஏன் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது என்று எல்லோரும் கேட்கிறார்களே?

பதில் - ஒருவருமே இந்தக் கேள்விகளை எழுப்பவில்லை. ஊடகங்கள் மட்டும் தான் எழுப்புகின்றன.

கேள்வி - நல்லது, அவர் உங்களின் முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்தவர். சிறையில் அடைக்கப்பட்டவர்?

பதில் - எனக்குத் தெரியாது. நீங்கள் ஜனாதிபதியிடமே கேளுங்கள். பதில் அளிக்க நான் விரும்பவில்லை. இந்த விவகாரம் தொடர்பாக நான் எதையும் அறியவில்லை. எனக்கு செய்ய வேண்டிய வேலைகள் நிறைய உள்ளன. வேலைப்பளுவால் நான் உறங்குவது கூட இல்லை. போர் நடைபெற்ற இடங்களில் கண்ணிவெடி அகற்றப்படுகிறது. மீள்குடியமர்வு நடக்கிறது. அங்கே பல மாற்றங்களை நாம் செய்ய வேண்டியுள்ளது. போருக்குப் பின்னர் இயல்புநிலையை உருவாக்க நாம் முயற்சிக்கிறோம்.

கேள்வி - சரி, உங்களுடன் தொடர்புடைய ஒரு விடயம் குறித்து நான் கேள்வி எழுப்ப முடியுமா? ஜனாதிபதித் தேர்தல் நடந்தவுடன் சரத் பொன்சேகாவை கைது செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்தீர்கள் என்பது சரியா? பொதுமன்னிப்பு வழங்குவதற்கு ஆதரவளித்தீர்களா? ஏன்?

பதில் - எனக்குத் தெரியாது... எனக்குத் தெரியாது. நான் கருத்துக் கூற விரும்பவில்லை.

இது பற்றியே தொடர்ந்தும் கேட்பீர்களானால் நான் பதில் அளிக்காமல் செவ்வியை நிறுத்தி விடுவேன். நாம் முன்னே செல்ல வேண்டியுள்ளது.... நான் ஒரு அதிகாரி மட்டுமே. ஒரு செயலர்.

இவ்வாறு கூறியுள்ளார் கோத்தபாய ராஜபக்ஷ. (ங)

## இலங்கைக்குள் நுழைய ஐ.நா.குழுவுக்குத் தடை

01 கடந்த 14 ஆம் திகதி இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித் துள்ளார்.

இந்தக் குழுவின் பயணம் வரும் ஜூலை மாதம் இடம்பெறும் என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், ஜெனிவாத் தீர்மானத்தை இலங்கை ஏற்க வில்லை என்பதால், இந்தக் குழுவை நாட்டுக்குள் அனும திப்பதில்லை என்ற நிலைப்பாட்டை இலங்கை அரசு எடுத்துள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. தீர்மானத்தின் அடிப்படையில், எந்தவொரு ஐ.நா. அதிகாரிகளின் பயணத்தையும் இலங்கை அரசு வரவேற்காது என்று அரச உயர்மட்டங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் இலங்கைக்கான பயணம் கேள்விக்குறியாக மாறியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ங)

# சர்வதேச ஆதரவுடன் உரிமைப் போராட்டம்

01 ''தமிழர்கள் தொடர்பிலான அனைத்துலக சமூகத்தின் ஈடுபாடு, இலங்கை அரசு மீது அவை கொண்டுவரும் அழுத்தங்கள் என்பன மக்களுக்கான பணிகளில் எம்மையும் கலந்திணைக்கும் நிர்ப்பந்தத்தை இலங்கை அரசுக்கு ஏற்படுத்தும். தவிர்க்க முடியாத கட்டாயமாக எமது மக்களின் பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் எமது ஒத்துழைப்பைத் தேடிவரும் சூழல் இலங்கை அரசுக்கு ஏற்படும். எமது மக்களுக்கு சுபீட்சமான ஒரு வாழ்வை விரைந்து ஏற்படுத்திவிட வேண்டும் என எமது உள்ளுணர்வு தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருக்கின்றது. அதற்கான காலம் கனிந்துவரும் என்றே நாம் நம்புகின்றோம்.

சிறுகச் சிறுக, மெல்ல மெல்ல, நுட்பமான நகர்வுகள் ஊடாக இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட அனைத் துலக சமூகத்துடன் நாம் கட்டியெழுப்பிவரும் புரிந்துணர்வும் நல்லுறவும் எமது இனத்திற்கு தீர்க்கமான ஒரு பலத்தைச் சேர்த்து வருகின்றன. இந்தப் பலத்தை வைத்து, எமது இனத்தின் இறையாண்மைப் பிரச்சினைக்கு உருப்படியான ஒரு நிரந்தர அரசியற் தீர்வைப் பெற்றுவிடும் சாத்தியம் உண்டு என்றே நாம் உறுதியாக நம்புகின்றோம்.'' என்றும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

*(முழுமையான உரை உள்ளே)*
*(ங-சி-30)*

## இலங்கை தூதரகங்களுக்கு வாய்ப்பூட்டுப் போடும் அரசு

ஐரோப்பாவில் உள்ள இலங்கையின் அனைத்துத் தூதரகங்களுக்கும், குறிப்பாக ஜெனிவாவில் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பணியகத்துக்கும் அனுப்புவதற்கான இந்தக் கடிதம் தற்போது இலங்கை வெளிவிவகார அமைச்சினால் வரையப்பட்டு வருகிறது என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து - அரசியல் செல்வாக்கில் பதவிகளைப் பெற்ற இலங்கை இராஜதந்திரிகள் பலரும் கடுமையான கருத்துகளை வெளியிட்டிருந்தனர்.

இதனால் சக்திவாய்ந்த நாடுகளுடனான உறவுகள் பாதிக்கப்பட்டு, நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாக இலங்கை இப்போது உணர்கிறது.

இதையடுத்தே, வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களை மௌனமாக இருக்கும்படி இலங்கை வெளிவிவகார அமைச்சு சுற்றறிக்கை அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

## றிஷாட்டுக்கு எதிராக திரண்டது மன்னார்

01 லில் நேற்றுக்காலை மன்னார் புனித செபஸ்தியார் பேராலய முன்றிலில் குழுமினர்.

பின்னர் மத ஆராதனைகளுடன் ஆரம்பமான இந்த கண்டன நிகழ்வில் அமைச்சர் றிஷாட் நாடாளுமன்றில் தெரிவித்த ஆயருக்கு எதிரான கருத்துகள் அருட்தந்தையர்களால் வந்திருந்த மக்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. பல்வேறு அமைப்புகளாலும் கண்டன அறிக்கைகள் வாசிக்கப்பட்டன. கண்டன நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள்,

'அமைச்சர் றிஷாட் பதியுதீனே, உனது அரசியல் அராஜகம் ஒழிக!'

'எமது நிலங்களை அபகரிக்காதே'

'உனது முகத்திரை கிழிக்கப்படும்'

'சதி வேலையால் நாம் சாயமாட்டோம்'

'சர்வமத ஒற்றுமையைச் சாகடிக்காதே'

என்பன போன்ற சுலோஅட்டைகளை ஏந்தியிருந்தனர்.

இந்த நிகழ்வுக்குப் பாதுகாப்பு வழங்கவென நூற்றுக்கணக்கான பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இதேவேளை நிகழ்வு ஆரம்பமான சில நிமிடங்களில் பேராலயப் பகுதியில் துண்டிக்கப்பட்ட மின்சாரம் நிகழ்வு முடிந்தபின்னரே மீண்டும் வழங்கப்பட்டது. அத்துடன் நிகழ்வில் கலந்து கொள்ளவென தூர இடங்களில் இருந்து வாகனங்களில் வந்த பொதுமக்கள் [illegible] சோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(ங-12)

## 'ஹைஏஸில்' பறந்து வந்தவர் தூக்கிச் சென்றார் பெண்ணை

01 சாலை வீதியில் அந்தப் பெண்ணின் ஸ்கூட்டி - பிளஸர் ரக மோட்டார் சைக்கிள் வீதியோரமாக சுமார் மூன்று மணி நேரம் அநாதரவாகக் கிடந்தது. மோட்டார் சைக்கிள் அருகில் பெண்ணின் பாதணிகளில் ஒன்று காணப்பட்டது.

தகவல் கிடைத்தவுடன் கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை நடத்தினர். பின்னர் மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் எடுத்துச் செல் லப்பட்டது.

இந்தச் சம்பவம் தனிப்பட்ட காரணத்துக்காக இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

[illegible] தொடர்பாக [illegible] தெரியவருவதாவது:

உரும்பிராய் கிழக்கு சென். மைக்கேல் தேவாலயத்தடியைச் சேர்ந்த செல்வராசா அர்ச்சனாம்பிகை (வயது -23) என்ற இந்தப் பெண் தனது தந்தையுடன் வீட்டில் இருந்து திரு நெல்வேலிப் பாற்பண்ணையில் உள்ள தேவாலயம் நோக்கி நேற்றுக் காலை சென்று கொண்டிருந்தார்.

கோண்டாவில் பழைய ஆணித் தொழிற்சாலை வீதி ஊடாகச் சென்றுகொண்டிருந்த வேளை அந்தப் பகுதி மயானம் ஒன்றுக்கு அருகில் ஹயஸ் வானில் காத்திருந்தவர்கள் திடீரென வழி மறித்துள்ளனர். மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டதும் வானிலிருந்து பாய்ந்து வந்து பெண்ணை இழுத்துச் சென்று வானில் ஏற்றிக் கொண்டு பறந்துவிட்டனர்.

மட்டக்களப்பு, ஆரையம்பதியைச் சேர்ந்த கிருஷ்ணா கோவிந்தராஜா என்ற இளைஞரே பெண்ணை வானில் பலவந்தமாக ஏற்றிச் சென்றார் என்று பெண்ணின் தந்தை பொலிஸாரிடம் தெரிவித்தார்.

குறித்த இளைஞரும் தனது மகளும் கொழும்பில் ஒன்றாகத் தங்கியிருந்தனர் என்றும். இருவரும் பதிவுத் திருமணம் செய்துள்ளனர் என்றும் பொலிஸ் விசாரணையில் தந்தை கூறியுள்ளார்.

இதேவேளை இவர்கள் இருவரிடையே தகராறு ஏற்பட்டு கொழும்பில் இருந்து வீட்டுக்கு (உரும்பிராய்க்கு) வந்துவிட்டார் என்றும் கூறப்பட்டது.

இந்த நிலையிலேயே குறித்த இளைஞர் நேற்று இந்தக் 'கடத்தலை' நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோதுமை மூடைகளைத் திருடிய எண்மர் கைது

யாழ்ப்பாணம், மே 28

யாழ். நகரில் இரவு வேளை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றிலிருந்து திருட்டுத்தனமாக 91 கோதுமை மா மூடைகளை எடுத்துச் சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 8 பேரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை விசாரணைக்கு உட்படுத்தியபோது கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து 89 மா மூடைகளை நேற்றுவரை மீட்டுள்ளதாக யாழ்ப்பாணக் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவு தெரிவித்தது.

மா மூடை திருட்டுச் சம்பவத்தில் சந்தேக நபர்கள் நான்கு பேர் நேரடியாகவும் ஏனைய நான்கு பேரும் வாகனம் வழங்கியமை, மூடைகளை ஏற்றி இறக்கியமை தொடர்பாகவும் சம்பந்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்புத் தெரிவித்தது.

திருகோணமலையிலிருந்து லொறி மூலம் எடுத்துவரப்பட்ட மா மூடைகள் யாழ்ப்பாணத்தில் விநியோகிப்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ். நகர் ஸ்ரான்லி வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அந்த வேளை லொறியின் பின் கதவை உடைத்து மா மூடைகள் திருடப்பட்டுள்ளன. இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் மூவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தனர். ஏனைய ஐந்து பேரும் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

(10-3)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி **வைரமுத்து இராசமணி**

தோற்றம் 04★11★1944 — மறைவு 28★04★2012

கடந்த (28.04.2012) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தாய் வைரமுத்து இராசமணியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், மதியபோசனமும் இன்று (28.05.2012) திங்கட்கிழமை நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

14, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(18624) (45.6.9)

# 2 வது பிறந்த நாள் வாழ்த்து

28.05.2012



இன்று (28.05.2012) திங்கட்கிழமை
கனடாவில் உள்ள தனது இல்லத்தில்
**கிஷோகுமார் சாலினி**
தம்பதியினரின்
செல்வப்புதல்வி **கி.சகிஷா**
தனது 2 வது பிறந்த நாளை வெகு விமர்சையாக
கொண்டாடுகின்றார். அவரை இந்நாளில்
சகல சௌபாக்கியங்களும்
பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்
அம்மப்பா , அம்மம்மா ,
மாமாமார் , சித்தி.

150, பாரப்பண்ணை வீதி,
திருநெல்வேலி


(c/386)

# 80 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இன்று [28.05.2012] 80 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும்

திருமதி இராசாத்திப்பிள்ளை
சிவராமகிருஷ்ணன்
(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலை)

**அவர்களை வாழ்த்துகின்றோம்**



80 அகவை உனக்கு... உன்னிடம் ஒரு வினா
நீ அழுகையோடு பிறந்தாயா ?
அழகோடு பிறந்தாயா ?
பெற்றால் தான் பிள்ளையா...
உன்னால் வடிவம் பெற்ற நாங்களும்
உன் பிள்ளைகளே
தன் சாதனைப் பட்டியலில்
உன் பிறப்பை முதன்மையாய்
குறித்து வைத்திருப்பான் பிரம்மன்...
பிறந்த தினத்துக்கு இறைவனிடம் போவோம்
உன் பிறந்த தினத்துக்கு மட்டும்
இறைவன் உன்னிடம் வருவான்
உன் நண்பர்களின் எண்ணிக்கையறிந்து
உன் மனச்சாட்சியும் கூட
பொறாமை கொள்ளும் நட்புக்கரசி நீ
பாரதி கண்ட புதுமைப்பெண்ணே
இனியும் உன் அரவணைப்பு
எமக்கு என்றும் தேவை
அன்பு காட்டுவதில் வள்ளல்!
அரவணைப்பில் அன்னையிவள்
அறிவுரை சொல்வதில் ஆசான் இவள்!
வாழ்க பல்லாண்டு வாழ்க வளமுடன்



HAPPY BIRTH DAY

வாழ்த்துவோர்:
சகோதரர்கள்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

செட்டியார் வளவு
சுன்னாகம்

(18518)(6-8-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிறுவன அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவு

முதலாம் பரிசு - 2368
இரண்டாம் பரிசு - 088
மூன்றாம் பரிசு - 2918

ஆறுதல் பரிசுகள்

1 202 2 2775 3 2740 4 1640 5 1447
6 1649 7 1642 8 2763 9 139 10 1953

பரிசில்கள் (30/05/2012) மாலை 4 மணிக்கு செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் வழங்கப்படும்.

இல 16/2, சீனியர் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். (18633)

தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி இலட்சுமிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

*(முன்னாள் கணித ஆசிரியை யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்)*

பத்திரகாளி கோயிலடி, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் நேற்று (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி சிவசுப்பிரமணியத்தின் (முன்னாள் கணித ஆசிரியர்-யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதி-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், வைத்திய கலாநிதி விசாகரன் (USA), கலாநிதி கிருபாகரன் (USA), பொறியியலாளர் சுதாகரன் (USA) ஆகியோரின் பாசமிகு தாயும், வைத்திய கலாநிதி ஸ்ரீதேவி (USA), கலாநிதி வித்தியா (USA), கலாநிதி மீரா (USA), ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் வள்ளியம்மை (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை), பொன்னையா (ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர், வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தவமணி, தனலக்சுமி, சிவபாதசுந்தரம், செல்வமணி ஆகியோரின் மைத்துனியும், பிறேமா, சுகானா, பிரியா, சிரேயா, லலிதா, லக்சுமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2012) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும். இறுதி அஞ்சலி நிகழ்வு சுழிபுரத்தில் அன்றைய தினம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயிலடி,
சுழிபுரம்.
கனடா தொ.பே.: 0015148559028 (18632)

தகவல்:
திருமதி தனலக்சுமி மகாலிங்கம் (மைத்துனி).

## சடலம் மீட்பு

அளவெட்டிப் பகுதியிலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் கிருஸ்ணசாமி அருணகிரிராஜா (வயது-59) என்பவராவார். இது தொடர்பாக தெல்லிப்பழைப் பொலிஸாருடன் நேற்றிரவு தொடர்பு கொண்டபோதும் தகவலெதையும் பெறமுடியவில்லை. (10-15)

## கார் விற்பனைக்கு

300-XXXX இலக்கமுடைய TOYATA-Starlet Auto Gear, Power Streering கார் விற்பனைக்குண்டு. (18631)

தொடர்பு இல.: 0777453807

## வீடு வாடகைக்கு

யாழ். நல்லூர் பகுதியில், பருத்தித்துறை வீதியில், மாநகர சபைக்கு முன்பாக, மூன்று படுக்கையறைகள் (குளியலறை வசதிகளுடன்) விசாலமான வரவேற்பறை கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. வெளிநாட்டு நிறுவனங்களும் அலுவலகப் பாவனைக்கும் விரும்பத்தக்கது. தொடர்பு: 0777453807 (18630)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி இராசதுரை ஔவசியர் நாகரத்தினம்

(நந்தாவில் கொக்குவில்)

எமது கழகமும் சனசமூக நிலையமும் இயங்குவதற்கு 1976ஆம் 77ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமது கட்டடத்தைத் தந்துதவிய திருமதி இராசதுரை நாகரத்தினம் அவர்கள் நேற்று 27.05.2012 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார் என்ற செய்தி கேட்டு பெரும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/392)

சம்பியன் லேன்,
கொக்குவில்.

வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிருஸ்ணன் தவமணி



எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவிலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணன் தவமணி நேற்று (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணனின் அன்பு மனைவியும் ரேணுகா, பிரகாஷ், பிரசாத், ரேகா ஆகியோரின் பாசமிகு தாயும் நிதிதாவின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2012) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பளையில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மலையான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வண்ணாங்கேணி, (வடக்கு) பளை. (18634)

தகவல்:
குடும்பத்தினர்.

## கதிரவேலு அரியரத்தினம்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு அரியரத்தினம் கடந்த (25.05.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான கதிரவேலு-மகேஸ்வரி தம்பதியாரின் அன்புமகனும் காலம் சென்றவர்களான பொன்னையா-நாகம்மா தம்பதியாரின் அன்பு மருமகனும் சோதிமணியின் அன்புக் கணவரும் தர்சினி, சுகந்தினி, நந்தினி (UK), நிமலசன், கோமதி (UK), ராகினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சீவரத்தினம் (கனடா) ஜெயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் முருகதாஸ் (ஆஸ்திரேலியா) ரூபவதனன், சிவகுமார் (UK) ஆகியோரின் பாசமிகு மாமனும் சாருயா (UK) நஜித் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.05.2012) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை
சுன்னாகம் (18629)

தகவல்,
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## தங்கவேல் தங்கநேசம்



கனகம்புளியடி, சரசாலை தெற்கை பிறப்பிடமாகவும் செம்பாடு துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் தங்கநேசம் நேற்று (27.05.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல புகையிலை வர்த்தகர் சின்னத்தம்பி தங்கவேலின் அன்பு மனைவியும் தங்கரூபி, றங்கரூபன் (லண்டன்), வதனரூபன் (கிராம அலுவலர்), வதனரூபி (லண்டன்), ஞானரூபி (ஜேர்மன்), ஞானரூபன் (லண்டன்), காலஞ்சென்ற ராதாமோகன் மற்றும் மோகனரூபி ஆகியோரின் அன்புத் தாயும் அருட்செல்வம், காலஞ்சென்ற தயாழினி மற்றும் பஞ்சலட்சுமி, மனோறஞ்சிதம், ஜெயராஜலிங்கம், கணேசலிங்கம், சுதர்சினி, சிவசங்கர் ஆகியோரின் மாமியும் அபிராமி, அருள்நிலா, மோகனரூபன், அஸ்வினி, துவாரகா, றமணன், றதீசா, மாதுமை, உமைபாலன், வைதேகி, ஜெயவண்ணன், ஜெனனி, ஜெனித்தா, யாதவன், சுயந்தன், ஜஸ்வினி, ராகினி, மயூரி, தமிழினி, றஜீவன், சாஜித்யா, சாரங்கன், றாகவன், ராகவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பாடு, துன்னாலை. (சி/393)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## திருமதி நீலதாட்சியம்மா இரத்தினசிங்கம்



துன்னாலை வடக்கு கரவெட்டி வல்லியானந்த பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீலதாட்சியம்மா இரத்தினசிங்கம் நேற்றுமுன்தினம் (26.05.2012) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற சிங்கநாயகம் இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும், இராமநாதன் (UK), கணேசானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜினி தேவி, சுசிலா (UK), புஸ்பராணி (UK), செல்வராணி (UK), உதயராசா (ஜேர்மனி), கௌரி (UK) ஆகியோரின் அன்புத் தாயும்,சிவானந்த விக்னேஸ்வரன் (இலங்கை வங்கி-வவுனியா), நகுலேஸ்வரன், கமலேஸ் அன்ரனி, திருஞானசோதி, லோகா ஆகியோரின் அன்பு மாமியும், முகுந்தன் தர்சினி, ஜெயவர்மன், ஜெயப்பிரகாஷ், ஜெயரமணன், அஜந்தன், அஜந்தினி, புவிந்தன், சஜந்தன், அபிராமி, ரமிக்கா, லவன், தனுசன், தனுசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சங்கவி, லக்ஷ்மன், சொ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவர்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.05.2012) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துன்னாலை தியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வல்லியானந்தம்
துன்னாலை வடக்கு
கரவெட்டி (C/390)

தகவல்:
குடும்பத்தினர்

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 01 Kg க்கு UK 645 /= Germany 735/= France 775/=
கடலுணவு வகைகள், மருந்துப்பொருட்கள், குறிப்பிட்ட சில பழவகைகளையும் அனுப்பிக்கொள்ளலாம்.
கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.
சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.
குறிப்பு : சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினை பெற்றுக்கொள்ளலாம்.
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ் T.P : 021 222 6113
Arrul Global Express
International Courier & Cargo Service
(C/388)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிரிட்டிஷ் தூதுவரின் கருத்தால் அரசுக்கு ஏற்பட்டுள்ள கிலேசம்

இலங்கை அரசுக்கு எதிராக உலக அளவிலும் சரி நாடாளுமன்றத்திலும் சரி மேடைப் பரப்புரைகளின் போதும் சரி எவரும் ஏதும் சொல்லிவிடக்கூடாது. உடனடியாக எதிர்ப்புக் குரல் பறக்கும், மறுப்பு அறிக்கை வெளிவரும். அதுமட்டுமல்ல, ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு உலக சதி நடக்கிறது என்றும் வியாக்கியானம் செய்யப்படும்.

அவ்வாறுதான் அமெரிக்க ராஜாங்க அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கைக்கு இலங்கை அரசின் சார்பில் மறுப்பும் எதிர் குற்றச்சாட்டும் விடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் தமது இணையத்தளத்தில் வெளியிட்ட ஒரு செய்தியும் அரசை உலுப்பிவிட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் தூதுவர் வெளியிட்டுள்ள கருத்தானது அவர் மிகக் கவனமாகவே அதனைச் செய்துள்ளார் என்பதை புலப்படுத்துகின்றது.

பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் ரன்கின் வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என்று வெளியிட்டுள்ள கருத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது வெற்றி விழா உரையில் விடுதலைப் புலிகளுக்கு சார்பான புலம்பெயர்ந்தவர்களின் செயற்பாடுகள் தொடரும் வரை வடக்கு, கிழக்கிலிருந்து படையினரை குறைத்துக் கொள்ளப் போவதில்லை என்று அறிவித்திருந்ததைச் சுட்டிக்காட்டி மேலும் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் இருக்கிறார்கள் என்கின்ற போதும் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்பது நல்ல விடயம். அவர்கள் இப்போதும் ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பாகவே இருக்கிறார்கள்.

மேலும் படையினர் தொடர்ந்தும் குடிசார் நிர்வாகக் கடமைகளில் ஈடுபட்டிருக்கவில்லை என்று ஜனாதிபதி கூறியிருப்பதை வரவேற்றுள்ள தூதுவர், "அவ்வாறுதான் நிலைமை இருக்க வேண்டும். நாங்கள் நிலைமைகளைக் கண்காணித்து வருகின்றோம். ஏனென்றால் இந்த விடயத்தில் அந்தப் பகுதியில் வாழும் மக்களும் தம் கருத்தை சொல்ல வாய்ப்பிருக்க வேண்டும். சாதாரண குடிசார் நிர்வாகமானது கூடியவரை அதிகபட்ச அளவில் நிலைநாட்டப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் தூதுவரின் கருத்தின்படி பார்த்தால் இராணுவ பிரசன்னம் பற்றி அந்தப் பிரதேச மக்களின் கருத்து ஒருபோதும் அறியப்பட்டது கிடையாது. ஆங்காங்கே தெரிவு செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளிலும் படையினர் தலையிட்டுள்ள தகவல்கள் வந்திருக்கின்றன. சாதாரணமாக கஷ்டத்திலுள்ள மக்களுக்கு நிவாரணமாகப் பொருள்களை வழங்குவதற்கும் கூட இராணுவத்தினர் அனுமதிக்காத செய்திகள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. அவ்வளவு ஏன் வடக்கு, கிழக்கில் இராணுவம் இருப்பது குறித்து அவ்வப்போது மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம் கருத்துக்களை வெளியிட்டு வந்துள்ளார்கள். இவை அனைத்துக்கும் மேலாக மிக அண்மையில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் மிக விளக்கமாக இந்தப் பகுதிகளில் உள்ள நிலைமைகளை எடுத்துக் கூறியிருந்தார். உண்மையில் அரசு இந்த மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பதாய் இருந்தால் தம்மை ஆதரித்து நிற்கும் உதிரிக் கட்சிகளுக்கு மேலாக தமிழ் மக்களின் பெரும் ஆதரவைப் பெற்றுள்ள கட்சிகளின் பிரதிநிதிகளை அழைத்து நிலைமைகளை ஆராய்ந்து இருக்கலாம். ஒரு ஜனநாயக நாட்டில் அதுவே வரவேற்கத்தக்க நடைமுறையாக இருந்திருக்கும். அதன் மீது நம்பகமான செயற்பாட்டையும் வெளிப்படுத்தியிருக்கலாம்.

நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதையோ அதற்காக இராணுவத்தைப் பயன்படுத்துவதையோ யார் ஐயா மறுக்கிறார்கள்? மக்கள் வாழ்வில் தலையிடாதீர்கள், அவர்களின் காணிகளில் குடியிருக்காதீர்கள், உயர் பாதுகாப்பு வலயங்களை அப்புறப்படுத்திக் கொள்ளுங்கள்; கோயில்களில் புத்தர் சிலைகளை வைக்காதீர்கள் என்று தானே கேட்கிறார்கள்.

இந்தக் கோரிக்கைகள் இன்னும் வலுப்பெற்று விடும் என்பதற்காக வடக்கில் மாகாண சபைத் தேர்தலைக் கூட நடத்தாமல் இருக்கிறீர்கள்.

இந்த நிலைமையில் பிரிட்டிஷ் தூதுவர் வெளியிட்டுள்ள கருத்துக் குறித்து கிலேசம் அடைந்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு அந்தக் கருத்துக்கள் பற்றி ஆராய்ந்து வருகிறது என்றும் தூதுவர் மீது தேவை ஏற்படின் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது.

வெளிநாட்டு தூதுவர்கள் அரசின் உள் விவகாரங்களில் தலையிட்டால் அல்லது அவை தொடர்பாகக் கருத்து வெளியிட்டால் அவர்கள் விரும்பப்படாத நபர்கள் என்று அறிவிக்கப்பட்டு வெளியேற்றப்படுவதுண்டு. அவ்வாறுதான் ஜனாதிபதி பிரேமதாச பதவியில் இருந்தபோது அப்போதைய பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளேட்ஸ்ரோன் உள்ளூர் தேர்தல் சாவடிகளுக்கு பார்வையாளராகச் சென்றிருந்ததையடுத்து வேண்டப்படாதவர் என்று அறிவித்து வெளியேற்றப்பட்டார்.

ஆனால் ரன்கின் விடயத்தில் அவ்வாறு நடப்பது சாத்தியமில்லை. ஏனென்றால் பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் சிம்மாசனம் ஏறிய 60 ஆவது வருடாந்த விழாவில் கலந்துகொள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைக்கப்பட்டுள்ள நிலையில் அங்கு என்னதான் புலம்பெயர் மக்களால் எதிர்ப்புகளும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டாலும் போய்க் கலந்துகொள்வதற்கு ஆயத்தங்கள் நடைபெறும் வேளையில் பிரிட்டிஷ் தூதுவர் மீது நடவடிக்கை எடுத்து இலங்கை அரசு சிக்கலில் மாட்டிக் கொள்ள விரும்பாது என்று நம்பலாம். எதுவானாலும் பிரிட்டிஷ் தூதுவர் கூறியுள்ள விடயம் பற்றி அரசு அக்கறை எடுத்துக் கொள்ளுமா என்பதுதான் கேள்விக்குரிய விடயம்.

# மீள்குடியமர்ந்த பகுதிகளுக்கு போக்குவரத்து சேவைகள்

### கோரிக்கை விடுத்தால் பரிசீலிக்கப்படும் என்கிறார் போக்குவரத்து சபையின் வடபிராந்திய பிரதம முகாமையாளர்

யாழ்ப்பாணம்,மே 28

மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் இடம்பெற வேண்டுகோள் விடுத்தால் அந்த விடயம் தொடர்பாக பரிசீலிக்கப் படும் என்று போக்குவரத்து சபையின் வடபிராந்திய சேவையின் பிரதம முகாமையாளர் எஸ்.அஸ்ஹர் தெரிவித்துள்ளார்.

வட பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள பகுதிகள் சிலவற்றில் இன்னமும் பஸ் சேவைகள் இடம்பெறவில்லை என பொதுமக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கேட்ட போதே வடபிராந்திய பிரதம முகாமையாளர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சேவையில் ஈடுபடுத்துவதற்கு புதிய பஸ்கள் பெறப்பட்டு வருகின்றன. மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் மீளவும் பஸ் சேவைகளை ஆரம்பித்துள்ளோம். பஸ் பற்றாக்குறை காரணமாக சில பகுதிகளில் தேவைக்குப் போதுமான அளவில் சேவைகளை வழங்க முடியாதுள்ளது.

எனினும் தற்போதுள்ள வளங்களைக் கொண்டு பொதுமக்களுக்கு சேவை வழங்க நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

பஸ் சேவை வேண்டும் என்று பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டால் அதனை நிறைவேற்றுவது தொடர்பில் பரிசீலனை செய்யப்படும்.

மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் பஸ்சேவை நடத்துவதாயின் அங்கு போதுமான அளவு பயணிகள் இருக்க வேண்டும். பயணிகள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தால் சேவை நடத்துவது சபைக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும். சபைக்கு இலாபம் கிடைக்காது போனாலும் பரவாயில்லை நஷ்டம் ஏற்படக்கூடாது. நஷ்டம் ஏற்படாத பகுதிகளில் பஸ் சேவை நடத்துவதற்கு நாம் ஆர்வமாக இருக்கிறோம்.

பொதுமக்கள், பாடசாலை சமூகம், பொது அமைப்புகள் இவ்வாறு வேண்டுகோளை விடுக்க முடியும். எமக்கு கிடைக்கும் வேண்டுகோள்களுக்கு ஏற்பவே நாம் நடவடிக்கை எடுக்க முடியும்.- என்றார். (ம-3)

## வடமராட்சியில் 16 மாதங்களில் 2,917 பேரை நாய், பூனை கடித்தன

வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த 16 மாதங்களில் மட்டும் இரண்டாயிரத்து 917 பேர் நாய் மற்றும் பூனை ஆகியவற்றின் கடிக்கு ஆளாகிய நிலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றவர்கள் தொடர்பாக மேலும் தெரியவந்துள்ளதாவது:-

வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த 16 மாதங்களில் மட்டும் நாய் மற்றும் பூனைகள் கடிக்கு இலக்கானவர்களும், வீதி விபத்துக்கள் மற்றும் தற்கொலை முயற்சி போன்ற காரணங்களினாலே அதிக எண்ணிக்கையானோர் சிகிச்சை பெற்றுள்ளனர். இதுவரை சிகிச்சை பெற்றவர்களில் நாய், பூனைக் கடிக்கு இலக்கானவர்கள் இரண்டாயிரத்து 917 பேரும் விபரீத முயற்சிகளால் 889 பேரும் வீதி விபத்துகளுக்கு உள்ளாகி 147 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர். (ம-8)

## வைக்கோல்போர் தீவைத்து எரிப்பு

### தென்மராட்சியில் சம்பவம்

தென்மராட்சி,மே 28

தென்மராட்சி கமக்காரர் அமைப்பின் தலைவரின் வீட்டில் குவிக்கப்பட்டிருந்த வைக்கோல் குவியல் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்குப் பகுதியில் அனுமதியின்றிக் கட்டாக் காலி மாடுகளைப் பிடிப்போருக்கும் கமக்கார அமைப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதத்தைத் தொடர்ந்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தென்மராட்சி தெற்கில் கட்டாக்காலியாக அலையும் மாடுகளைப் பிடிக்கும் பணியை சாவகச்சேரி பிரதேச சபை பொறுப்பேற்றுள்ளது .

இந்த நிலையில் இந்த மாடுகளை பிடித்து இறைச்சிக்காக விற்பனை செய்வோரின் தொகையும் அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் அனுமதியின்றி மாடுகள் பிடிக்கக் கூடாது என தனங்களப்பு கமக்கார அமைப்பின் தலைவர் அறிவித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த விஷமிகள் தலைவரின் வளவில் குவிக்கப்பட்டிருந்த வைக்கோல் குவியலுக்கு இரவு தீயிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீயை அணைக்க அந்தப் பகுதியில் உள்ள படையினர் உட்பட பொதுமக்கள் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்து வைக்கோல் முழுவதும் எரிந்து சாம்பலானது.

கடந்த திங்கட்கிழமை தனங்களப்பு பகுதியில் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகளை கடத்த முயன்ற இருவரை பொதுமக்கள் பிடித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(ம-86)

## சாவகச்சேரி நகரசபையில் புதன்கிழமைகளில் சீருடை

சாவகச்சேரி நகரசபையில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களும் பிரதி புதன்கிழமைகளில் சீருடை அணிந்து கடமையாற்ற வேண்டுமென நகரசபை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதற்கமைய ஆண் அலுவலர்கள் கறுப்பு நிற நீளக் காற்சட்டையும் இளம் சிவப்பு நிறச் சேட்டும், பெண் அலுவலர்கள் வெளிர் சிவப்பு நிறச் சேலையும் கடமை நேரத்தில் அணிய வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரசபையில் பணிபுரியும் சிற்றூழியர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் போன்றோர் கடந்த ஜனவரி தொடக்கம் கடமை நேரத்தில் சீருடையுடன் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரியில் இயங்கும் தென்மராட்சி பிரதேச செயலக அனைத்து அலுவலர்களும் புதன்கிழமைகளில் நீல நிறச் சீருடையுடன் பணியாற்றுவதை அடுத்து நகரசபை அலுவலர்களும் புதன்கிழமைகளில் சீருடையுடன் கடமையாற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## தொடர் காவியம் அறிமுகம்

நவாலி,மே 28

விழுமியக் கல்வி மகிழ்ச்சியால் வாழ்வு தொடர் காவியம் அறிமுகம் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் வலய மட்ட ரீதியாக நடைபெற்று வருகின்றது.

ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் இரண்டு ஆசிரியர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு கருத்தரங்கு நடைபெற்று வருகின்றது. இந்த நூலை வகுப்புக்களில் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்ற முறைகளை கற்றுக் கொடுத்தல் சம்பந்தமான விளக்கம் போதிக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கருத்தரங்கு முதலாவதாக யாழ்ப்பாண வலயத்திலும் இரண்டாவதாக வலிகாமம் வலயத்திலும் மூன்றாவது வடமராட்சியிலும் நான்காவதாகத் தீவக வலயத்திலும் ஐந்தாவதாக தென்மராட்சியிலும் இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்பட்டது. இந்த நூலைப் பற்றி பெற்றோர்களில் ஆறாயிரம் பேருக்கு அறிவூட்டப்பட்டுள்ளதாகவும் இந்த நூலின் ஆசிரியரான கிழக்கு மாகாணத்தில் 37 வருடங்கள் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற அருட்செல்வி திரேஸ் ரூபா தெரிவித்துள்ளார். (ம-100)

## கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு 'கோப் சிற்றி'களுக்கும் சிறந்த பரிசுகள்

யாழ்ப்பாணம், மே 28

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கூட்டுறவுச் சங்கங்களின் 'கோப் சிற்றி'களுக்கும் சிறந்த பரிசுகள் இந்த முறை வழங்கப்படவுள்ளன.

குடாநாட்டில் அதிக வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளும் 'கோப் சிற்றி'கள் தெரிவு செய்யப்பட்டு சிறந்த பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

தற்போது பெரும்பாலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 'கோப் சிற்றி'கள் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன.

இந்தக் 'கோப் சிற்றி'களின் வியாபாரம் மற்றும் அதன் செயற்பாடு போன்றவற்றை மதிப்பீடு செய்தே பரிசுகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான 'கோப் சிற்றி'களின் செயற்பாடுகளை விரைவுபடுத்தியும் அதன் வியாபார நடவடிக்கையை அதிகரிப்பதற்கும் சங்கங்களின் நிர்வாகங்கள் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு நுகர்வோரைக் கவரும் வகையில் இந்த விற்பனை நிலையங்களை காட்சிப்படுத்தி போதிய பொருள்களை விற்பனைக்கு வைப்பதன் மூலமே வியாபார நடவடிக்கையை மேலும் அதிகரிக்க முடியும் என்று கூட்டுறவு திணைக்கள அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார். (ம-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மன்னார் கடற்கரையில் ஒதுங்கியது வயோதிபப் பெண்ணின் சடலம்



மன்னார், மே 28

மன்னாரிலுள்ள கடற்படையினரின் காவலரணுக்கு முன்பாக வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை மன்னார் பிரதான பாலத்துக்கு அருகிலேயே சடலம் கரையொதுங்கிய நிலையில் காணப்பட்டது.

இந்தச் சடலம் மன்னார் பெரிய கடையைச் சேர்ந்த செபமாலை றெசினா என்பவருடையதென அவரது மகன் அடையாளம் காட்டினார்.

குறித்த வயோதிபப் பெண் சற்று மனநிலை பாதிப்படைந்தவர் எனவும் மன்னார் உப்பளக் கடற்கரை வீதியூடாக வீட்டுக்கு வரும் போது கடலில் தவறி விழுந்திருக்கலாம் எனவும் அவரது மகன் தெரிவித்தார்.

மன்னார் நீதிவான் ஏ.யூட்சன் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்ட போதே குறித்த வயோதிபப் பெண்ணின் மகன் இவ்வாறு தெரிவித்தார்.

எனினும் குறித்த பெண்ணின் தலைப்பகுதியில் இரத்தக்காயம் காணப்பட்டது. சடலத்தை பார்வையிட்ட நீதிவான் சடலத்தை மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைத்துச் சடலப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார். (க-12)

# கிராம சனத்தொகை அடிப்படையில் இனிமேல் அபிவிருத்திப் பணிகள்

## கரைச்சிப் பிரதேச சபையில் தீர்மானம்

கிளிநொச்சி, மே 28

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினால் அபிவிருத்தி வேலைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டுமெனச் சபையின் மாதாந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையானது கரைச்சி, கண்டாவளைப் பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய வகையில் 54 கிராம அலுவலர் பிரவுகளைக் கொண்ட பகுதியாகக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் சில பகுதிகளின் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் அபிவிருத்திப்பணிகள் சரியான முறையில் முன்னெடுக்கப்படுவதில்லை எனவும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கடந்த 23 ஆம் திகதி கரைச்சிப் பிரதேசசபையின் இந்தமாதக் கூட்டம் பிரதேச சபை மண்டபத்தில் தலைவர் நா.குகராஜா தலைமையில் இடம்பெற்றது.

**1986 ஆம் ஆண்டுக்கான ஆளணியுடன் பிரதேச சபை இயங்கி வருகிறது. ஆனால் தற்போது கரைச்சிப் பிரதேச சபையின் வருமானமும் வளமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.**

சகல அபிவிருத்திப் பணிகளும் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளின் சனத்தொகை அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டுமெனத் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை கரைச்சிப் பிரதேச சபையில் நிலவி வரும் ஆளணி நெருக்கடி காரணமாக வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாத நெருக்கடி நிலைகாணப்படுகிறது.

1986 ஆம் ஆண்டுக்கான ஆளணியுடன் பிரதேச சபை இயங்கி வருகிறது. ஆனால் தற்போது கரைச்சிப் பிரதேச சபையின் வருமானமும் வளமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் அமய அடிப்படையில் ஆள்சேர்ப்புச் செய்யலாம் என்ற கோரிக்கைகள் எழுப்பப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற கரைச்சிப் பிரதேச சபையின் கூட்டத்தில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதேசசபை உறுப்பினர் அ.தயாபரன், ஆளணியைப் பெருக்குவதில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் உள்ளூராட்சி அமைச்சுக்கோ அல்லது ஜனாதிபதிக்கோ கடிதம் எழுத வேண்டும் எனத் தெரிவித்தார். ஆளணி நெருக்கடியால் ஒரு மலசல கூடத்தைக் கூட அமைக்க முடியாத நிலையில் நாம் ஒன்று கூடி நேரத்தை வீணடிப்பது பயனற்றது.

அத்துடன் இச்சபையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (க-18-6)

## அம்பலப்பெருமாள் குளத்தில் மருத்துவமுகாம்

துணுக்காய் அம்பலப் பெருமாள் குளம் கிராமத்தில் மருத்துவ முகாமொன்று இடம்பெற்றுள்ளது. துணுக்காய்ப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மல்லாவி மெதடிஸ்த திருச்சபையால் இந்த மருத்துவ முகாம் ஒழுங்கமைக்கப்பட்டது.

வன்னி கிறிஸ்தவ ஐக்கியத்தின் அழைப்பின் பேரில் கல்முனை சுக நலச் சேவை மற்றும் நவஜீவன சுகாதார நிலையத்தினர் இணைந்து இந்த மருத்துவ முகாமை நடத்தினர். ஐந்து மருத்துவர்களும், ஏழு தாதியர்களும் இந்த முகாமில் மக்களுக்குச் சேவை வழங்கினர். பல் மருத்துவம் உட்படப் பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

முகாம் இடம்பெற்ற போது துணுக்காய்ப் பிரதேச சபை செயலர் சி.குணபாலன், அம்பலப்பெருமாள் குளம் கிராம அலுவலர் ம.குணசிங்கம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

இந்த முகாமின் ஒழுங்கமைப்பை மல்லாவி மெதடிஸ்த திருச்சபையின் போதகர் எஸ்.றிச்சாட் ஒழுங்குபடுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

# மீள்குடியமர்ந்த பகுதி ஆலயங்களுக்கு நிதி வழங்கலில் முன்னுரிமை வழங்குக

## வவுனியா பிரதேச செயலர் கடிதமூலம் வேண்டுகோள்

வவுனியா, மே 28

இந்து ஆலயங்களுக்கு நிதி வழங்கும் போது மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதியிலுள்ள ஆலயங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்து சமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த காலங்களில் பிரதேச செயலரின் பரிந்துரைகள் பெறாமல் இந்து ஆலயங்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்பட்டன. இதனால் வசதி படைத்த ஆலயங்களும் நகர்புறத்திலுள்ள ஆலயங்களும் பிணக்குகள் அதிகம் உள்ள ஆலயங்களுமே அதிகளவில் நிதிபெறுவதற்கான வசதிகளைப் பெற்றுவந்தன. இதனால் வவுனியா பிரதேச செயலர் பிரிவிலுள்ள மீளக் குடியமர்ந்த பகுதிகளின் ஆலயங்கள் பல புறக்கணிக்கப்பட்டன.

**இந்து சமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனுக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதிகளிலுள்ள ஆலய நிர்வாகிகள், பொது அமைப்பு களின் பிரதிநிதிகள் தமது பகுதியிலுள்ள ஆலயங்கள் நிதி வழங்கலில் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக முறையிட்டுள்ளனர்.

ஆகவே எதிர்காலத்தில் நிதி வழங்கும் போது பிரதேச செயலரின் பரிந்துரை பெற்று நிதி வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது சாலச் சிறந்தது என்றும். நிதி வழங்கும் போது போரினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மீளக்குடியமர்வுப் பகுதியிலுள்ள ஆலயங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் பிரதேச செயலர் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-400)



மன்னார் முசலிப் பிரதேச சபையில் மக்கள் குழுவொன்றை அமைக்குமாறு கோரும் மனுவொன்றை முசலிப் பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளரான அ.சுனேஸ் பிரதேச சபைத் தலைவரிடம் கையளிக்கின்றார். (12)

## பிறந்த தினத்தில் பயனுள்ள உதவிகள்

சுவிஸ் நாட்டில் வசிக்கும் ஒருவர் தமது பிறந்த தினத்தையொட்டி உதவிகளை வழங்கியுள்ளார்.

செல்லப்பா புவனேந்திரன் என்பவர் சுவிஸ் நாட்டில் வசிக்கின்றார். இவர் தமது 57 ஆவது பிறந்த தினத்தையொட்டி தாய், தந்தையரை இழந்த 15 மாணவர்களுக்கு பாதணிகளை வழங்கியுள்ளார். இந்த நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி இடம் பெற்றது. மேலும் வவுனியா அன்பகம் சிறுவர் இல்லத்துக்கு ஒரு நாள் உணவு இவரால் வழங்கப்பட்டன. (க-435)

# யூனியன்குளத்துக்கு பஸ் சேவை ஆரம்பிக்கக் கோரிக்கை

அக்கராயன், மே 28

கிளிநொச்சி யூனியன் குளம் மற்றும் கோணாவில் மத்திய பகுதி மக்களுக்கான பஸ் சேவைகளை ஆரம்பிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கிளிநொச்சி அரச அதிபர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இடப்பெயர்வுகளுக்கு முன்பு யூனியன் குளம் கிராம மூடான பஸ் சேவை நடைபெற்று வந்தது.

ஆனால் மீளக்குடியமர்வு இடம்பெற்று மூன்று ஆண்டுகள் நெருங்கும் நிலையில் பஸ் சேவை இடம்பெறாததால் இந்தக் கிராம மக்கள் மூன்று கிலோ மீற்றர் தூரத்துக்கு மேலாக நடந்து செல்ல வேண்டிய அவலம் தொடர்கின்றது.

அக்கராயன் மருத்துவமனைக்குக் கூட நீண்ட தூரம் மக்கள் நடந்து செல்கின்றனர்.

யூனியன்குளம் பாலம் உடைந்துள்ளது என்று மூன்று ஆண்டுகளாகக் காரணம் கூறப்பட்டு வருகிறது.

ஆனால் இந்தப் பாலம் மற்றும் கனரக வாகனங்கள் பயணிக்கின்ற போதும் பஸ் சேவை மட்டுமே இடம் பெறவில்லை.

இதேவேளை கோணாவில் மத்தி இராஜன் குடியிருப்பு ஊடாக யூனியன் குளம் கிராமத்தின் ஊடாக அக்கராயன் மருத்துவமனையைச் சென்றடையக் கூடிய வகையில் பஸ் சேவையை நடத்[illegible] கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. (க-18)

## இடமாற்றம்

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றி வந்த சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வந்த ரி.விக்னராஜா மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். துணுக்காயப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வந்த எஸ்.சிவபாலசுந்தரம் பூநகரிப் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வந்த கே.கமலதாசன் வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்குமாகாண சிறுவர்கள் நன்னடத்தை திணைக்களப் பணிப்பாளரினால் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. (க-11)

# திருட்டுச் சம்பவத்தில் கைதானோர் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில்

கிளிநொச்சி, மே 28

கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டு வரும் ஒப்பந்த நிறுவனத்தின் கனரக வாகன உதிரிப் பாகம் மற்றும் டீசல் என்பவற்றை களவாடிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களையும் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு 35 வீதியின் புனரமைப்பு பணிகளை மேற்கொண்டுவரும் ஒப்பந்த நிறுவனமொன்றின் கனரக வாகனத்தின் மின்கலம் உள்ளிட்ட உபகரணங்களையும் டீசலையும் களவாடியதாக நான்கு பேர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 24 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

**ஒப்பந்த நிறுவனத்தின் கனரக வாகன உதிரிப் பாகம் மற்றும் டீசல் என்பவற்றை களவாடிய சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.**

குறித்த நான்கு பேரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்கள் முன்னெடுப்பு

## பிரதேச செயலகப் பிரிவுகளில் கருவாடு பதனிடும் பயிற்சி

வடமராட்சி, மே 28

பெண் தலைமைக் குடும்பங்கள் மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வரும் குடும்ப பெண்களின் வாழ்வாதார உதவித் திட்டமாக மீன் பதனிடும் திட்டத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள 'பாசிக்' நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலர் பிரிவுகளில் 6 கடற்றொழில் கிராமங்கள் இந்தத் திட்டத்துக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கிராமங்களிலிருந்து இனங் காணப்பட்ட பயனாளிகளுக்கு ஆரம்பத்தில் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் கருவாடு பதனிடுதல் தொடர்பாக பயிற்சி அளிக்கப்படும்.

இந்தத் திட்டத்திற்கென அவசியமான உபகரணங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

கிராமத்தில் வேலணை கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசம் மற்றும் துறையூர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்க ஒத்துழைப்புடன் இனங்காணப்பட்ட பகுதியில் கருவாடு பதனிடும் நிலையம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இந்தப் பதனிடும் நிலையத்தைப் பயனாளிகளிடம் ஒப்படைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது 'பாசிக்' நிறுவன திட்ட இணைப்பாளர் பதனிடும் நிலையத்தைத் திறந்த வைத்தார்.

துறையூர் கருவாடு பதனிடும் நிலையத்தில் தற்போது மிகச் சிறப்பாக கருவாடுகளும், இறால்களும் பதனிடப்பட்டு நேர்த்தியாகப் பொதி செய்யப்பட்டு சிறப்பாக சந்தைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையத்தில் உற்பத்தியாகும் கடலுணவின் தரத்தை அறிந்து உள்ளூர் மக்களும், வெளியூர் மக்களும் அவற்றை மிகுந்த ஆர்வத்துடன் கொள்வனவு செய்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அத்துடன் உற்பத்தி செய்யப்படும் உவர் நிலை கடலுணவுகளை வெளி மாவட்ட சந்தைகளிலும் சந்தைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதனூடாக இந்தத் திட்டப் பயனாளிகள் உரிய வருமானத்தை தொடர்ச்சியாகப் பெற இந்தத் திட்டம் ஏதுவாக அமைகின்றது.

'பாசிக்' நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் கருவாடு பதனிடும் நிலையங்களை ஆரம்பிக்க ஜெய்கா நிறுவனம் தேவையான நிதி உதவிகளை வழங்கி வருகிறது. (ம-8)

# மக்கள் பாவனை இடத்தை ஆக்கிரமிக்கும் போத்தல்கள்

மக்கள் பாவனைக்கு விடப்பட்ட நவீன சந்தையின் வெளிப் பகுதிகளில் சோடாப் போத்தல் பெட்டிகள் பெருமளவில் விற்பனைக்காக அடுக்கி வைக்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் போக்குவரத்துச் செய்யவும் நிழலுக்காக ஒதுங்கவும் முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள நவீன சந்தையின் விறாந்தையில் பெருமளவு சோடாப் பெட்டிகளும் வெற்றுப் போத்தல் பெட்டிகளும் தினமும் அடுக்கி வைக்கப்படுகின்றன.

தூர இடங்களுக்குச் செல்லும் மக்கள் இந்தப் பகுதியில் தங்கி நிற்பது வழமை. அண்மைக் காலமாக அந்த விறாந்தையை சோடாப் பெட்டிகளை அடுக்கி வைத்து ஆக்கிரமிப்பு செய்வதால் இந்த விறாந்தையைப் பயன்படுத்துவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அவர்கள் கேட்கின்றனர். (ம-9)

# தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பு

வடமராட்சி, மே 28

பருத்தித்துறை - கரவெட்டிப் பிரதேச பிரதான தொலைபேசி பரிவர்த்தனை நிலையில் புதிதாக 150 அடி உயரம் கொண்ட தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிவர்த்தனை நிலையத்துக்கு ஊடாக சுமார் 500 கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் பாவனையாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த இணைப்பில் இணையத்தள இணைப்பாக ஆயிரக்கணக்கான ஏ.டி.எஸ்.எல். இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

தொலைபேசி இணைப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் அவற்றுக்கு வசதியாக புதிய கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் இதனூடாக தொலைத் தொடர்பு சேவைகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)



சுன்னாகம் பொலிஸாரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை ஏழாலை மகா வித்தியாலயத்தில் நடமாடும் சேவை நடத்தப்பட்டது. சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் பரிசோதகர் தலைமையில் இடம்பெற்ற இந்த நடமாடும் சேவையில் உடுவில் பிரதேச செயலக நிர்வாகக் கிராம அலுவலர் நா.நவரத்தினராசா, ஏழாலை மகா வித்தியாலய அதிபர் சி.ஆனந்தகுமார், மத்தியஸ்தர் சபைத் தலைவர் திருமதி எஸ் ஜெயந்தி மற்றும் கிராம அலுவலர்கள் கலந்துகொண்டனர். பொலிஸாரால் பல்வேறு முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டதுடன் சிறு பிணக்குகள் சம்பந்தமாக விசாரித்து தீர்வுகளும் எட்டப்பட்டன. மாணவர்களுக்கான போக்குவரத்து விதிமுறைகள் சம்பந்தமான வகுப்புகளும் பொலிஸாரால் நடத்தப்பட்டன. (ம-86)

# அனுமதியின்றி ஒலிபெருக்கி பாவனை தடுத்து நிறுத்துவதற்குத் தீர்மானம்

## வலி.கிழக்குப் பிரதேச செயலகக் கூட்டத்தில் முடிவு

அச்சுவேலி, மே 28

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் அனுமதிப் பத்திரம் இன்றி ஆலயங்களில் ஒலிபரப்பு சாதனங்களைப் பயன்படுத்தி அமைதிக்குப் பங்கம் விளைவிப்பது தடுத்து நிறுத்தப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற பிரதேச சிவில் நிர்வாகப் பாதுகாப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.நிஸங்க ஜயரத்ன, கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். வைத்திய திலக்க மற்றும் உயர் அதிகாரிகள் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் சமூகப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் கட்டுப்பாடற்ற ஒலிபெருக்கிப் பாவனையால் சமூகத்தில் ஏற்பட்டு வரும் பாதிப்புக்கள் மற்றும் தீமைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு ஒலிபெருக்கி சாதனங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவது, கட்டுப்பாட்டை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது என்றும் ஆலயங்களில் ஒலிபெருக்கிப் பாவனைக்குப் பாவனை நிபந்தனைகளை உள்ளடக்கியதாக அனுமதிப் பத்திரங்கள் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆலயங்களில் ஒலி பெருக்கிப் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக வலி.கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபன் மேலும் கூறியதாவது:-

ஆலயங்களின் கட்டு மீறிய ஒலிபெருக்கிப் பாவனையால் அதிகாலை மற்றும் மாலை வேளையில் மாணவர்கள் படிக்க முடியாமல் மன உளைச்சலுக்கும் நெருக்கடிக்கும் ஆளாகின்றனர். அமைதிக்குப் பங்கம் ஏற்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் பிரதேச செயலகத்தில் கூட இயல்புநிலையில் பணிகளைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டு வருகின்றது. ஆத்மிகம் என்ற போர்வையில் சமூகம் குழப்பத்துக்கு உள்ளாவதை அனுமதிக்க முடியாது.

ஆலயத்தில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தும் நேரம், பயன்படுத்தும் ஒலி அளவு, பயன்படுத்தும் ஒலிபெருக்கிகளின் எண்ணிக்கை, ஆலயத்துக்கு வெளியே ஒலிபெருக்கிகளை நிறுவும் தூரம் மற்றும் விவரங்களை உள்ளடக்கியதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

உரிய நிபந்தனைகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஆலயங்களில் ஒலிபெருக்கி பாவனை தொடர்பான நிபந்தனைகள் பத்திரிகைகள் மூலம் பகிரங்கப் படுத்தப்படும்.

மீறுவோர் தொடர்பான தகவலைப் பொலிஸ் நிலையத்துக்கும் பிரதேச செயலகத்துக்கும் பொதுமக்கள் தெரியப்படுத்தலாம் எனத் தெரிவித்தார். (ம-11)

# குருநகர் ஐந்து மாடிக் கட்டட புனரமைப்புக்கு ரூ.70 மில்.

யாழ்ப்பாணம், மே 28

குருநகர் 5 மாடிக் கட்டடப் புனரமைப்புக்கென வீடமைப்பு அமைச்சால் 70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருநகர் 5 மாடிக் கட்டடம், கட்டப்பட்டு பல வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்புப் பணிகளுக்கு உட்படுத்தப்படவில்லை. கடந்த பெப்ரவரி மாதம் திருத்த வேலைகள் தொடர்பான மதிப்பீடு நடைபெற்றது. வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரின் பணிப்புக்கு அமைவாகக் கொழும்பிலிருந்து வருகை தந்த உதவிப் பொது முகாமையாளர்கள், பொறியியலாளர்கள் குறித்த திருத்த வேலைக்கான மதிப்பீடுகளை மேற்கொண்டனர்.

1985 ஆம் ஆண்டு இந்த 5 மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. 27 வருடகாலமாக திருத்த வேலைகள் எவையும் இடம்பெறவில்லை. யாழ்.மாநகர சபையால் மலசலகூடம் மட்டும் புனரமைப்புச் செய்யப்பட்டது.

இந்த நிலையில் இந்தக் கட்டடங்கள் பெரும் சேதமடைந்த நிலையில் உள்ளன. அத்தோடு கடற்கரைப் பக்கம் உள்ளதால் ஜன்னல், இரும்புக் கதவுகள் என்பன சேதமடைந்தும் காணப்படுகின்றன.

5 மாடிக் கட்டடத் தொகுதியில் 160 வீடுகள் உள்ளடங்குகின்றன. இந்தக் கட்டடத்துக்கென வேலையின் மதிப்பீட்டின் படி 70 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருட திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. திருத்த வேலைகள், நீர் வசதிகள், பொது வசதிகள் என்பன இதில் உள்ளடங்குகின்றன.

இந்தத் திருத்த வேலைகள் யாவும் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

# மண்டைதீவு தீர்த்தவாருதி வீதிக்கு வந்தது விமோசனம்

யாழ்ப்பாணம், மே 28

மண்டைதீவு கிழக்கு தீர்த்தவாருதி வீதி நீண்ட காலங்களின் பின்னர் தற்சமயம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

1991 இல் மக்கள் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த பின் பற்றைகள், முட்செடிகள் வளர்ந்து வீதியை முற்றாக மூடியிருந்தது.

இந்த வீதியை மண்டைதீவு இந்து இளைஞர் மன்றம் மற்றும் பொது அமைப்புக்கள் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்து மக்கள் பாவனைக்கு உதவக்கூடிய வகையில் விட்டிருந்தனர்.

தற்சமயம் இந்த வீதி போக்குவரத்துக்கு உகந்ததாக உலக உணவுத் திட்டத்தின் கீழ் திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வேலணைப் பிரதேச சபை இதற்கான பணிகளை முன்னெடுத்துள்ளது. (ம-7)

# மண்டைதீவு மருத்துவ நிலையம் 25மில்.ரூபா நிதியில் அமையும்

யாழ்ப்பாணம்,மே.28

வேலணைப் பிரதேச சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் முயற்சியால் மண்டைதீவு மக்களின் நலன் கருதி மருத்துவ நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு வைத்தியசாலை நீண்ட காலமாகப் புனரமைப்பு செய்யப்படாத நிலையில் அங்குள்ள மக்கள் தமது நோய்களுக்கு வைத்தியம் செய்ய யாழ். நகருக்குச் செல்ல வேண்டிய நிலையுள்ளது.

வைத்திய நிலையம் அமைக்க வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் உதவி நாடப்பட்டுள்ளது.

குறித்த மருத்துவ நிலையத்தை அமைக்க யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

25 மில்லியன் ரூபா நிதியுதவியில் இந்த நிலையம் அமைக்கப்படவுள்ளது.

அல்லைப்பிட்டியிலும் இது போன்ற மருத்துவ நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரகசியமாக இலங்கைக்குச் சென்ற தே.மு.தி.க. உறுப்பினர் அருண்பாண்டியன்

## திணறுகிறது உளவுத்துறை



தமிழகத்தில் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளும் இலங்கை விவகாரத்தை வைத்து அரசியல் செய்து வரும் நிலையில், தே.மு.தி.க. தனது சட்டமன்ற உறுப்பினரும், நடிகருமான அருண்பாண்டியனை இலங்கைக்கு சத்தம் போடாமல் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனையறிந்த இந்திய உளவுத்துறை கடும் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் குறித்த தகவல்களைப் பெறுவதில் விரைந்து செயற்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கைக்குப் பயணம் செய்யும் தமிழக அரசியல் தலைவர்கள் மற்றும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய அமைச்சர்கள் போன்றவர்கள், மத்திய அரசு அனுமதி பெற்று தூதுக் குழுக்களில் இணைந்து செல்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்தநிலையில், தே.மு.திகவைச் சேர்ந்த பேராவூரணி சட்டமன்ற உறுப்பினரும், நடிகருமான அருண்பாண்டியன், கடந்த சில தினங்களுக்கு முன்பு மிக ரகசியமாக இலங்கைக்குச் சென்று அங்கு யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து கொழும்பில் உள்ள செய்தியளார்கள் தெரிவித்ததாவது:

தே.மு.திகவைச் சேர்ந்த பேராவூரணி சட்டமன்ற உறுப்பினரும், நடிகருமான அருண்பாண்டியன், யாழ்ப்பாணம் வந்துள்ளது உண்மை.

ஆனால், அருண் பாண்டியன் தனிப்பட்ட முறையில் ஒருமாத சுற்றுலா விசாவில், வந்துள்ளதாக தெரியவருகிறது. குறிப்பாக, திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் ஐங்கரன் சர்வதேச நிறுவனத் தலைவர் கருணாமூர்த்தியுடன் யாழ்ப்பாணம் வந்துள்ளார். கருணாமூர்த்தி ஈழத்தமிழர் என்பது நினைவிருக்கலாம். பல சூப்பர் ஹிட் தமிழ்ப் படங்களைத் தயாரித்துள்ளவர் கருணாமூர்த்தி.

யாழ்ப்பாணம் வந்த, அருண்பாண்டியன், இணுவில் என்ற கிராமத்தில் தங்கியிருந்தார். அப்போது, பொது மக்கள் பலரையும் அவர் சந்தித்துப் பேசினார்.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் மிக முக்கியமான புகைப்படங்களை அவர் எடுத்துள்ளார். தமிழ் அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் இருவர், அவரைச் சந்தித்துப்பேசியதாகவும் தெரியவந்துள்ளது என்கின்றனர்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் இலங்கை விவகாரத்தில் மிக ஆர்வமாக உள்ளார் என்றும், அதனால் தான் தனது நம்பிக்கைகுரிய நட்சத்திரம் அருண்பாண்டியன் மூலம் சில தகவல்களைப் பெற்றும் வருமாறு பணித்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அருண்பாண்டியன் தமிழகம் வந்த பின்பு, இலங்கையில் ஈழத் தமிழர்களின் நிலையை புதுக்கோட்டை இடைத்தேர்தல் பிரசாரத்தில் புட்டுவைக்கப் போவதாகவும் ஒரு தகவல் உலா வருகின்றது. இந்த விடயத்தை காலம்கடந்தபின்னர் மோப்பம் பிடித்த தமிழக உளவுத்துறை , கடும் அதிர்ச்சி அடைந்து அது குறித்த தகவல்களை விரைவாகச் சேகரித்து வருகின்றது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நியூட்டன் போட்ட கணக்குக்கு விடை கண்ட இந்திய மாணவன்



350 ஆண்டுகளுக்கும் மேலாகத் தீர்வு காணப்படாமல் இருந்து வந்த ஒரு கணிதப் புதிருக்கு விடை கண்டு அனைவரையும் வியக்க வைத்துள்ளார் 16 வயதேயான இந்திய மாணவன். இந்தக் கணிதப் புதிரைப் போட்டவர் மறைந்த சேர் ஐசக் நியூட்டன் ஆவர்.

இந்தப் புதிர் கணக்கு கடந்த 350 ஆண்டுகளாக உலக கணிதவியலாளர்களைக் குழம்ப வைத்துள்ளது. கணித மேதைகள் பலரும் கூட இந்தப் புதிருக்கு விடை காண முடியாமல் திணறி வந்தனர். ஆனால் ஜஸ்ட் லைக் தட் இதற்கு விடை கண்டுள்ளார் சௌரியா ராய் என்ற இந்திய வம்சாவளி மாணவன்.

ஜேர்மனியின் டிரட்சென் பகுதியில் வசித்து வருகிறார் ராய். இவர் விடை கண்டுள்ள கணிதப் புதிர், டைனமிக்ஸ் குறிப்பில் வருகிறது. டிரட்சென் பல்கலைக்கழகத்திற்கு ராய் பாடசாலைச் சுற்றுலாவாகச் சென்றபோது தான் இந்தக் கணிதப் புதிர் குறித்து ராய்க்குத் தெரிய வந்தது. அப்போது அங்குள்ள பேராசிரியர்கள் இதுகுறித்து கூறியபோது, இதற்கு விடை காணவே முடியாது என்று கூறினர்.

ஆனால் அதை சவாலாக எடுத்துக் கொண்டார் ராய். பின்னர் அதற்கு விடை காணும் முயற்சியில் இறங்கினார், வெற்றியும் பெற்றார்.

இது மட்டுமல்லாமல் மிகக் கடினமான கணிதப் புதிர்களுக்குக்கூட மிக எளிதாக விடைகாணும் வித்தை இவரிடம் உள்ளது. 6 வயதிலிருந்தே இதே வேலையாகத்தான் திரிகிறாராம் இவர்.

அதேசமயம், தன்னை மேதை என்று யாரும் அழைக்க வேண்டாம் என்றும், அந்தளவுக்கு தான் இன்னும் வளரவில்லை என்றும் அடக்கத்துடன் கூறுகிறார்.

4வயதாகஇருந்தபோது கொல்கத்தாவிலிருந்து ஜேர்மனிக்கு வந்து வசிக்கலானார் ராய். தற்போது தனது தாய் மொழியான பெங்காலியை விட ஜேர்மனியை மிக லாவகமாகப் பேசுகிறார் ராய்.

# ராமேஸ்வரத்தில் நேற்று கடல் உள்வாங்கியது

## தரை தட்டின நாட்டுப்படகுகள்

ராமேஸ்வரத்தில் நேற்று அதிகாலை திடீரென கடல் உள்வாங்கியது. இதனால் நாட்டுப் படகுகள் தரை தட்டி நின்றன. 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமிக்கு பின்னர் ராமேஸ்வரத்தில் அடிக்கடி கடல் உள் வாங்குவது, கடல் கொந்தளிப்பு என்று கடலில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் நேற்று அதிகாலை ராமேஸ்வரத்தில் திடீரென சுமார் 500 மீற்றர் தூரத்திற்கு கடல் உள்வாங்கியது. அக்னி தீர்த்தக் கடற்கரை, துறைமுகக் கடற்கரை, சங்குமால் கடற்கரை ஆகிய இடங்களில் கடல் உள்வாங்கியதால் 500 மீற்றர் தூரத்திற்கு பாறைகளாகக் காட்சியளித்தது.

நேற்றுக்காலை மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக வந்து பார்த்தபோது நாட்டு படகுகள் தரை தட்டி நின்றதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். இதனால் 50 இற்கும் மேற்பட்ட நாட்டு படகில் மீன்பிடிக்க செல்லும் மீனவர்கள் நேற்று மீன்பிடிக்கச் செல்லவில்லை. (வ)

# நாடாளுமன்றக் கூட்டத்தொடரை புறக்கணித்த சோனியா, ராகுல்



நாடாளுமன்ற கூட்டத் தொடருக்கு அதிகமான நாள்கள் வராமல் சோனியாவும், மகன் ராகுலும் புறக்கணித்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய வரவு செலவுத்திட்ட அறிக்கை, ரயில்வே வரவுசெலவுத்திட்ட அறிக்கை என்று நாடாளுமன்றக்கூட்டத்தொடர் 36 நாள்கள் நடைபெற்றது.

இதில் மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் தலைவர் சோனியா காந்தியும் அவரது மகன் ராகுல் காந்தியும் சிறிதளவு கூட பொறுப்பில்லாமல் அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி, ராகுல் காந்தி அவையின் முக்கிய விவாதங்கள், நடவடிக்கைகளில் 22 நாள்கள் கலந்து கொள்ளவில்லை. அவரது தாயார் சோனியா காந்தி 16 நாள்கள் சபைக்கு வரவில்லை.

மத்திய வரவுசெலவுத் திட்ட அறிக்கை, ரயில்வே வரவுசெலவுத்திட்ட அறிக்கை என எந்தவொரு முக்கிய விவாதங்களிலும் அவர் பங்கேற்கவில்லை.

நாட்டை ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளாமல் பொறுப்பற்ற தன்மையுடன் இருப்பது நாட்டு மக்களிடத்திலே வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையே பா.ஜ.க. தலைவர் எல்.கே அத்வானி, லோக்சபாவின் அனைத்து நாள் நிகழ்ச்சியிலும் பங்கேற்று 100 சதவித வாக்குகளை பூர்த்தி செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் முதலாவது பிரதமர் நேருவின் நினைவுதினம் நேற்று

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 48 ஆவது நினைவு தினம் நேற்று நாடு முழுவதும் அனுட்டிக்கப்பட்டது.

1947 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவின் முதல் பிரதமராக ஜவஹர்லால் நேரு பதவி வகித்தார். கடந்த 1967ஆம் ஆண்டு மே 27 ஆம் திகதி நேரு காலமானார்.

இந்தநிலையில் நேருவின் 48 ஆவது நினைவு தினம் நேற்று நாடு முழுவதும் அனுட்டிக்கப்பட்டது. இதை முன்னிட்டு ஜனாதிபதி பிரதிபா பாட்டீல், துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி ஆகியோர் அவரது உருவபடத்துக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

# மீனாட்சி அம்மன் கோயில் தடைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

## நித்தியானந்தா எச்சரிக்கை

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் தன்னை அனுமதிக்க மறுப்பவர்களுக்கு, எதிராக சட்டப்படி அழைப்பாணை அனுப்ப உள்ளேன் என்று நித்யானந்தா எச்சரித்துள்ளார்.

மதுரை ஆதீனம் மடம் சார்பில் நடந்த இலவச மருத்துவ முகாமில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

"நான் கறைபடவில்லை; பிறரால் கறைபடுத்தப்பட்டேன். நீதிமன்றத் தீர்ப்புக்கு பின்னரும் சிலர் ஆர்பாட்டம் செய்கின்றனர். அவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்படும். நான் யாருக்கும் பணம் கொடுக்கவில்லை. மருத்துவ முகாமுக்கும், மடத்தின் புனிதத்துக்கும் தொடர்பில்லை. மக்கள் நலனுக்கு பாடுபடுவதில், மடங்களுக்கு பங்குண்டு. மீனாட்சி அம்மன் கோயிலில் என்னை அனுமதிக்க மறுப்பவர்களுக்கு, சட்டப்படி அழைப்பாணை அனுப்ப உள்ளேன் என்றார்-என்றார்.

(வ)

# இந்தியர் எவரெஸ்டை அடைந்து சாதனை




ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பெண் உட்பட நான்கு பேர் உலகின் உயர்ந்த சிகரமான எவரெஸ்டை அடைந்து சாதனை படைத்துள்ளனர்.

ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ராஜேந்திரபால், மேஹலல் மேகதா, பினிதா சோரன் இவர்கள் மூவரும், முன்னணி ஸ்டீல் நிறுவனத்தின் அனுசரணையுடன் எவரெஸ்ட் சிகரத்துக்குச் செல்லத் திட்டமிட்டனர்.

இந்த நிலையில் சுமார் 8,848 அடி உயரமுள்ள எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து சாதனை படைத்தனர்.

இவர்களுக்கு டாடா முன்னணி ஸ்டீல் நிறுவனம் பாராட்டும், 7.50 மில்லியன் டொலர்கள் பரிசும் வழங்கி கௌரவித்தது.

இதில் ராஜேந்திரபால் என்பவர் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண் என்ற பெருமை பெற்ற பச்சேந்திரபாலின் சகோதரர் ஆவார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் 92 பேர் சாவு

## நிலைமைகளை கட்டுப்படுத்த ஐ.நாவின் நேரடி தலையீட்டுக்கு வலியுறுத்து

டமாஸ்கஸ், மே 28

மத்திய சிரியாவில் உள்ள ஹெலா நகரில் கடந்த வெள்ளிக்கிழமை அந்த நாட்டு ஜனாதிபதி பஷார் அல் அசாத்தின் படைகள் மீது போராட்டக்காரர்களின் போராளிகள் விமானத் தாக்குதல் நடத்தியதில், 92 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 32 பேர் குழந்தைகள். இதனை ஐ.நா. நோக்கர்களின் தலைவர் சனிக்கிழமை குறிப்பிட்டார்.



பொதுமக்களைக் காப்பாற்றும் விதத்தில் ஐ.நா. தலையிட்டாலன்றி ஐ.நா.வின் அமைதித் திட்டத்துக்கு நாங்கள் கட்டுப்படப் போவதில்லை எனத் தாக்குதலை நடத்திய போராளிகள் கூறியுள்ளனர்.

ஐ.நா. குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொபர்ட் மூட் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

ஹெலாவில் நடந்திருப்பது கண்மூடித்தனமான படுகொலை. இத்தகைய கொடூரமான சம்பவம் ஏற்பட்டதற்கான காரணம் இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை. தாக்குதலை யார் முதலில் தொடங்கியிருந்தாலும் சரி, கண்டிக்கத்தக்க இந்த வன்முறைக்கு உரியவர்கள் பொறுப்பேற்றாக வேண்டும். தங்கள் சுயநலத்துக்காக வன்முறையைப் பயன்படுத்துவதன் மூலம், நிலையற்ற தன்மைதான் உண்டாகும். அது உள்நாட்டுப் போருக்குத்தான் இட்டுச் செல்லும். இருதரப்பும் வன்முறையைக் கைவிட வேண்டும் என மூட் கூறினார்.

இந்தப் படுகொலைகளைப் பிரிட்டன்,ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய ஐரோப்பிய நாடுகள் கண்டித்துள்ளன. பிரான்ஸின் வெளியுறவுத் துறை அமைச்சர் லோரன்ட் பேபியஸ், சிரியா தொடர்பாக சர்வதேச நாடுகளின் கூட்டத்தைக் கூட்ட உடனடியாக ஏற்பாடு செய்துவருகிறோம் - என்றார்.

பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சர் வில்லியம் ஹேக், பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. ஐ.நா. பாதுகாப்பு சபையின் அவரசக் கூட்டத்தை கூட்டுமாறு அறிவுறுத்தியுள்ளோம் என்றார்.

ஜேர்மனியின் வெளியுறவுத் துறை அமைச்சர் கைடோ வெஸ்டர்வெல்லி, இந்தக் கொலைகளைக் கண்டு அதிர்ச்சி அடைந்திருப்பதாகக் கூறினார்.

ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையில் திட்டவட்டமான முறையில் தலையிடவில்லையெனில், அமைதித் திட்டம் அனைத்தும் பாழாகிவிடும் என ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலர் கோபி அனான் கூறினார்.

# பின்லேடனின் மனைவியர் விசாரணைகளுக்கு ஒத்துழைக்கவில்லை



ஒசாமா பின்லேடனின் மனைவிமார் விசாரணைகளில், ஒத்துழைப்புடன் செயற்படவில்லை என, விசாரணைகளை மேற்கொண்ட பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

அபோதாபாத்தில் சுமார் ஒரு வருடங்களுக்கு முன்னர் பாகிஸ்தான் பாதுகாப்புப் பிரிவினரால் பின்லேடனின் மூன்று மனைவிமார் கைது செய்யப்பட்டனர்.

ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பயனுள்ள தகவல்கள் எதனையும் அவர்கள் வெளியிடவில்லை என விசாரணையாளர்கள் தெரிவித்தனர்.

பின்லேடனின் கடைசி மனைவியான யேமனைச் சேர்ந்த அமல் அல் சதா ஆரம்பத்தில் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காது, கடுங்கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனாலும் சவூதியைச் சேர்ந்த முதலாவது மற்றும் இரண்டாவது மனைவிமார் விசாரணைகளின் போது, மௌனமாக இருந்தனர் என்றுதெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் மூன்றாவது மனைவியே இறுதியில் விசாரணைகளுக்குப் போதியளவு ஒத்துழைப்பு வழங்கினார் என பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சே குவேரா மற்றும் அவரது நடவடிக்கைகள் மீது அதிக ஆர்வம் கொண்ட அமல், இலத்தீன் அமெரிக்காவின் இடதுசாரி கொள்கைகள் தொடர்பில் அதிகம் அறிந்திருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானுக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசித்து தங்கியிருந்த குற்றத்திற்காக சிறைத்தண்டனை அனுபவித்து வந்த, பின்லேடனின் நான்கு மனைவிமாரும், 11பிள்ளைகளும் கடந்த மாதம் சவூதி அரேபியாவிற்கு நாடு கடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இறுதித் தேர்தலுக்கு இருவர் தயார்

எகிப்திய ஜனாதிபதித் தேர்தலின் இரண்டாவது சுற்றில் முஸ்லிம் சகோதரத்துவக் கட்சி வேட்பாளரான மொஹமட் முர்ஸியும் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் ஆட்சிக்காலத்தின் இறுதிக்கட்டத்தில் பிரதமராக நியமிக்கப்பட்டவருமான அஹமட் சபிக்கும் போட்டியிடவுள்ளனர்.

கடந்த புதன், வியாழன் ஆகிய தினங்களில் நடைபெற்ற முதல் சுற்றுத் தேர்தலில் 13 பேர் போட்டியிட்டனர். இவர்களில் முஸ்லிம் சகோதரத்துவக் கட்சி வேட்பாளர் மொஹமட் முர்ஸி 25.3 சதவீத வாக்குகளைப் பெற்றார். முன்னாள் பிரதமர் அஹ்மட் சபிக் 24.9 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

இந்தத் தேர்தல் பெறுபேறுகள் எதிர்வரும் வியாழக்கிழமையே உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவுள்ளன. எனினும் அரச ஊடகங்கள் இந்தப் பெறுபேற்றை உறுதிப்படுத்தியுள்ளன.


புரட்சி ஆதரவு வாக்குகள் பிளவுபட்டுள்ளன. இடதுசாரி வேட்பாளர் ஹமின் சப்பாஹ் 21.5 சதவீத வாக்குகளுடன் 3 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். மிதவாத இஸ்லாமிய வேட்பாளரான அப்துல் மொனெய்ம் அபோல் போடோஹ் சுமார் 19 சதவீத வாக்குகளுடன் 4 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இரண்டாவது சுற்றுத் தேர்தல் ஜூன் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் முன்னாள் பிரதமர் சபிக் ஜனாதிபதியாக வெற்றி பெற்றால் புரட்சிக்காலத்திற்கு முந்தைய நிலைக்கு எகிப்து சென்றுவிடும் என முஸ்லிம் சகோதரத்துவக் கட்சி வேட்பாளர் மொஹமட் முர்ஸி கூறியுள்ளார்.

'நாம் புதிய யுகத்தை ஆரம்பிப்போம் என அனைத்து எகிப்தியர்களுக்கும் நான் உறுதியளிக்கிறேன். மீண்டும் பின்னோக்கிச் செல்லப் போவதில்லை' என அவர் கூறினார்.

# 15 ஆயிரம் தொழில்களுக்கு முயன்றும் தோல்வியே



கடந்த 10 வருடகாலத்தில் சுமார் 15,000 தொழில்களுக்கு விண்ணப்பித்தும் தொழில் எதுவும் கிடைக்காத முதுமாணி பட்டதாரியொருவர் விரக்தியடைந்து, 'என்னைத் தேர்வு செய்யுங்கள்' என எழுதப்பட்ட மட்டையொன்றை கழுத்தில் தொங்கவிட்ட நிலையில் வீதியில் திரிந்த சம்பவமொன்று பிரிட்டனில் இடம்பெற்றுள்ளது.

பிரிட்டனின் பேர்மிங்ஹாம் பகுதியைச் சேர்ந்த ரொபன் நோர்ட்ன் என்பவரே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இவர் வரலாற்றுத் துறையில் முதுமாணி பட்டம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னர் தபால் துறையில் பணியாற்றினார். பின்னர் 2002 ஆம் ஆண்டு வரை பாதை பராமரிப்பு தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றினார். ஆனால், அதன்பின் இவர் நிரந்தரமாக எந்தத் தொழில் வாய்ப்பையும் பெற்றுக்கொள்ளவில்லை.

கடந்த 10 வருடகாலத்தில் அவர் சுமார் 15,000 வேலைவாய்ப்பு விளம்பரங்களைப் பார்த்து விண்ணப்பங்களை அனுப்பினாராம். ஆனாலும் தொழில் கிடைக்கவில்லை.

அதனால் தற்போது அவர் 'என்னைத் தேர்வு செய்யுங்கள்' என்ற சுலோகம் எழுதப்பட்ட அட்டையை கழுத்தில் தொங்கவிட்ட நிலையில் வீதியில் நடப்பதற்கு ஆரம்பித்துள்ளார்.

இது குறித்து நோர்டன் தெரிவிக்கையில், 'நான் கடந்த பத்து வருடங்களாக வாராந்தம் சராசரியாக 25 தொழில்களுக்கு விண்ணப்பங்களை அனுப்பி வந்தேன். சில சமயங்களில் ஒரு வாரத்திற்கு 50 விண்ணப்பங்களையும் அனுப்பியதுண்டு. இவற்றுக்கு மிகவும் அரிதாகவேப் பதில்கள் கிடைத்தன. எனது மின்னஞ்சல் கிடைத்தது. ஆனால் நான் தேர்வு செய்யப்படவில்லை என்றுகூட அறிவிப்பதில்லை' என்றார்.

அவ்வப்போது, துப்புரவாக்கல், தோட்டவேலை, நிர்மாணவேலைகள் போன்றவை பகுதிநேரத் தொழிலாக அவருக்குக் கிடைத்தனவாம்.

ஆனால், தான் முழு நேர வேலையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானிய மருத்துவர் மேன்முறையீடு

ஒசாமா பின்லேடனை அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினருக்கு உதவியாகச் செயற்பட்ட பாகிஸ்தான் மருத்துவரான சகீல் அவ்ரிடிக்கு வழங்கப்பட்ட 33 வருட சிறைத்தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படும் என்று பாகிஸ்தான் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் கைபர் பிராந்தியத்திலுள்ள பழங்குடி நீதிமன்றமொன்று கடந்த புதன்கிழமை சகீல் அவ்ரிடிக்கு 33 வருட சிறைத்தண்டனை விதித்தது.

கைபர் நிர்வாகத்திடம் இந்த வழக்கு விசாரணை மற்றும் தண்டனை குறித்த ஆவணங்களைக் கோரியுள்ளோம். அவை கிடைத்தவுடன் நாம் மேன்முறையீடு செய்வோம் என எல்லைப்புற குற்றவியல் மறுசீரமைப்பு ஆணையாளரான சமியுல்லா அவ்ரிடி தெரிவித்துள்ளார்.

மேற்படி மருத்துவர் தேசத்துரோகக் குற்றம் எதனையும் செய்யவில்லை எனவும் அவர் தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக செயற்பட்டார் எனவும் சட்டத்தரணி சமியுல்லா அவ்ரிடி கூறியுள்ளார்.

மருத்துவர் அவ்ரிடிக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து பாகிஸ்தானுக்காக அமெரிக்காவின் வருடாந்த நிதியுதவியில் 33 மில்லியன் டொலர்களைக் குறைப்பதற்கு அமெரிக்க செனட் குழுவொன்று தீர்மானம் நிறைவேற்றியது.

அவ்ரிடிக்கான சிறைத் தண்டனையின் ஒவ்வொரு வருடத்திற்கும் தலா ஒரு மில்லியன் டொலர்வீதம் பாகிஸ்தானுக்கான நிதியுதவியில் குறைக்கப்பட்டுள்ளது.

# மாலியின் எல்லையில் பதற்றம்

ஆபிரிக்காவின் புர்கினோ, பெஸோ, மாலி ஆகிய நாடுகளுக்கு இடையிலான எல்லையில் நில உரிமைக்கான பழங்குடியினரின் மோதல் காரணமாக கடந்த சில நாள்களில் சுமார் 25 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாலியின் கிராமமான சாரியில் டோகன் பழங்குடி இனத்தவர்களுக்கும் புர்கினோவின் பெவல் பெஸோ இனத்தவர்களுக்கும் இடையில் இந்த மோதல் வெடித்தது.

பெவல் கிராமத்தைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.



[illegible] இருந்து இபொத்துக்கு விடுதலை கோட்டு அந்நாட்டு பெண்கள் வீதியில் இறங்கி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உக்கிரமடைகின்றன தாக்குதல்கள்

## அல்குவைதாவை ஒழிக்க யேமன் இராணுவம் தீவிர முயற்சி

ஷனா, மே 28

யேமன் நாட்டின் வடக்குப் பகுதியில் அல்குவைதா தீவிரவாதிகள் பதுங்கி இருந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இவர்களை ஒடுக்குவதில் யேமன் இராணுவமும் அமெரிக்க போர் விமானங்களும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை தலைநகர் ஷானாவில் நடைபெற்ற இராணுவ அணி வகுப்பில் தற்கொலைத் தீவிரவாதி புகுந்து குண்டை வெடிக்கச் செய்ததில் 100 இராணுவத்தினர் கொல்லப்பட்டதை அடுத்து யேமன் இராணுவத்தினர் தீவிரமாக அல்குவைதா தீவிரவாதிகளை வேட்டையாடி வருகின்றனர். அபியான் பகுதி



யில் உள்ள ஜார் என்ற இடத்தில் இராணுவத்தினர் கடும் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர். இதில் 33 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இவர்கள் எகிப்து, சோமாலியா நாடுகளில் இருந்து ஊடுருவியவர்கள் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இதே போல அமெரிக்க போர் விமானங்களும் குண்டு வீசி தாக்கின. இதில் எத்தனை தீவிரவாதிகள் இறந்தனர் என்பது அறிவிக்கப்படவில்லை.

### பயணத்தை நிறுத்தினார் சீனத் தலைவர்

லண்டன், மே 28

பிரிட்டன் பிரதமர், புத்த மதத் தலைவர் தலாய் லாமாவை சந்தித்துப் பேசியதால் சீனத் தலைவர் தன்னுடைய பிரிட்டன் பயணத்தை இடைநிறுத்தினார். சீனாவைச் சேர்ந்த அரசியல் உயர் மட்டத் தலைவர்களில் ஒருவரான வூபங்குவோ பிரிட்டனில் இந்த மாத இறுதியில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்தார்.

இந்த நிலையில் நோபல் பரிசு பெற்றதற்காக இந்த மாத தொடக்கத்தில் பிரிட்டன் சென்ற தலாய்லாமா அந்த நாட்டின் பிரதமர் டேவிட் கேமரூன் மற்றும் பல்வேறு தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். தலாய்லாமாவை பிரிட்டன் தலைவர்கள் சந்தித்துப் பேசியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சீன அரசு பிரிட்டன் பயணத்தை ரத்துச் செய்துள்ளது.

# ஆசீர்வாதப்பரின் ஆவணங்களை திருடிய பணியாளர் கைது



வத்திக்கான், மே 28

ஆசீர்வாதப்பர் 16ஆவது பெனடிக்டின் தலைமைப் பணியாளர் பவுலோ கேப்ரியேல். இவர் வத்திகான் நகரத்தில் ஆசீர்வாதப்பரின் அரண்மனையில் தங்கியுள்ளார். இவர் அவரது நம்பிக்கைக்கு பாத்திரமானவராகத் திகழ்ந்தார்.

இந்த நிலையில், கடந்த ஜனவரி மாதம் வத்திகான் அரண்மனையில் இருந்த ஆசீர்வாதப்பரின் கடிதங்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் இத்தாலி பத்திரிகைகளில் வெளியாகி இருந்தன. இது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த ஆவணங்களை திருடி வெளியிட்டது யார் என்பதை அறிய பாதிரியார்கள் தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை ஆசீர்வாதப்பர் பெனடிக்ட் அமைத்து இருந்தார். அவர்கள் ஆசீர்வாதப்பருக்கு மிகவும் நெருக்கமானவர்களிடம் விசாரணை நடத்தினார்கள்.

அப்போது ஆசீர்வாதப்பரின் தலைமை பணியாளர் பவுலோ கேப்ரியேல் அவற்றைத் திருடி வெளியிட்டது தெரிய வந்தது. எனவே, இதுகுறித்து பொலிஸில் வழக்குத் தொடரப்பட்டது. அதைத் தொடர்ந்து அவரைப் பொலிஸார் கைது செய்தனர். இதில், வேறு யார் யாருக்குத் தொடர்பு உள்ளது என்பது குறித்தும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன..

# ஐரோப்பிய நாடுகளின் வங்கிகள் விரைவாக சரிகின்றன

மட்ரீட், மே 28

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஒன்றான ஸ்பெயினில் 4ஆவது மிகப்பெரிய வங்கியான பேங்கியா சரிவைச் சந்தித்துள்ளது.

இந்த நிலையில் அரசிடம் இருந்து சுமார் ரூ.13 லட்சத்து 30 ஆயிரம் கோடி (19 மில்லியன் யூரோ) நிதியுதவியைக் கேட்டுள்ளது அந்த வங்கி.

முன்னதாக வங்கி கடனில் மூழ்கி வருவதை அறிந்த ஸ்பெயின் அரசு இரு வாரங்களுக்கு முன்பு சுமார் ரூ.3 லட்சத்து 35 ஆயிரம் கோடி நிதியுதவி அளித்து, வங்கியைப் பகுதியாக தேசியமயமாக்கப்பட்ட வங்கி என அறிவித்தது.

இந்த நிலையில் அந்த வங்கி அரசிடம் மீண்டும் உதவிக்கரம் நீட்டியுள்ளது.

இந்த நிலையில் ஸ்பெயின் அரசுக்கு மேலும் ஒரு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தனது கடன்களைத் திருப்பி அளிக்க நிதியுதவி வேண்டுமென்று கட்லோனியா மாகாண அரசும் கோரிக்கை விடுத்துள்ளது.

முன்னதாக ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான கிரீஸில் கடும் நிதிநெருக்கடி ஏற்பட்டது. வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை, பொதுக் கடனால் அந்த நாட்டு அரசு திணறி வருகிறது.

இந்த நிலையில் மற்றொரு ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் வங்கித்துறை மூலம் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

வீடு, கட்டுமானத்துறைக்கு அதிக அளவில் கடன் அளித்ததன் மூலம் வங்கி சரிந்து விட்டது. வங்கியை மீட்க எந்த விலையும் கொடுக்கத் தயாராக இருப்பதாக ஸ்பெயின் அரசு தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் அந்த நாட்டு பங்குச் சந்தையில் இருந்தும் பேங்கியா வங்கி தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினை தொடர் நிகழ்வாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மேலும் சிலவற்றிலும் பொருளாதாரச் சிக்கல் ஏற்படும் என்று கருதப்படுகிறத்





உங்கள் முன்னேற்றத்தின் ஊன்றுகோல் எம்மிடம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணத்தைக் குறைந்த கொடுப்பனவு முறையில் துரித கதியில் பெற்றுக்கொள்ளுங்கள்.

தொலைபேசி: (011) 4 218 218

www.nationstrust.com

Nations Trust Bank Nations Leasing (சி/87)

Tilko Jaffna City Hotel(Pvt) Ltd.

- திருமண மண்டபம்
- மணவறை அலங்காரம்
- மணப்பெண் அலங்காரம்
- திருமண கார் சேவை
- Honeymoon Rooms

Tilko Jaffna City Hotel(pvt) Ltd.
70/6, K.K.S. Road, Jaffna
T.P : 021 2225969, 077 1064385
077 6943479 (சி/162)

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1972 இல் பிறந்த, பூரட்டாதி, 3 ஆம் பாதம், பாவம் 10 ¼, தனியார் நிறுவன மொன்றில் கணக்காளராகப் பணிபுரியும், எந்தவித தீயபழக்கமற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
தொ.பே. 077 142 1556 (18826) (45.6.9)

மருத்துவ உதவியாளர் பயிற்சி

O/L வரை கற்றிருக்கும் அனைவருக்கும் கே.யு வின் பிரபலமான தொழில் வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்ட பயிற்சி நெறி.
M.B.B.S வைத்தியர்களிடம் நேரடியாக கற்கும் அரிய வாய்ப்பு.
பயிற்சிக்கட்டணம் : 12,500/= (6 Months)
லாவா வைத்தியசாலையில் செயன்முறைப் பயிற்சிகள்

Knowledge Universe
No 75, Temple Road, Jaffna
Call : 0213208342/0776458253
www.kugroup.info (C/304)




www.titusstores.com
0777-384671 (C/88)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி
பழைய மாணவர் சங்க வருடாந்தப்
பொதுக்கூட்டமும் ஒன்று கூடலும்

- காலம்: 10.06.2012 ஞாயிற்றுக்கிழமை
- காலை 9 மணிக்கு விளையாட்டு நிகழ்வுகள்
- பிற்பகல் 12.30 மணிக்கு மதிய போசனம்
- பிற்பகல் 1.30 மணிக்கு பொதுக்கூட்டம்

நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அங்கத்தவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ. ராஜமகேந்திரன் தலைவர் (சி/387) (45.9.7) க. கிரிஸ்கந்தராஜா செயலாளர்

மரண அறிவித்தல்

பேனாட் கீத பொன்கலன்



யாழ்.நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் சந்தையடி முரசுமோட்டையை வதிவிடமாகவும் கொண்ட பேனாட் கீத பொன்கலன் நேற்றுமுன்தினம் (26.05.2012) சனிக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி பேனாட் கதிர்காமர் - அக்னேஸ் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகமுத்து தம்பதியரின் மருமகனும், இந்திராவின் அன்புக் கணவரும், எட்வின் டயஸ் (கண்ணன் - முரசுமோட்டை), துசிதா (தர்சி - கனடா), சர்மினி (பிரியா -லண்டன்), பிரசாத் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருளப்பு(கனகபுரம்), பிலோமினா, பேபி (வவுனியா), மரிய உதயபுஸ்பம் (பிரான்ஸ்), மரியநாயகம் (கிராம அலுவலர், உருத்திரபுரம்), அன்ரன் இராயப்பு (வவுனியா), மரிய ஸ்ரெலா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலாதினி (முரசுமோட்டை), சந்திரசேகர் (கனடா), கமலராசா (லண்டன்), ரேணுகா (இராமநாதபுரம்) ஆகியோரின் அன்பு மாமனும், கீர்த்தனன், கீர்த்தனா, ஜனார்த்தனன், விபுஷா, அபி, நிலவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (30.05.2012) புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு முரசுமோட்டை சதாசகாய மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு முரசுமோட்டை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முரசுமோட்டை, பரந்தன். தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடா நட்பு வாழ்க்கையை சீரழிக்கும்!

நட்பு இல்லாத மனிதன் இந்த உலகில் இல்லை என்றே கூறுமளவிற்கு நட்பு வாழ்க்கையில் முக்கிய பங்கெடுத்துக் கொள்கின்றது. எல்லோருக்கும் எல்லாப் பருவங்களிலும் நண்பர்கள் கிடைக்கின்றார்கள், சிலர் ஆரம்ப கால அரைக் காற்சட்டை வாழ்க்கையோடு விடை பெறுகிறார்கள். சிலர் கல்லூரிக்கால வாழ்க்கையுடன் நின்று போய் விடுகிறார்கள். வேறு சிலர் அலுவலக வட்டத்துக்குள்ளேயே ஓடி ஓய்ந்து விடுகிறார்கள். இன்னும் சிலர் வாழ்க்கைத் துணையாகவும் மாறிவிடுகின்றார்கள்.

வெகு சில நண்பர்களே இந்த எல்லைகளை எல்லாம் தாண்டி எமது இதயத்தின் மேடையில் கூடாரமடித்துக் குடியிருக்கிறார்கள். நமது வாழ்க்கையின் பாதையில் நண்பர்களின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது. இளம் வயதில் நண்பர்களுடன் அதிக நேரம் செலவிடுவதால் நண்பர்களின் குணாதிசயங்கள் நம்மையும் தொற்றிக் கொண்டு விடுகின்றன.

வாச மலர்களை மாலையாகத் தொடுக்கும் வாழைநார் கூட பூவின் வாசனையைப் பெற்று நறுமணம் வீசுகின்றது. அதுபோல சாக்கடையில் வீழ்ந்த நறுமண மலரும் சாக்கடையின் வாசத்தையே பெற்று விடுகின்றது. ஒருவருடைய குணாதிசயங்களை அவருடன் நெருங்கிப் பழகும் நண்பர்களை வைத்து சுலபமாக கணித்துக் கொள்ள முடியும் என்பதும், ஒருவருடைய பொருளாதார நிலையைக் கணிப்பிட அவர் சந்தையில் வாங்கும் பொருள்களை வைத்து கணித்துக் கொள்ள முடியும் என்பதும் பழமொழிகளாகும். விளக்கமாகக் கூறுவதாயின் ஒருவரின் அகத்தின் அழகை முகம் காட்டுவதுபோல், அவரின் குணத்தின் அழகை நண்பர்களின் நடத்தையில் கண்டு கொள்ள முடியும் எனக்கூறலாம்.

ஒரு மனிதனுடைய வெற்றிக்கும், தோல்விக்கும் பெரும்பாலான நேரங்களில் நண்பர்களே காரணமாக இருக்கிறார்கள். அதனால்தான் நமக்கு அமையும் நண்பர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. அதனால் போலும் வள்ளுவன் "அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண் அல்லல் உழப்பதாம் நட்பு" என அறிவுறுத்துகின்றார்.

நல்ல நண்பர்கள் எப்படி நம்மை உயரப் பறக்கவிடுவார்களோ, அதே போல தீய நண்பர்கள் நம்மை உயரத்திலிருந்து இழுத்து பள்ளத்தில் போட்டு விடுவார்கள். ஒரு நல்ல நண்பனிடம் இருந்து நல்ல பல விடயங்களைக் கற்றுக் கொள்ளலாம் அதேபோல் தீய நண்பர்களிடம் இருந்து தீய பழக்க வழக்கங்களையும், தீய குணங்களையுமே கற்றுக் கொள்ளலாம்.

உண்மையான நண்பன் உங்களுடைய ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவான். உங்களுடைய முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவான். உங்களைத் தீய வழியில் இழுக்கமாட்டான் என்பதை மனதில் அழுத்தமாய் எழுதுங்கள்.

ஒருவேளை நீங்கள் புகை, மது போன்ற பழக்கங்களில் இருந்தால் உங்களை அதில் இருந்து வெளியே கொண்டு வருவதுதான் உண்மையான நண்பனின் பண்பு. அந்தச் செயலை உற்சாகப்படுத்தி விடுவது அல்ல.

நல்ல நண்பன் உங்கள் தவறுகளைக் கடிந்து கொள்வான். உங்கள் மனம் கோணாமல் எப்போதும் நல்ல விடயங்களையே சொல்லிக் கொண்டிருப்பவன் ஆத்மார்த்த நண்பன் அல்லன். நல்ல நண்பன் நாளைய வாழ்வில் நீங்கள் நன்றாக, இருக்க வேண்டும் எனும் ஆர்வம் கொள்பவன். அப்படிப்பட்டவர்கள் உங்கள் குறைகளை உங்களிடம் சுட்டிக் காட்டத் தயங்கமாட்டார்கள், அதற்காக நட்பே போனால் கூட கவலைப்படமாட்டார்கள்.

"நான் தண்ணியடிக்கிற விஷயத்தை அப்பாகிட்டே சொல்லாதே" என்பது போன்ற ஒருவனின் சத்தியங்களை கோரிக்கைகளை நல்ல நண்பன் கண்டுகொள்வதில்லை. சில நேரங்களில் சத்தியம் கூட மீறப்பட வேண்டும் என்பது உண்மைத் தோழனுக்குத் தெரியும்.

உங்களுடைய இலட்சியங்களை உங்கள் நண்பன் ஆதரிக்கிறானா? அல்லது அவனுடைய செயல்பாடுகள் உங்களுடைய இலட்சியத்துக்குத் தடைக்கல்லாய் இருக்கின்றதா? என்பதைப் பாருங்கள். உங்களுடைய இலட்சியங்களைக் கிண்டலடிப்பவனோ, அதை நோக்கிய உங்கள் பயணத்தின் போது உங்களுக்கு ஊக்கமளிக்காமல் இருப்பவனோ உங்களுடைய நண்பன் அல்ல.

உண்மையான நண்பன் உங்களுடைய திறமைகளை முழுமையாய்ப் பயன்படுத்த ஊக்குவிப்பான். உதாரணமாக ஓர் இசைக்கலைஞன் ஆவதுதான் உங்கள் இலட்சியமெனில், அதற்கு என்னென்ன செய்ய வேண்டும் எனும் விஷயங்களில் உங்களுக்கு உதவி செய்வான். உங்களைப் படிப்படியாக அந்தப் பாதையில் நடத்துவான். வெறுமனே உங்களுடைய வெற்றிகளில் வந்து கை குலுக்கிவிட்டுப் போகும் மனிதனாக அவன் இருப்பதில்லை.

மற்ற நண்பர்களைப் பற்றி உங்களிடம் தரக்குறைவாக விமர்சிக்கும் நண்பர்களிடம் கொஞ்சம் கவனமாய் இருங்கள். உங்களைப் பற்றி அவர்கள் வேறு நண்பர்களிடமும் அதே போலப் பேசித் திரியும் வாய்ப்பு உண்டு. நீங்கள் எந்த நண்பனுடன் இருக்கும் போது, அடுத்தவர்களைப் பற்றி ஏகப்பட்ட கிசுகிசுக்களை அவிழ்க்கிறார்கள் என யோசியுங்கள். அந்த நண்பன் நல்ல நண்பன் அல்லன் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்,

அன்னை திரேசாவின் வாழ்வில்....

அன்னை திரேசா சிறுமியாக இருந்தபோது அவருடைய தோழியரில் ஒரு தீய தோழி இருப்பதை அவருடைய தாய் கவனித்தார். ஒரு தீய நட்பு நல்லவர்களையும் கெடுத்துவிடும் எனவே அந்த நட்டைத் துண்டிக்க வேண்டும் என திரேசாவின் தாய் முடிவெடுத்தார்.

ஒருநாள் அவர் திரேசாவை அழைத்தார். அவருடைய கையில் ஒரு பெரிய பெட்டியில் நிறைய அப்பிள் பழங்கள் இருந்தன. அழகான அப்பிள் பழங்களைக் கண்ட திரேசாவின் கண்கள் ஆனந்தத்தில் விரிந்தன.

(தொடரும்)

# கலை உலகில் நீங்கா இடம்பிடிக்க ரசிகத் தன்மை காரணமாக அமைகிறது

## அருட்பணி யோசுவா தெரிவிப்பு

தென்மராட்சி, மே 28

கலைஞன் பல்வேறு வகைகளில் உருவாக்கப்படலாம். ஒவ்வொரு கலைத்துறையிலும் ஆர்வமுள்ள, ரசனையுள்ள பலர் உள்ளனர். இவர்களின் திறமைகளை வெளிக்கொணர கலை உலகம் முயற்சி செய்து வெற்றியும் பெற்றுள்ளது.

அந்த வகையில் பல்வேறு கலைஞர்களை நாம் கண்டுள்ளோம். கலை உலகில் உணர்வு பூர்வமாக, பழக்கதோஷமாக, பாரம்பரிய பரம்பரையாக ஈடுபடுவது வழக்கம்.

அவ்வாறு அவர்கள் கலை உலகில் நீங்கா இடம் பிடிக்க மக்கள் மத்தியில் காணப்பட்ட ரசிகத் தன்மை காரணமாகிறது என தூது சஞ்சிகையின் ஆசிரியரும் எழுத்தாளருமான கலைமாமணி அருட்பணி ரீ.எஸ்.யோசுவா அடிகள் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகராட்சிமன்ற கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற சு.புத்திசிகாமணி எழுதிய 'சுவடிகள்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டு உரை நிகழ்த்தும் போதே யோசுவா அடிகள் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:-

கலைஞன் உருவாக்கப்படுகின்றான். எழுத்தாளன் உருவாகின்றான். உருவாக்கப்படும் கலைஞன் ரசிகர்களினால் பாராட்டப்படுகின்றான். சிருஷ்டிகர்த்தாவாக உருவாகும் எழுத்தாளன் வாசகர்களினால் ஊக்குவிக்கப்படுகின்றான். வாசகர்களே பிரதான காரணிகளாக விளங்குகின்றனர். மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க பல்வேறு செயற்றிட்டங்கள் உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் இக்காலத்தில் இவ்வாறான நூலை உருவாக்கிய நூலாசிரியரையும் அவரை ஊக்குவிக்கும் வகையில் நூலை வெளியீடு செய்த சாவகச்சேரி நகராட்சிமன்றத்தையும் இந்த நிகழ்வில் பாராட்ட வேண்டும்.

**உருவாக்கப்படும் கதையை நூல் வடிவில் வெளிக்கொணர்வதில் உள்ள சிரமம் வார்த்தைகளால் கூற இயலாதது.**

**எழுத்தாளனின் மனதில் உருவாகும் கருவானது நூல் வடிவாக வெளிவரும் போது அவன் மனதில் எழும் மகிழ்ச்சி கணக்கிட முடியாதது.**

ஒரு கருப் பொருளை நூல் வடிவில் கொண்டு வருவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது. நூலின் ஆரம்பம் முதல் இறுதி வரை வாசகர்களின் ரசனைக்கேற்ற விதத்தில் எளிதான வாக்கியங்களை அமைத்து உருவாக்க வேண்டும்.

அவ்வாறு உருவாக்கப்படும் கதையை நூல் வடிவில் வெளிக்கொணர்வதில் உள்ள சிரமம் வார்த்தைகளால் கூற இயலாதது.

எழுத்தாளனின் மனதில் உருவாகும் கருவானது நூல் வடிவாக வெளிவரும் போது அவன் மனதில் எழும் மகிழ்ச்சி கணக்கிட முடியாதது.

அந்த நூலானது சமூகத்தின் மத்தியில் நற்பெயரைப் பெறும் போது கிடைக்கும் மகிழ்ச்சியானது அதனிலும் பெரிதானது.

ஓர் எழுத்தாளனுக்கு தனிமை என்பது மிகமிக அவசியம். அவன் சிந்தனையில் கிடைக்கும் கருத்துகளை உடனுக்குடன் குறித்து வைக்க வேண்டியதற்காகவே தனிமை தேவைப்படுகிறது - என்றார். (எ-9)



பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் மகளிர் மீள் எழுச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி யாழ்.நாவலர் வீதியில் உள்ள தியாகிகள் அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது. இந்தத் திட்டத்தில் 50 யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். யாழ். பிரதேச செயலகத்தின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தியாகிகள் அறக்கொடை நிலைய துறை சார் ஊழியர்கள் ஆகியோரின் ஆலோசனை வழிகாட்டலில் தியாகிகள் அறக்கொடை நிலையம் ஊடாக மாதாந்தம் 500 ரூபா உதவித் தொகையாக வழங்கப்பட்டு பொருளாதார முயற்சிகளில் ஈடுபடுவதற்கான சந்தை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மீள் எழுச்சித் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக சுவிற்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் நிலாஜினி தியாகேந்திரன் கலந்து கொண்டு உதவித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (எ-14)

## வடமாகாண எழுத்தாக்க போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 28

மாகாணநிலைத் தமிழ் மொழித் தினப்போட்டிகள் -2012 இன் எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. விவரம் வருமாறு:-

**சிறுகதை ஆக்கம்**

முதலாம் இடம் அ.கஜன் மு/மல்லாவி மத்திய கல்லூரி, இரண்டாம் இடம் சு.சோபிகா யா/ மகாஜனக் கல்லூரி, மூன்றாம் இடம் ய.பெரஸ்ரினா கிளி/வேரவில் இந்து ம.வி,

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து பிரிவு 1**

நிர்மாணி வக்சலா வ/அக்ர போதி ம.வி,

**பிரிவு 2**

கவிசா சந்தகெரணி வ/மடு கந்த ம.வி,

**வவுனியா மாவட்ட முடிவுகள் ஆக்கம் எழுத்து**

முதலாமிடம் - பீ.விபீசாளினி வ/பூந்தோட்டம்.மவி., இரண்டாமிடம் - இ.யசோதா வ/ஓமந்தை ம.க.

**கட்டுரை வரைதல்**

முதலாமிடம்- அ.சரஞ்சியா வ/இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை, இரண்டாமிடம்- ப.பரணிசா வ/நெடுங்கேணி ம.வி.

(தொடரும்)

# நூலக வலுவூட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 28

கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் வாராந்தம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்படும் நூலக வலுவூட்டல் நிகழ்வின் 16 ஆவது நிகழ்வு அண்மையில் நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூலக வாரமும், ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலைய பல்சுவை கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

நூலக வாசகர் வட்ட மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் நூல்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வுச் செயற்பாடாக இடம்பெறும்.

இந்த நிகழ்வில் கோண்டாவில் பொது நூலகத்தில் அதிக நூல்களை வாசித்துப் பயன்பெற்ற வாசகர் வட்ட மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் எஸ். கேதீஸ்வரன், நல்லூர் பிரதேச சபை செயலர் மேரி யோசப் சாந்தசீலன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சு. சுரேஸ்குமார், கோண்டாவில் பொது நூலகர் கே.அனிதா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு நூலக விழிப்பூட்டல் தொடர்பான ஆலோசனைக் கருத்துக்களை வழங்கினர்.

இந்த நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையத்தைச் சேர்ந்தவர்களின் இசைச் சங்கமமும் இடம்பெற்றது.

(எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021 222 9933,
222 9944, 567 9933, 567 9944
விளம்பரம்:021 567 1111
விநியோகம்: 021 567 7222
தொலைநகல்
செய்தி: 021 567 8844,
விளம்பரம்: 021 222 9731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 226 2789,
021 226 2395

சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா கொமன்ஸ்' - மாலுசந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன்ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுதன் ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## சுதேசியத்தை அழிக்கும் கூலிப்படை

வடக்கு, கிழக்கில் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரை அகற்றக் கோரிய அழுத்தங்கள் இலங்கை அரசுக்கு இப்போது பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது.

கடந்த வாரத்தில் பிரிட்டிஷ் தூதுவர், இலங்கையில் ஏனைய பகுதிகளில் அதாவது தெற்கில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரின் அளவுக்கு வடக்கு, கிழக்கின் இராணுவப் பிரசன்னமும் குறைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தார்.

இந்த வலியுறுத்தலை அடியோடு மறுத்த இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய, அதற்கு சூடான ஒரு பதிலை வழங்கியிருக்கிறார். வடக்கு, கிழக்கில் இன்னமும் கிளர்ச்சியாளர்களும், கிளர்ச்சியைத் தூண்டக் கூடியவர்களும் இருக்கின்றனர். அவர்களால் தேசிய நலனுக்கும், நாட்டின் இறைமைக்கும் எப்போதும் ஆபத்து இருந்து கொண்டே இருக்கின்றது என்று, கொடுத்திருக்கும் விளக்கத்தின் ஊடாக வடக்குக் கிழக்கிலிருந்து ஒரு போதும் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படமாட்டாது என்பதை தெளிவுறுத்தியிருக்கிறார்.

உண்மையில் இவர் குறிப்பிடுவது போன்று வடக்குக் கிழக்கில் இலங்கையின் இறைமைக்கு அச்சுறுத்தல் விடுக்கக் கூடிய வகையில் எந்த பயங்கரங்களும் இல்லை என்பதை மக்கள் உணர்ந்திருக்கின்றனர். குவிக்கப்பட்டிருக்கும் இராணுவம் இங்கிருக்கும் பொதுமக்களின் வாழ்க்கையை சீர்குலைக்கவே அன்றி, பாதுகாக்க அல்ல என்பதையும் மக்கள் உணர்ந்திருக்கின்றனர். ஆக இராணுவப் பேச்சாளர் குறிப்பிடுவது போன்று வடக்கு, கிழக்கில் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினர் இப்போது நாட்டில் தேசிய நலனைக் காப்பதற்கு கடமையாற்றுவதாகத் தெரியவில்லை.

இந்தப் பிராந்தியத்தில் பணியாற்றும் இராணுவத்தினர் தமிழர் வாழும் நிலங்களை சிங்கள மயப்படுத்தும் பணிகளிலேயே இப்போது தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

முன்னர் விடுதலைப் புலிகள் வசமிருந்த காணிகளையும், பொதுமக்கள் தேவைக்காக அரசு வழங்கியிருந்த பொதுக் காணிகளையும் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டுக் காணிகளையும் ஆக்கிரமித்து அதனை தமது தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றனர். இறுதியாகப் போர் நடைபெற்ற புதுக்குடியிருப்பு, கேப்பாபுலவு, மாத்தளன், இரணைப்பாலை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் போன்ற பகுதிகளில் இவ்வகையான ஆக்கிரமிப்பு, பாதுகாப்பின் பேரில் இன்றும் அரங்கேறுகின்றது. இந்த இடங்களை தமது சொந்த வாழ்விடங்களாகக் கொண்ட தமிழ் மக்கள் இன்னமும் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருப்பது தான் வேதனைக்குரிய ஒன்றாக இருக்கின்றது. சிங்கள மக்கள் சுற்றுலா சென்று அந்த இடங்களில் தங்கியிருக்க முடியுமானால், தமிழர்களால் மட்டும் ஏன் அங்கு மீளக்குடியமர முடியாது?

இப்போது வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் பௌத்த கலாசார மேலாதிக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் இராணுவத்தினர் மிக முக்கிய பங்காற்றுகின்றனர். பௌத்த துறவி ஒருவர் சிங்களப் பண்பாட்டை வளர்க்க பாடுபடும் அளவுக்கு, இங்கு நிலை கொண்டிருக்கும் சிங்கள சிப்பாய் ஒருவனும் பணியாற்றுகின்றான். இராணுவத்தின் தலைமையிலேயே வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் பௌத்த விகாரைகள் முளைக்கின்றன.

எனவே இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டிருப்பது போன்று வடக்கு, கிழக்கில் குவிக்கப்பட்டிருக்கும் படையினர் நாட்டின் பாதுகாப்புக்காக பணியாற்றுபவர்கள் அல்லர். அவர்கள் தமிழ் மக்களின் சுதேசியத்தை அழிக்கும் பணியில் அமர்த்தப்பட்ட கூலிப்படையே.

# ஏணியும் பாம்பும்

■ தமிழில்- வி.எஸ்.ரி

*சிங்கள மூலம்- கீர்த்தி ரூபசிங்க மனம்பிம*

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் காரணமாக இன்று நாட்டு மக்கள் பெரும் சிரமங்களுடன் வாழ்க்கையை செலுத்த நேர்ந்துள்ளது. அவர்களது அன்றாட அத்தியாவசியப் பாவனைப் பொருள்கள் அனைத்தினதும் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமை நீடித்தால் அரசின் வீழ்ச்சிக்கு அதிக காலம் ஆகப் போவதில்லை. எதிர்வரும் நவம்பர் மாதமளவில் ஜனாதிபதி மஹிந்தவை ஆட்சியினின்றும் வீழ்த்தி, எம்மால் அரசைக் கைப்பற்ற இயலும் என அண்மைக் காலமாக எதிர்க்கட்சியினர் நம்பி வருகின்றனர்.

ஆயினும், அண்மையில் உலகப் பிரசித்தி பெற்ற, அமெரிக்காவின் முன்னனி நிறுவனமொன்றான 'ஹேரால்அப்' நிறுவனம், ஆசியாவின் பிரபலமான அரசியல் தலைவர்கள் குறித்து மேற்கொண்ட பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின் முடிவுகளின் படி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான இன்றைய அரசை இந்த நாட்டின் பொதுமக்களில் 91 சதவீதத்தினர் ஆதரிப்பதாகவும், ஆசியாவின் மக்கள் ஆதரவு பெற்ற அரசியல் தலைவர்களில் மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது இடத்தில் முன்னிலை வகிப்பதாகவும் தெரிய வந்துள்ளது. இதன் மூலம், அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் விலையேற்றம், வாழ்க்கைச் செலவு உயர்வு என்பவற்றை முன்வைத்து இன்றைய அரசைப் பதவியிலிருந்து அகற்றி விடலாம் என்ற எதிர்கட்சியினரின் நம்பிக்கை அத்தனை இலகுவில் கைகூட வாய்ப்பில்லை. அரசு மீதான மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களுடன், சில நாள்களுக்கு முன்னர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவின் விடுதலை குறித்தும், அரசை விமர்சித்து அதன் மூலம் அரசியல் இலாபமீட்டும் எதிர்கட்சியினரின் நோக்கமும் நாட்டு மக்கள் மத்தியில் வரவேற்புக்கு உரிய தொன்றாக அமையவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை ஏற்று ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் நிறைவடையும் நிலையிலும் அவரால் நாட்டின் பெரும்பாலான பொது மக்களது ஆதரவைத் தக்க வைத்துக் கொள்ள முடிந்திருப்பது புதுமையான தொன்றே. எந்தவொரு அரசுத் தலைவரும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி இரண்டோ மூன்றோ ஆண்டுகள் கழிந்ததும், பொது மக்களது ஆதரவை இழக்க நேர்வது வழமையானதொன்றே.

இதற்கு உதாரணம் வேறெங்கும் தேட வேண்டியதில்லை. இலங்கையின் கடந்த கால அரசியல் வரலாற்றில் இதற்கு நிறையவே உதாரணங்கள் உள்ளன.

1977 ஆம் ஆண்டு ஆறில் ஐந்து மடங்கு நாடாளுமன்ற பெரும்பான்மையுடன் அரசமைத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, 1982 ஆம் ஆண்டில் இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் நாட்டு மக்கள் மத்தியில் தமது தொடர்ச்சியான செல்வாக்கை உறுதிப்படுத்திக் காட்டினார். ஆயினும் 1983 கறுப்பு ஜூலை கலவரத்தையடுத்து அவரது மக்கள் செல்வாக்கு படிப்படியாக வீழ்ச்சி கண்டது.

1988 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக பதவியேற்ற பிரேமதாசவுக்கும், இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே பல வித ஒற்றுமை உள்ளது. பிரேமதாசவைப் போன்று மஹிந்த ராஜபக்ஷவும் அரசியலில் கீழ் நிலையிலி[illegible] வேளையில் பத்தாண்டுகள் கால ஐ.தே.கவின் ஆட்சியின் பழைய பழிபாவங்களைச் சுமந்து கொண்டே பதவியில் அமர்ந்தார். அதே போன்று மஹிந்த ராஜபக்ஷ அரச தலைவராகப் பதவி ஏற்ற வேளை ஒன்பது ஆண்டுகள் கால சுதந்திரக் கட்சி ஆட்சியின் பழைய பழிபாவங்களைச் சுமந்து கொண்டே பதவியில் அமர்ந்தார்.

பதவிக்கு வந்து மூன்று ஆண்டுகள் காலமே பிரேமதாசவால் நேரான வழியில் நாட்டை நிர்வகிக்க முடிந்தது. 1991 ஆம் ஆண்டில் தமக்கெதிராக அந்த வேளையில் லலித் அத்துலக் முதலி மற்றும் காமினி திஸநாயக்கா ஆகியோரால் தமக்கெதிராக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையுடன் பிரேமதாசவின் வீழ்ச்சி ஆரம்பமாகியது. அதன் பின்னரான இரண்டாண்டுகள் காலம் வரை மட்டுமே பிரேமதாசவால் பதவியில் நீடித்திருக்க முடிந்தது.

1994 ஆம் ஆண்டில் ஜனாதிபதி பதவியை ஏற்ற சந்திரிகா, 1999 ஆம் ஆண்டிலும் இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்தார். விடுதலைப் புலிகளது தாக்குதல் காரணமாக படுகாயமுற்றதால் பொது மக்கள் மத்தியில் உருவான அனுதாப அலையே சந்திரிக்காவின் இரண்டாவது தடவை ஜனாதிபதி தேர்தல் வெற்றிக்கு வழி செய்தது. ஆயினும் அதன் பின்னர் நீண்ட காலமாக பதவி வகிக்க சந்திரிகாவுக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி வெற்றி பெற்று பதவியைத் தொடர்ந்த போதிலும், ஓராண்டு காலம் முடிவடையும் முன்னர் சந்திரிகா அரசு கவிழ்க்கப்பட நேர்ந்தது.

இவையாவற்றையும் சுட்டிக்காட்டிப் பார்த்துத்தான் இன்று எதிர்க்கட்சியினர் இன்றைய மஹிந்த அரசை எதிர்வரும் நவம்பர் மாதத்துள் தம்மால் கவிழ்த்துவிட இயலும் என்று நம்புகின்றனர் போலும்.

இன்று பொருள்கள் விலை உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் மீதான பாலியல் குற்றங்கள் என்பவை தொடர்பாக அரசு மீது தொடர்ச்சியாக எதிர்கட்சியினர் குற்றம் சுமத்தி விமர்சித்து வரும் நிலையில், ஒன்பது ஆண்டுகள் கால சுதந்திரக்கட்சி ஆட்சியின் பழிபாவங்களுக்கு மத்தியில் தன் செல்வாக்கை மக்களிடம் தக்கவைத்திருப்பது அவரின் சாதனையே.

விடுதலைப் புலிகள் இயங்கும் வரை, ஆட்சி அதிகாரத்தில் இருப்போர் எவ்வித பிரச்சினையுமின்றி தமது அதிகாரத்தைத் தக்க வைக்க இயலும் என முன்னர் ஒரு கருத்து இருந்தது.

ஆயினும் மஹிந்த விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து விடுவதில் தீவிரம் காட்டினார். விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்த போதிலும், அவருக்கு சிங்கள மக்கள் மத்தியில் இருந்த ஆதரவு சிறிதளவும் குறைந்து போய்விடவில்லை.

ஆயினும் போரை வென்றெடுத்த ஜனாதிபதியுடன் குறிப்பிடத்தக்க அளவு அர்ப்பணிப்புச் செய்த இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவை 2010 ஆம் ஆண்டில் சிறைக்கு அனுப்பியதன் மூலம் ஜனாதிபதியின் வெள்ளை உடையில் சிறிதளவு கறை படிந்தது. ஜனாதிபதியின் தீவிர ஆதரவாளர்களில் பலர், இராணுவத்தளபதி சிறைக்கனுப்பப்பட்டமை தொடர்பாக ஜனாதிபதி மீது அதிருப்தி அடைந்திருந்தனர்.

சிறைவாசம் அனுபவித்த சரத் பொன்சேகாவுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுவித்ததன் மூலம் தமது வெள்ளை உடுப்பில் படிந்திருந்த கறையை ஜனாதிபதி போக்கிக் கொண்டுள்ளார். அரசில் அங்கம் வகிக்கும் சிலர் இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாதுள்ளனர். சரத் பொன்சேகா சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதன் மூலம் அவரதும் எதிர்க்கட்சிகளினதும் மதிப்பு அதிகரிப்பதாக அவர்கள் கருதுகின்றனர். சிறையிலிருந்து விடுக்கப்பட்டாலும் சரத் பொன்சேகாவுக்கு குடியுரிமை கிடைப்பாது. அவர் தேர்தலிலும் போட்டியிட முடியாது. உண்மையில் அவருக்கு பூரண சுதந்திரம் வழங்கப்படவில்லை என்பதை எதிர்க்கட்சியினர் புரிந்து கொண்டிருக்கும் அளவுக்கு அரசில் அங்கம் வகிக்கும் அந்த அதிருப்தியாளர்கள் புரிந்து கொள்ளவில்லை. சரத் பொன்சேகாவை மன்னிப்பளித்து விடுவித்ததன் மூலம் தமக்கான ஆதரவைப் பெருக்கிக் கொண்டுள்ளவர் மஹிந்த ராஜபக்ஷவே தவிர சரத் பொன்சேகா அல்ல என்பதை எதிர்க்கட்சியினர் நன்கு உணர்ந்துள்ளனர். அவர்கள் சரத் பொன்சேகாவுக்குப் பூரண சுதந்திரம் வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டி குறை கூறி வருவதற்கான அடிப்படைக் காரணம் அதுவேயாகும்.

சரத் பொன்சேகாவைத் தொடர்ந்தும் சிறையில் இருக்கச் செய்ததன் மூலம் அதற்கான பழியை அரசு மீது சுமத்தி உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவமரியாதையை ஏற்படுத்துவதே எதிர்க்கட்சியினரின் குறிக்கோளாக இருந்து வந்துள்ளது.

எதிர்க்கட்சியினரின் இத்தகைய போக்கு உண்மையில் ஒரு 'லூடோ' விளையாட்டுப் போன்றதே. தாயக்கட்டை காட்டும் எண்ணுக்கேற்ப இருக்கும் இடத்திலிருந்து ஏணி மூலம் உயரச் செல்லும் வாய்ப்பும், இருக்கும் இடத்திலிருந்து பாம்பு மூலம் கீழிறங்கும் வாய்ப்பும் இந்த விளையாட்டின் இயல்பு. இன்று மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சியினருடன் விளையாடுவதும் இந்த 'ஏணியும் பாம்பும்' விளையாட்டே. ஆனால் மஹிந்தருக்கு அதிஷ்டவசமாக தாயக்கட்டை எண் மூலம் ஏணியில் உயரச் செல்லும் வாய்ப்பும் எதிர்க்கட்சியினருக்கு கிட்டும் எண் மூலம் பாம்பின் தலையிலிருந்து வால் மூலம் கீழிறங்கும் வாய்ப்பும் கிட்டுவதுதான் பரிதாபம். சரத் பொன்சேகாவின் விடுதலை உணர்த்துவதும் இதனையே.

சரத் பொன்சேகா மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டமை குறித்து சர்வதேசமும் அமெரிக்காவும் மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவித்து வருவதைக் கண்டு எதிர்க்கட்சிகள் கவலை வெளியிட்டு வருகின்றன. அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்டனே, அரசு சரத் பொன்சேகாவை விடுவித்ததற்காக பாராட்டியுள்ளார்.

முன்னர் விடுதலைப் புலிகளதும் உத்தியோகபூர்வ குரலாகச் செயற்பட்ட 'தமிழ் நெற்' இணையத்தளமே இலங்கைக்கு எதிராக உருவாகியிருந்த சர்வதேச எதிர்ப்பலைகளை, சரத் பொன்சேகாவைச் சிறையிலிருந்து விடுவித்ததன் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமயோசிதமாக வேறு பக்கத்துக்குத் திசை திருப்பி விட்டுள்ளார் என விமர்சித்துள்ளது.

இதிலிருந்து புலப்படுவதென்ன? நாற்கோணங்களிலிருந்தும் தீர்க்கமாக அலசி ஆராய்ந்து பார்த்து மிக நுணுக்கமாக கணக்கிட்டு, காலநேர வர்த்தமானங்களைக் கணித்து மிகப் பொருத்தமான சந்தர்ப்பத்தில் சரத் பொன்சேகாவைச் சிறையிலிருந்து விடுவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்தர். சிறையிலிருந்து பொன்சேகா விடுவிக்கப்பட்டமை தொடர்பாக இன்று எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் விமர்சனங்களை நோக்கும் போது மஹிந்தரின் அரசியல் சாணக்கியம் தெட்டத் தெளிவாகப் புலப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவ

# நோயூட்டும் உணவகங்கள்



இன்று மனிதர்கள் தாம் உண்ணும் உணவினாலேயே அதிகம் கொலை செய்யப்படுகின்றனர். கட்டுப்பாடற்ற அளவில் உணவு வகைகளை உட்கொள்வதால் நீரழிவு, கொலஸ்ரோல், இதயநோய்கள் போன்ற பல்வேறுபட்ட நோய்கள் ஏற்படுகின்றன. அது போல் ஆரோக்கியமான நிறை உணவுகளை உட்கொள்ளாமையாலும் குறைபாட்டு நோய்கள் ஏற்படுகின்றன. அத்துடன் இரசாயனப் பதார்த்தங்கள் கலக்கப்பட்ட உணவுகளை உட்கொள்வதால் புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இவை எல்லாவற்றையும் தாண்டி சுகாதாரமற்ற உணவுகளை உட்கொள்வதால் தொற்று நோய்கள் உருவாகின்றன.

தற்போது மக்கள் இயந்திர வாழ்க்கைக்குள் சிக்குண்டு இருப்பதால் சிற்றுண்டிச்சாலைகளிலும், உணவு விடுதிகளிலுமே தமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். ஆனால் அங்கே அவர்களுக்குச் சுவையான உணவு கிடைத்தாலும் சுகாதாரமான உணவு கிடைப்பதில்லை.

மக்களிடையே காசநோயாளர்கள், சருமநோயாளர்கள், சுவாச நோயாளர்கள் போன்றோர் ஏராளமாகக் காணப்படுகின்றனர். இவர்கள் சிற்றுண்டிச் சாலையில் தேநீர் அருந்திய கிண்ணம் அங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ள ஒரே நீரிலேயே அலசப்பட்டு பின்னர் மற்றவர்களுக்குப் பரிமாறப்படுகிறது. அன்று முழுவதும் அதே நீரில் தான் அத்தனை கிண்ணங்களும் அலசுகிறார்கள். இப்படி எத்தனையோ சுகாதாரச் சீர்கேடுகளை இந்தச் சிற்றுண்டிச்சாலைகள் மேற்கொண்டு வருகின்றன. இவற்றைத் திருத்துவதற்குச் சரியான முயற்சிகளை இன்னமும் சுகாதாரத் துறையினர் மேற்கொள்ளவில்லை என்று தான் குறிப்பிட வேண்டும்.

### உணவகத்தின் அமைப்பும், கட்டடமும்

சிற்றுண்டிச்சாலை அல்லது உணவகம் ஒன்றை அமைக்கும் போது அது நிரந்தரக் கட்டடம் ஒன்றைச் சீமெந்தால் கொண்டிருக்க வேண்டும். கட்டடத்தின் நிலம், சுவர் அழுத்தமாக இருப்பதோடு சுவர் தீந்தை பூசப்பட்டிருக்க வேண்டும். அதுவும் எண்ணெய்த் தீந்தையால் பூசப்பட்டிருக்க வேண்டும்.

கூரைப்பகுதி சீலிங் அடித்திருக்க வேண்டும். அதில் ஓட்டைகள் இருக்கக்கூடாது. காற்றோட்ட வெளிச்ச வசதி இருத்தல் வேண்டும். இலையான் புகாத வலை போன்றன பாவித்து இலையான்கள் இல்லாமல் செய்ய வேண்டும். எலி, கரப்பான் போன்றன இருக்கக்கூடாது.

கைகழுவும் பகுதியில் குழாய் நீர் இருத்தல் வேண்டும். அருகில் சவர்க்காரமும் இருத்தல் வேண்டும். உணவு பரிமாறும் பகுதியில் கண்ணாடி அலுமாரி இருப்பதோடு, அது திறந்து உணவு எடுத்ததும் உடனடியாகப் பூட்டக் கூடிய வசதியுடன் இருத்தல் வேண்டும். உணவுகளை கைகளால் எடுக்கக் கூடாது. அதற்குரிய இடுக்கிகளால் எடுத்து பரிமாறல் அவசியம்.

இப்படியாக ஏகப்பட்ட சட்டங்களுடன் சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட வேண்டும் என சுகாதாரத் துறை சொன்னாலும் அவை எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

### சிற்றுண்டிச்சாலை ஊழியர்கள்

சிற்றுண்டிச்சாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல் அவசியம். நெருப்புக் காய்ச்சலுக்கான தடுப்பூசியை அவர்கள் போட்டிருக்க வேண்டும்.

தலைமுடி, நகம் போன்றன ஒழுங்காக வெட்டி, வெற்றிலை பாக்குப் போடாமல், புகை பிடிக்காமல் தனிநபர் சுகாதாரப் பழக்க வழக்கத்தைக் கடைப்பிடித்தல் முக்கியமானவையாகும். தொப்பியும், உடைக்கு மேலே மேல் அங்கி அணிவதோடு, ஆகக் குறைந்தது மெல்லிய நிறத்தினால் ஆன சீருடை அணிதல் வேண்டும்.

ஏனெனில் அப்படியான உடையில் தான் அவர்களுடைய உடல் தூய்மையை அறிய முடியும். ஆனால் பல இடங்களில் தடித்த, கடும் நிறத்தினால் ஆன சீருடையுடன் உணவு பரிமாறுவதை அவதானிக்க முடிகிறது.

### முறைகள்

சமைத்த உணவும், சமைக்காத உணவும் அருகில் வைத்தல் கூடாது. வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் கேட்கும் தேவையான அளவு உணவு மட்டும் கொடுத்தல் வேண்டும். கொடுத்த உணவு மீளப் பெறப்படக்கூடாது. கிண்ணங்களை ஒரே நீருக்குள் கழுவுதல் கூடாது. சுடுநீரில் கட்டாயம் கழுவுதல் வேண்டும். அச்சிட்ட தாளில் உணவு படும்படியாக உணவைச் சுற்றுதல் கூடாது.

அங்கு பாவிக்கப்படும் நீர், நீர்வழங்கல் அதிகார சபையால் நீர் பரிசோதிக்கப்பட்டிருப்பதோடு சிற்றுண்டிச்சாலையில் சேகரிக்கப்படும் கழிவுகள் ஒழுங்கான முறையில் அகற்றப்படவும் வேண்டும்.

இவை எல்லாம் பரிசோதிக்கப்பட்டு மாநகரசபை, பிரதேச சபை போன்ற உள்ளூராட்சி சபைகளால் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் உறுதிப்படுத்தலுடன் அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகின்றது. இந்த அனுமதிப் பத்திரம் வருடம் புதுப்பிக்கப்படல் வேண்டும். இந்த அனுமதிப் பத்திரம் வாடிக்கையாளர் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இப்படியாக உணவகங்கள் உணவு பரிமாறும் பகுதி, களஞ்சியப் பகுதி, சமையலறை, பின் சுற்றாடல் என ஒவ்வொரு பகுதிக்கும் பல்வேறு சுகாதாரச் சட்டதிட்டங்களைக் கொண்டுள்ளது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக மாதாந்தம் உணவகங்கள் பரிசோதிக்கப்பட்டு தரப்படுத்தல் சான்றிதழும் வழங்கப்படுகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் ''ஏ'' தரத்தினால் ஆன உணவகங்களே உணவகங்களுக்குரிய தகுதியைக் கொண்டிருக்கக் கூடியவை. மற்றயவை (பி, சி தரம்) உணவகங்களுக்குரிய தரத்தில் இல்லை. அப்படியானால் அவை இயங்க முடியாதவை. தடை செய்யப்படக் கூடியவை. ஆனால் தரப்படுத்தல் தரப்படுத்தலாகவே இருக்க அவர்களது இயக்கம் தயக்கமாகவே இருக்கிறது.

# கவனிப்பாரற்ற தொண்டர் ஆசிரியர்கள்

மு.சிவநேசன்
*ஓய்வுபெற்ற கிராம அலுவலர்*




இலங்கையில் கல்வி அபிவிருத்தியை மேற்கொள்ளும் கல்வித் திணைக்களம் 2010 ஆம் ஆண்டளவில் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக்க நியமனங்களை வழங்கியது. எனினும் இந்தக் காலத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் விடுவிக்கப்படாததால் இந்த மாவட்டங்களில் கடமையாற்றிய சுமார் 700 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை.

போர் முடிவுற்று மூன்று ஆண்டுகள் முடிவுற்ற நிலையிலும், இந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதில் அரசு தாமதத்தை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் எந்த வித வருமானங்களும் இல்லாமல் கடமையாற்றும் இந்தத் தொண்டர் ஆசிரியர்கள், மிகுந்த வேதனைக்கு மத்தியில் தங்கள் வாழ்க்கையைக் கொண்டு இயக்குவதை நேரடியாகக் காணக் கூடியதாக இருப்பதுடன், இவர்கள் தற்போதும் பெற்றோரின் வருமானத்திலோ, அல்லது சகோதர, சகோதரிகளின் வருமானத்திலோ சீவிக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

கடந்த 2005 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை கல்விக் கடமையை ஆற்றும் இந்தத் தொண்டர் ஆசிரியர்களுக்கு சில பாடசாலை அதிபர்கள் பெற்றோர்களின் உதவியுடன் அல்லது வேறு வழிகளில் பெற்ற சிறிய தொகை நிதியை வழங்கி வந்துள்ளனர். சில பாடசாலைகளில் சக ஆசிரியர்களின் உதவிகளூடாக இவர்களுக்கு சிறு தொகை வழங்கப்பட்டது. எனினும் காலம் செல்லச் செல்ல இந்த நடவடிக்கையும் தற்போதைய நிலையில் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

ஊதியம் பெறாத நிலையிலும் தொடர்ந்து பாடசாலைகளில் கற்பித்தல் வேலைகளைச் செய்து வரும் இந்தத் தொண்டர் ஆசிரியர்கள், பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில் நிரந்தர ஆசிரியர்களுக்கு சமனான கடமைகளைச் செய்து வருகின்றனர். உதாரணமாக பாடசாலைகளில் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டிகள், கோட்ட, மாவட்ட, வலயமட்ட விளையாட்டுப் போட்டிகளிலும், இவர்கள் நிரந்தர ஆசிரியர்களைப் போன்று கடமையாற்றுவதை அவதானிக்க முடிகிறது. அத்துடன் பாடசாலைகளில் நடைபெறும் தமிழ்த் தினவிழா, ஆங்கிலதினவிழா, கலைநிகழ்ச்சிகளிலும் இவர்கள் முக்கியமாகப் பங்கேற்று வருகின்றனர். அத்துடன் தொண்டர் ஆசிரியர்களிடம் கல்வி பயின்ற சில மாணவ, மாணவிகள் க.பொ.த.சா.த.பரீட்சையில் கணித, விஞ்ஞான பாடங்களில் திறமைச் சித்திகளையும் பெற்றுள்ளதை நாம் அறியக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு பல ஆண்டுகளாக வேதனம் ஏதும் இன்றி கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள், தமக்கு ஆசிரிய நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், குறைந்த தொகை சம்பளம் பெற்று வேலை செய்யக்கூடிய தனியார்துறை வேலை வாய்ப்புக்களையும் பெறாது இருக்கின்றனர்.

வன்னித் தொண்டர் ஆசிரியர் நியமனம் பற்றி அடிக்கடி கூட்டங்களில் பேசப்படுவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தாலும், உருப்படியான நடவடிக்கை ஏதும் நடைபெற்றதாகத் தெரியவரவில்லை. சென்ற ஆண்டு ஐப்பசி அல்லது கார்த்திகை மாதங்களில் நடைபெற்ற வடக்கு மாகாண கல்வி அபிவிருத்திக் கூட்டத்தில் இந்த ஆசிரியர்கள் பற்றி கலந்துரையாடிய பொழுது, இந்தத் தொண்டர் ஆசிரியர்களுக்கு 2012 தைமாதம் தொடக்கம் ஆசிரிய உதவியாளர்களாக உள்ளீர்க்கப்பட்டு குறிப்பிட்ட தொகை வழங்கப்பட வேண்டும் எனவும், எதிர்காலத்தில் புதிதாக தொண்டர் ஆசிரியர் எவரையும் நியமிக்கக் கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டதாக ஊடகச் செய்திகள் தெரிவித்தன.

அத்துடன் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முக்கிய அதிகாரிகளும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர் எனப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. தங்களுக்கு நியமனம் கிடைக்காததால் மனமுடைந்திருந்த தொண்டர் ஆசிரியர்கள், இதனால் நியமனம் கிடைத்தல் உறுதியாகிவிட்டது எனும் மனவுறுதியுடன் பாடசாலை சென்று வருகின்றனர். எனினும் 2012 ஆம் ஆண்டு தொடங்கி நான்கு மாதங்கள் முடிவடைந்தும், இன்றுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லை.

வன்னிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் பல நூற்றுக்கணக்கான ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளதாகவும் அவற்றை ஈடுசெய்யவும் ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலும் ஒரு குறிப்பிட்ட ஆசிரியர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்தும், வேறு மாவட்டங்களில் இருந்தும் அந்தப் பகுதிக்கு மாற்றம் செய்யப்படுகின்றனர். ஆயினும் மாற்றம் பெறும் ஆசிரியர்களில் ஒரு சிறிய தொகையினரே வன்னிப் பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்கின்றனர். பெரும்பாலான ஆசிரியர்கள் தங்களின் பல்வேறுவிதமான வசதியீனங்களைக் காட்டி அந்த இடமாற்றங்களை இரத்துச் செய்துவிடுகின்றனர். இதனால் வன்னியில் ஆசிரிய பற்றாக்குறையினால் மாணவர்களின் கல்வியில் மிகவும் பின்னடைவு ஏற்படுகின்றது.

இதனால் ஏற்கனவே முடிவடைந்த ஆண்டுகளில் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற மாவட்டங்களுக்கு கிட்டத்தட்ட நிகராக, கலைத்துறைகளில் வெட்டுப்புள்ளிகளைப் பெற்ற முல்லைத்தீவு மாவட்டம், 2010 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதியில் இலங்கையின் ஆகக் குறைந்த வெட்டுப்புள்ளிகளைப் பெற்ற மாவட்டம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. இவ்வாறு வன்னியில் கல்விநிலை பின்தங்கி இருந்தும், இந்தத் தொண்டர் ஆசிரியர்களுக்காயினும் நிரந்தர நியமனத்தை வழங்க அரசு பின்னடித்து வருகின்றமை வன்னி வாழ் பெற்றோர், மாணவர் மத்தியில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இலங்கையில் ஆசிரியர்களின் குறைபாடுகளை ஓரளவாவது நீக்க பல்வேறு தொழிற் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்த தொழிற் சங்கங்கள் ஆசிரிய வேதன உயர்வு, பதவி உயர்வு, இடமாற்றங்கள் போன்ற விடயங்களிலே அக்கறை காட்டுவதைப் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

உதாரணமாக இலங்கை ஆசிரியர் தொழிற் சங்கம், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் ஆகியன வடபகுதியில் பிரபலமான தொழிற் சங்கமாக இயங்கி வருகின்றன. இந்த இரண்டு தொழிற் சங்கங்களும் போதிய முயற்சி எடுப்பின் வன்னித் தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்களுக்கு அவை வாய்ப்பாக அமையும். ஆனால் இந்த முயற்சிகள் எதுவும் சாத்தியப்பட்டதாகத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தர்கள் மூன்று விதம்

ஓர் ஊரில் பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு கோடீஸ்வரர். பல நல்ல காரியங்களை அவர் செய்து கொண்டிருந்தார். அவரைத் தேடிப் பலர் வருவார்கள். இவரும் தன்னால் முடிந்த உதவியை அவர்களுக்கு செய்வது வழக்கம்.

ஒரு[illegible]யாம் மூன்று பிச்சைக்காரர்கள் இவரைத் தேடி வந்தார்கள். 'இவரிடமிருந்து ஏதாவது பொருளுதவி பெற வேண்டும்' என்று நினைத்துத்தான் அந்தப் பிச்சைக்காரர்கள் வந்தார்கள்.

ஆனால் மூன்று பேரும் ஒரே நேரத்தில் வரவில்லை. தனித் தனியாக வந்தார்கள். முதல் பிச்சைக்காரன் காலையில் வந்தான்.

அவன் கோடீஸ்வரன் முன் சென்று, ''ஐயா! எனக்கு ஐந்து ரூபாய் வேண்டும்... தயவு செய்து கொடுங்கள்'' என்று கேட்டான். இவன் இப்படிக் கேட்டதும் அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

''என்ன இது? நான் ஏதோ உன்னிடம் கடன்பட்டிருப்பது போலவும்...நீ அதைத் திருப்பிக்கொடு என்று கேட்பது போலவும் இவ்வளவு அதிகாரத்தோடு பிச்சை கேட்கிறாயே?... எவ்வளவு துணிச்சல் உனக்கு? உனக்கு ஐந்து ரூபாய் எல்லாம் தர முடியாது. இந்தா இரண்டு ரூபாய்... எடுத்துக்கொண்டு ஓடு'' என்று சொல்லி, கோடீஸ்வரர் இரண்டு ரூபாயைத் தூக்கி எறிந்தார். பிச்சைக்காரன் அதை எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டான்.

அடுத்தபடியாக பகல் வேளையில் ஒரு பிச்சைக்காரன் வந்தான். இவன் கோடீஸ்வரரிடம் ''ஐயா!...நான் மூன்று நாளாக ஒரு வேளை உணவு கூட சாப்பிடவில்லை... தயவுசெய்து எனக்கு உதவி செய்யுங்கள்'' என்றான். ''உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?'' என்று அவர் கேட்டார். ''நீங்கள் பார்த்து எவ்வளவு கொடுத்தாலும் அது எனக்குப் போதும்'' என்றான் பிச்சைக்காரன். கோடீஸ்வரர், ''இந்தா பத்து ரூபாய்... இதை வைத்துக்கொள்... ஏதாவது வாங்கிச் சாப்பிடு'' என்றார். அவன் அந்தப் பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு போய் விட்டான்.

அதன் பின்னர் மாலையில் மூன்றாவது பிச்சைக்காரன் வந்தான். அவன் கேட்ட விதம் எப்படித் தெரியுமா? ''மகாராஜா! உங்களுடைய உயர்ந்த குணத்தைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் உங்களைப் பார்த்து தரிசனம் செய்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். தர்மத்தின் வழியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள்தான் என் கண்கண்ட தெய்வம்'' என்றான். உடனே அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா? ''ஐயா தயவு செய்து உட்காருங்கள்...நீங்கள் மிகவும் களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள்...முதலில் சாப்பிடுங்கள்....மற்றவற்றைப் பின்னர் பேசலாம்'' என்று சொல்லி அவனை உட்கார வைத்து சாப்பாடு போட்டார்.

அவன் சாப்பிட்டு முடித்தான். அதன்பின் கோடீஸ்வரர் அவனிடம் ''இப்போது சொல்லுங்கள்...நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று வினவினார்.

அவரது அன்புக்கு அந்தப் பிச்சைக்காரன் மனம் நெகிழ்ந்து ''ஐயா..பசியோடு வந்தேன்...நீங்கள் அறுசுவை விருந்தே படைத்துவிட்டீர்கள்...எனக்கு அது போதும். வேறு எதுவும் தேவையில்லை. நீங்கள் என் மீது காட்டும் அன்பை நான் எப்போதும் மறக்கமாட்டேன். உங்களுக்கு எல்லாம் நல்லபடியாக நடக்கும்:..உங்களுக்கு ஒரு குறையும் வராது'' என்று கூறினான்.

இவனுடைய பரிவான இந்த வார்த்தைகள் அவரது மனதைத் தொட்டன. அவருக்கு அவன் மீது இருந்த அன்பு பல மடங்கு அதிகமாயிற்று. அதன் விளைவு என்ன தெரியுமா?

''இனிமேல் நீ வெளியில் எங்கேயும் போக வேண்டாம்... இங்கேயே இருந்துவிடு'' என்று அவர் தெரிவித்தார். தன்னுடைய பங்களாவுக்குப் பக்கத்திலேயே அவர் அந்த ஆளுக்கு ஒரு வீடும் கட்டிக் கொடுத்தார். கடைசி வரையில் அந்த ஆளை அவர் தனக்குப் பக்கத்திலேயே வைத்துக்கொண்டார்.

இந்தக் கதையின் கருத்து என்ன தெரியுமா? இறைவன் அந்தக் கோடீஸ்வரர் போன்றவராம். அந்த மூன்று வகை பிச்சைக்காரர்களும் மூன்று வகையான பக்தர்களாம். இன்றைக்கு இருக்கும் பக்தர்களெல்லாம் இந்த மூன்று வகையில் ஏதாவது ஒரு வகையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.



முதல்வகைதான் அதிகமாக இருக்கும். மூன்றாவது வகை மிகவும் அபூர்வம்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கம்





**தென்னவன்**

வாழ்க்கையில் கஷ்டப்படும் குடும்பத்தைக் கைகொடுத்து கரைசேர்க்கும் மனப்பக்குவம் உள்ளவர்கள் மனித வர்க்கத்தில் மிகமிகக் குறைவு. கஷ்டத்தின் தன்மையை இனங்கண்டு அதனை நிவர்த்தி செய்ய முன்வருவோமானால் நிச்சயம் கஷ்டப்படும் குடும்பங்களைக் காண்பது அரிதாகவே இருக்கும். கஷ்டப்படுபவர்களுக்கு வசதி படைத்தவர்கள் தம்மாலான உதவிகளை வழங்க முன்வருவதைப் பெரிய கொடையாகக் கருத முடியும். எமது உறவுகள் பலர் புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகளில் உழைத்து பெரும் பணக்காரர்களாக இருப்பதாக கூறப்படுகிறது.

அவ்வாறான வசதி படைத்தவர்கள் பலர் இருந்த போதிலும் எமது குடாநாட்டில் பல்வேறு வகைகளில் போர் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு நொந்து போய் வறுமை நிலையில் வாழ்பவர்கள் ஆயிரம் ஆயிரம். இவ்வாறான பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ள எவருக்காவது வெளிநாட்டில் வசதியான நிலையில் வாழ்வோர், தமது உறவினராக இருந்தாலும் சரி மனமுவந்து உதவி செய்துள்ளார்களா எனக் கேட்டால் பதில் பூஜ்ஜியமாகவே உள்ளது.

தமது குடும்பத்தவரின் அநாவசிய ஆடம்பர செலவுகளுக்கு தேவைக்கு அதிகமான பணம் அனுப்பும் வெளிநாடுகளில் வதிவோர், எமது பிரதேசத்தில் மிகவும் கஷ்டமான வறுமை நிலையில் உள்ள அயல் வீட்டுக்காரருக்கு ஐந்து ரூபா பணம் அனுப்ப முன்வரமாட்டார்கள். கஷ்டப்பட்ட குடும்பத்துக்கு பணம் அனுப்ப இங்குள்ள அவர்களது பெற்றோர் உறவினரும் விரும்பமாட்டார்கள்.

இந்த நிலையில் 1983 தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்வேறு போர் சூழ்நிலைகளுக்கு முகம் கொடுத்து உயிர்களைப் பறிகொடுத்தும், உடைமைகளை இழந்தும், சொந்த உறவுகளை, அவயவங்களை இழந்த நிலையில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த உறவுகளின் எதிர்கால வாழ்வு தொடர்பாக, பிரதேசத்தில் உள்ள வறுமை நிலையில் வாழும் மக்களுக்கு உதவ வேண்டுமென்ற மன விருப்பத்தினை செயல் வடிவமாகச் செயற்படுத்த உருவாக்கப்பட்டதே லண்டன் பச்சிலைப் பள்ளி அபிவிருத்திச் சங்கமாகும்.

> பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் சகல செயற்பாடுகளும், லண்டனில் இயங்கும் தாய் நிறுவனமான பச்சிலைப் பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் நேரடி வழிகாட்டலிலும் ஆலோசனையுடனும் அனுசரணையுடனும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பச்சிலைப் பள்ளி பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரக் கணக்கானோர் புலம் பெயர்ந்து வெளி நாடுகளில் உழைத்து வருகின்றனர். இவ்வாறான புலம் பெயர்ந்துள்ள மக்களில் பிரிட்டனில் வதியும் பளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களின் மனதில் உதித்த சிந்தனை பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் தோற்றமாகும். பிரிட்டனில் உருவாக்கப்பட்ட இந்தச் சங்கத்தின் திட்டங்களை செயற்படுத்துவது பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையாகும். இந்த அபிவிருத்திப் பேரவையின் அலுவலகம் தற்போது பளை முல்லையடியில் உள்ள தனியார் வீடொன்றில் இயங்கி வருகிறது.

பிரிட்டனில் வாழும் பளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களால் 2010.05.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்கம், 15 பேர் கொண்ட மத்திய குழுவையும், 35 பேர் கொண்ட செயற்குழுவையும் ஏற்படுத்தி செயற்பட்டு வருகிறது. சங்கம் உருவாக்கப்பட்டு அதன் செயற்பாடுகளை வெளிப்படுத்தவென 2011.06.03 ஆம் திகதி பளைப் பிரதேசத்தில் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினை உருவாக்கி 13 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும், 36 பேர் கொண்ட பொதுச் சபையுமாக செயற்பட்டு வருகிறது.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் சகல செயற்பாடுகளும், லண்டனில் இயங்கும் தாய் நிறுவனமான பச்சிலைப் பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் நேரடி வழிகாட்டலிலும் ஆலோசனையுடனும் அனுசரணையுடனும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவை பச்சிலைப்பள்ளியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு பல சேவைகளைத் திறம்பட ஆற்றி வருகிறது.

அவற்றில் சில:-

* வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு அத்தியாவசிய நிவாரணப் பொருள்கள் பொருளாளரால் நேரில் கொண்டு சென்று வழங்கப்பட்டமை.
* போரினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியமை
* பளை மத்திய கல்லூரியின் களஞ்சிய கட்டட புனரமைப்பிற்கான நிதியுதவியை வழங்கியதுடன் மாணவர்களின் குடிதண்ணீர் தேவைக்கென நீரிறைக்கும் இயந்திரத்தினையும் வழங்கியமை.
* பெற்றோரை இழந்த மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக மாதாந்தம் தனியார் கல்வி நிறுவனக் கட்டணம் வழங்கியமை
* போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் வறிய குழந்தைகளுக்கும் பால்மா உதவி வழங்கியமை.
* பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தொழில் வாய்ப்பில்லாத 80 யுவதிகளுக்கு இலவசமாக தையல் பயிற்சிகளை இரண்டு கட்டமாக வழங்கியமை.
* வளர்ந்து வரும் நவீன தொழில் நுட்பவியல் அறிவை வளர்க்கும் நோக்கத்தோடு முதற்கட்டமாக 15 மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி நெறியினை வழங்கியதுடன், மேலும் 15 மாணவர்களுக்கு இரண்டாம் கட்டமாக பயிற்சிகள் வழங்கப்பட்டு வருதல்.
* பளை மத்திய கல்லூரியில் கற்கும் பெற்றோரை இழந்த மாணவர்களிலும் வறிய மாணவர்களிலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கியமை. அத்துடன் குடும்பத் தலைவர்களை இழந்த மற்றும் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 8 பேருக்கு சைக்கிள்கள் வழங்கியமை.
* குடும்பத் தலைவர்களை இழந்த மற்றும் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட 11 பேருக்கு வாழ்வாதார உதவியாக தலா 30 ஆயிரம் ரூபா வீதம் குடும்பங்களின் தேவைகளுக்கேற்ப ஆடுகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள், தென்னங்கன்றுகள், முட்கம்பிகள் மற்றும் பராமரிப்புச் செலவுக்காக ரூபா 5 ஆயிரம் வழங்கியமை.
* பிரதேசத்தில் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த யுவதிகள் 15 பேருக்கு அழகுக் கலை, கேக் ஐசிங் பயிற்சி நெறிகள் வழங்கி கண்காட்சி நடத்தியமை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு தேர்தலில் தமிழர்கள் ஒரே அணியில் நிற்க வேண்டும்

## புத்திஜீவிகள் வேண்டுகோள்

**கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு ஐயப்பாடுகள் எழுந்துள்ளன.**

மட்டக்களப்பு,மே28

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து தேர்தல் களத்தில் போட்டியிடுவதன் மூலமே தமிழ் மக்களின் இருப்பை தக்கவைத்துக் கொள்ளலாம் என்று புத்திஜீவிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது :-

கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு தேர்தல் இடம்பெறலாம் என்ற தகவல் வலுப்பெற்றுவரும் நிலையில், கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு ஐயப்பாடுகள் எழுந்துள்ளன.

முஸ்லிம் மக்களை பொறுத்தவரையில் அவர்கள் தெளிவான முறையில் ஒன்றுபட்டு இந்தத் தேர்தலை எதிர்கொள்ளவேண்டும் என்ற நிலையில் உள்ளபோதிலும் தமிழ் மக்களை பொறுத்தவரையில் பல்வேறு பிரிவு நிலைகள் தற்போது தோன்றியுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் தற்போது ஆட்சியதிகாரங்களைக் கொண்டுள்ள தமிழ மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தமிழ் அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் தேர்தல் களத்தில் குதிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனித்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் உறுப்பினர்கள் வேறாகவும் தேர்தல் களத்தில் மூன்று அணிகளாக பிரிந்து நிற்கும் நிலையேற்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் களத்தை அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு அப்பால் கிழக்கு மாகாண தமிழ் மக்களின் நலன் தொடர்பில் சிந்திக்கவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட குடியேற்றம், நில அபகரிப்பு, வரலாற்று வாழ்விடங்கள் இழப்பு என பல்வேறு இழப்புகளையும் அடையாளங்களையும் இழந்து வரும் நிலையில் எதிர்காலத்தில் எம்மிடம் உள்ள ஆட்சி அதிகாரங்களும் எம்மை விட்டு செல்லுமானால் அதன் தாக்கம் எமது எதிர்கால சந்ததியினரைக் கடுமையாகப் பாதிக்கும் நிலையேற்படும்.

கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தொடர்பில் மிகவும் சிந்தித்துச் செயற்பட வேண்டிய நிலையில் எமது அரசியல் தலைமைகள் உள்ளன.

அண்மைக்காலமாக எமது அரசியல் தலைமைகளிடம் இருந்து கிழக்கு மாகாண சபை தேர்தல் தொடர்பில் வெளிவரும் கருத்துகள் ஆரோக்கியமற்றதாகவும் எமது எதிர்காலத்தின் கேள்விக்குறியாகவும் உள்ளன.

அனைத்து அரசியல் கட்சிகளும் தமது கட்சி சின்னத்துக்கு அப்பால் ஒன்றிணைந்து இந்தத் தேர்தல் களத்தை பயன்படுத்துவதன் மூலமே எதிர்காலத்தில் கிழக்கு மாகாண மக்கள் தமது உரிமைகளைப் பெற்று வாழமுடியும். அவ்வாறு இல்லாது தமது சுயநலனுக்காக பிரிந்து நின்று தமிழ் மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்படும் நிலையொன்று ஏற்படுமானால் தந்தை செல்வா கூறிச் சென்றகடவுளால் கூட கிழக்கு மாகாண தமிழ் மக்களை காப்பாற்றமுடியாத நிலையேற்படும்- என்றனர். (ச)

கிழக்கின் ஒந்தாச்சி மடத்தில்

# தொழில்நுட்ப பயிற்சி நிலைய திறப்பு விழாவில் இந்தியத் தூதர்



மட்டக்களப்பு,மே28

தொழிற்பயிற்சி அதிகார சபையின் பங்களிப்பு எதிர்வரும் காலங்களிலும் காத்திரமானதாக இருக்கும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே காந்தா தெரிவித்தார்.

ஒந்தாச்சிமடத்தில் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரதேசத்துக்குத் தேவையான சரியான நேரத்தில் வளம், திறன், தொழில்நுட்பம் என்பவற்றை அடையாளம் கண்டு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது சிறப்பானதாகும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் சிறந்ததொரு நல்லுறவு இருந்து வருகிறது.

இவ்வாறான திட்டங்களுக்கு இலங்கை சிறந்த ஒத்துழைப்பையும் வழங்கி வருகிறது. அதனாலேயே சரியான தேவையான நேரத்தில் இந்த பயிற்சி நிலையத்தை மேம்படுத்தி திறந்து வைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது- என்றார்.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன், மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# மரையை வேட்டையாடிய 12 பேர் வசமாகச் சிக்கினர்

அம்பாறை,மே28

அம்பாறை மாவட்டத்தின் பக்மிட்டியாவ காட்டுப்பகுதியில் மரையொன்றை வேட்டையாடினர் எனத் தெரிவிக்கப்படும் கிராம அலுவலக உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 12 பேர் அம்பாறை மாவட்ட வன திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து வேட் டையாடப்பட்ட மரையின் இறைச்சி, சட்டவிரோத துப்பாக்கி, பிக்கப் ரக வாகனம், இரு மோட்டார் சைக்கிள்கள் ஆகியன அம்பாறை மாவட்ட வன இலாகா பாதுகாப்பு அதிகாரிகளினால் மீட்கப்பட்டு தமண பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

பிரதேச மக்கள் வன அதிகாரிகளுக்கு வழங்கிய தகவலை அடுத்து. திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்ட அம்பாறை மாவட்ட வன திணைக்கள அதிகாரி டி.பி.சியசிங்க தலைமையிலான குழுவினரும் சிவில் பாதுகாப்புப் படையினரும் பக்மிடியாவ முட்புதர் காட்டுக்கு நடுவிலுள்ள குளத்துக்கு அண்மையில் இந்தச் சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலை செய்யப்பட்டபோது 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.பிரிங்கி உத்தரவிட்டார். (ச)



கல்முனை தனியார் பஸ்நிலையம் திறப்பு விழாவும் பஸ் நிலைய கடைத்தொகுதி கையளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கல்முனை நகரில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஹஸன் அலி, கல்முனை மாநகர பிரதி முதல்வர் நிஸாம் காரியப்பர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# கண்டி தேயிலை தொழிற்சாலையில் தீ 15 கோடி ரூபா நட்டம்

கண்டி,மே28

கண்டி, பின்வில பிரதேசத்திலுள்ள அலகொல்ல தேயிலை தொழிற்சாலையில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக கண்டியிலிருந்து சென்ற தீயணைப்புப் பிரிவினரின் வாகனம் இடைவழியில் விபத்திற்குள்ளானதால் தொழிலாளர்களே தீயணைப்பில் ஈடுபட்டனர் என்று பின்வில பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்துக் காரணமாக சுமார் 15 கோடி ரூபா வரை நட்டம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தேயிலைத் தொழிற்சாலையின் 4 மாடிகளிலும் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 25,000 கிலோ தேயிலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் கூறினர். (ச)

# 'புத்தரை' விற்க முயற்சி சந்தேகத்தில் ஐவர் கைது



மஹியங்கனை,மே28

மஹியங்கனை, கிராந்துருகோட்டை பிரதேசத்தில் பளிங்கு கல்லினாலான புராதன புத்தர் சிலையொன்று விற்கப்பட இருந்த நிலையில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு மூலம் மஹியங்கனை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 5 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட புத்தர் சிலை 24 கிலோ 400 கிராம் எடை கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# அக்கரைப்பற்று மாநகரசபை அமர்வுகளை மக்கள் பார்வையிட அனுமதிக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் கோருகிறார்

அக்கரைப்பற்று,மே28

அக்கரைப்பற்று மாநகர சபையின் அமர்வுகளில் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள மக்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுவது கவலைக்குரிய விடயமாகும். மாநகர சபையின் எதிர்வரும் அமர்வுகளில் பொதுமக்கள் கலந்து கொள்வதற்கு ஆவனசெய்ய வேண்டும் என்று அக்கரைப்பற்று மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். எல்.எம். ஹனீபா மதனி கோரிக்கை விடுத்துள்ளார்.

மாநகரசபையின் மாதாந்த அமர்வுகளில் பொதுமக்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வதற்கு வகை செய்தல் எனும் தலைப்பில் அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளருக்கு அவர் அனுப்பிவைத்துள்ள மனு ஒன்றிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாநகர சபையின் மாதாந்த கூட்டங்களில் பார்வையாளர்களாகக் கலந்துகொள்வதற்கு பொதுமக்கள் ஆவல் கொண்டவர்களாக உள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தைப் பார்வையிட வந்திருந்த பொது மக்கள் கூட்ட மண்டபத்திலிருந்து இடை நடுவில் வெளியேற்றப்பட்டனர். இவ்வாறான சம்பவங்கள் ஜனநாயக ரீதியாகச் சிந்திக்கின்ற மக்களை மிகவும் பாதிப்படையவைத்துள்ளது.

எனவே, மாநகரசபை அமர்வுகளில் பொதுமக்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள முடியுமா? முடியுமெனில்; கலந்து கொள்வதற்கான ஒழுங்குகள், விதிகள் யாவை? என்பது போன்ற விடயங்கள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேஷம்:** எதிலும் கொஞ்சம் எச்சரிக்கையாகச் செயற்பட்டால் சாதனை படைக்கலாம். நெருங்கிப் பழகியவர்களிடம், வாக்கு வாதங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உறவினர் ஒருவரிடம், வாக்கு கொடுத்ததற்காக சிரமத்தோடு பணச்செலவுகளையும் மேற்கொள்ளவேண்டி இருக்கும்.

**இடபம்:** எடுத்த காரியத்தை உரிய நேரத்துக்கு முன்பாகவே செய்து முடிப்பீர்கள். மற்றவர்கள் பாராட்டும் வகையில் அறிவுத்திறனுடன் செயற்படுவீர்கள். அலுவலகப் பணிகளில் பளு குறையும். பக்கத்து வீட்டுக்காரருக்காக, ஒரு பணியை மேற்கொள்ள வேண்டியிருக்கும். கொடுக்கல், வாங்கலில் சீரான நிலைமை காணப்படும்.

**மிதுனம்:** எந்தவொரு காரியத்திலும் எடுத்தோம், கவிழ்த்தோம் என்று உங்களின் செயற்பாடுகள் இருக்கும். சற்று யோசித்த செயற்பாடுகள் அதிருப்தியைத் தவிர்க்கும். பணம் வரும் என்ற நம்பிக்கையில், செலவுகளை தாராளமாக மேற்கொள்வீர்கள். குடும்பத்தில், கோபங்களுக்குக் குறைவிருக்காது. அமைதி காப்பது நல்லது.

**கடகம்:** உங்கள் எதிர்பார்ப்பு ஒன்று, நடந்தது மற்றொன்றாக இருக்கும். பணம் சம்பந்தப்பட்ட வகையில், இழுபறியும், அதனால் சில பாதிப்புகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். வியாபாரத்தில், சில சீர்திருத்தங்களை மேற்கொள்வீர்கள். வெளி வட்டாரப் பழக்க வழக்கங்களால், சில காரியங்களை எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.

**சிங்கம்:** உணவைக் கூட பொருள்படுத்தாமல் காரியங்களைச் செய்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படும். எதிர்பார்த்த வரவுகள் வந்த போதும், எதிர்பாராத செலவுகளால் கொஞ்சம் கஷ்டப்படுவீர்கள். வெளியூர் சென்று முடிக்க வேண்டிய ஒரு பணியை, தொலைபேசி மூலமாகவே செய்து முடிப்பீர்கள்.

**கன்னி:** சாதாரணமான பணிகள் என்றாலும், பெரிய மலைப்பாக இருக்கும். வீட்டுக் காரியம் ஒன்றைச் செய்ய மறுத்து, அதனால் இல்லறத் துணையின் அதிருப்திக்கு ஆளாகலாம். தொழில் ரீதியாக, நெருக்கடிகளைச் சாதுரியமாக சமாளிப்பீர்கள். அலுவலகத்தில், சக ஊழியர்களிடம் பொறுமையாகப் பேசுவது நல்லது.

# நாளை

வைகாசி16 செவ்வாய்க்கிழமை 29.05.2012
திதி: அட்டமி மு.ப. 08.39 வரை
நட்சத்திரம்: பூரம் மு.இ. 08.08 வரை
சுபநேரம்: 10.22- 11.52 வரை
ராகு காலம்: 02.52- 04.22 வரை

**துலாம்:** உங்களுக்கு வழிகாட்டியாக இருந்த ஒருவரைச் சந்திக்கலாம். உங்களிடம் நாளை வருவதாகச் சொன்ன சிலர், இன்றே வரலாம். வியாபாரிகள் எதிலும், அகலக்கால் வைக்காமல் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். சோம்பல் இல்லாமல், எதிலும் சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். பிள்ளைகளால் பெருமைப்படுவீர்கள்.

**விருச்சிகம்:** தெய்வ அருளால், சில காரியங்கள் நடந்ததாகக்கூறி பெருமை கொள்வீர்கள். சக ஊழியர்கள், குடும்பத்தினருடன் வாக்கு வாதங்களில் ஈடுபட வேண்டாம். எந்த வேலையையும் மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல், நீங்களே செய்வது நன்மை தரும். மனைவி வழியில், திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

**தனுசு:** உங்களின் பொறுப்பான செயற்பாடுகள், பிறரால் பெரிதும் பாராட்டப்படும். நிதி நிலையில் நிலவிய பற்றாக்குறை நீங்கும். குழந்தைகளின் கல்வி விடயங்களுக்காக அலைச்சல் இருக்கும். உடன் பிறப்புகளால் உதவிகள் கிடைக்கும்.

**மகரம்:** கடன் பிரச்சினைகளைச் சமாளிக்க நேரிடலாம். முன்யோசனை இல்லாமல் செய்த காரியம் ஒன்றால், பிரச்சினைகள் உருவாகலாம். வெளியிடங்களுக்குச் செல்லும்போது, புதியவர்கள் சிலரின் உதவி, கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். பெற்றோருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகும். சிக்கனம் அவசியம்.

**கும்பம்:** நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் தடுமாற்றங்கள் கூடினாலும், வரவுகளால் அதைச் சமாளிப்பீர்கள். தொழில் சார்ந்த நடவடிக்கைகளில் தீவிரம் காட்டுவீர்கள். குடும்ப விடயம் ஒன்றைச் செய்ய மறந்து, அதிருப்திக்கு ஆளாவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகளால் பாராட்டுக் கிடைக்கும்.

**மீனம்:** பிறர் யோசனை கேட்டு நடப்பதால் வீண் அலைச்சலைச் சந்திக்க நேரிடும். ஆடை, அலங்காரப் பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். தெய்வ வழிபாட்டில் திருப்தி காண்பீர்கள். தொழில் ரீதியான பயணம் மேற்கொள்வீர்கள். எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான திட்டங்களைப் பற்றிய சிந்தனை அதிகமாக இருக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | 5 | 6 | | 7 | 4 | 2 |
| 4 | 1 | | | 7 | 2 | | 6 | |
| 7 | | | | 8 | | 5 | 3 | |
| | | | | | 7 | | | |
| | 8 | | | 9 | | | 5 | |
| | | | 8 | | | | | |
| | 6 | 1 | | 2 | | | | 3 |
| | 7 | | 1 | 5 | | | 2 | 8 |
| 2 | 9 | 8 | | 3 | 4 | 6 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 9 | 3 | 5 | 2 | 8 | 4 | 1 |
| 5 | 3 | 4 | 1 | 9 | 8 | 6 | 2 | 7 |
| 8 | 2 | 1 | 6 | 7 | 4 | 9 | 3 | 5 |
| 6 | 8 | 7 | 9 | 3 | 1 | 2 | 5 | 4 |
| 9 | 1 | 5 | 4 | 2 | 6 | 3 | 7 | 8 |
| 3 | 4 | 2 | 5 | 8 | 7 | 1 | 6 | 9 |
| 1 | 5 | 3 | 7 | 6 | 9 | 4 | 8 | 2 |
| 2 | 9 | 6 | 8 | 4 | 5 | 7 | 1 | 3 |
| 4 | 7 | 8 | 2 | 1 | 3 | 5 | 9 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# நெஞ்சம் பரிதவிக்கும் 11 ஆம் ஆண்டு தனில்........



பிறப்பு
11
★
09
★
1984

இறப்பு
27
★
05
★
2001

செல்வி
## துஷ்யந்தி இலங்கநாயகம் (துர்க்கா)

(உயிரியல் பிரிவு மாணவி - தி/ சண்முகா இந்து மகளிர் கல்லூரி)
(திதி: வைகாசி வளர்பிறை ஸப்தமி)

ஆசைக்கோர் புத்திரி யென்று
அன்பாய் நாம் பெற்றெடுத்து
அன்னமிட்டழகு புடைவை உடுத்தி - நீர்
அசைந்துவரும் அழகு கண்டு நாம்
அக மகிழ இன்புற்று இருந்தோம்
அணியணியாக அன்பர்கள் வாழ்ந்த
மணக்கோலங் காணும் மகிமையை எண்ணிச்
சொரியும் ஆவல் கொண்டு நாம் நின்றோம்
பார்த்துப் பார்த்துக் கட்டிய எம் கோட்டையை
பரிவின்றித் தகர்த்தான் கொடிய காலனவன்

பிரிவை எண்ணித் துயருறும்
அப்பா, [illegible]
அண்ணைமார், [illegible]
மருமக்கள்.

மணியகாரன்வளவு
கைதடி தென்கிழக்கு,
கைதடி.

(18478) (45.6.9)
(16843) (45.6.9)

# முதலாம் ஆண்டு நினைவு நாள்



பிறப்பு
07.04.1987

இறப்பு
09.06.2011

## அமரர் இராசேந்திரம் நிஷாகரன்

ஆண்டு ஒன்றானாலும் ஆறமுடியவில்லை
மீண்டும் வருவாயென மாண்டு மடிகின்றோம்
வேண்டும் வரத்தால் பிறந்த வேல்முருகனே நிஷா
மீண்டும் வந்து எம் இதயத்தை ஆற்றப்பா!

முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு நாளை (29.05.2012) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிஷா படமாடம்,
நிஷா தாட்வெயார்,
நிஷா கொமினிகேசன்.

குடும்பத்தினர்
2 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு

(16843) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்.பி.தாக்கி இளைஞன் படுகாயம்

கொழும்பு,மே 28

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துனேஷ் கங்கந்தவின் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞன் ஒருவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு களியாட்ட விடுதி ஒன்றில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் தன்னைத் தாக்கியதாக தாக்குதலுக்கு உள்ளான இளைஞர் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தாக்குதலில் காயமடைந்தவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ச)

## பஸ் விபத்துக்களை கட்டுப்படுத்தத் திட்டம்

கொழும்பு,மே28

பஸ் விபத்துக்களை கட்டுப்படுத்தும் பொருட்டு புதிய வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் பஸ் விபத்துக்கள் அதிகரித்துள்ளன. பஸ்களுக்கு இடையில் காணப்படுகின்ற போட்டித்தன்மையே இதற்கான பிரதான காரணம்.

பஸ் சேவை தொடர்பில் முறையான நேர அட்டவணை ஒன்று இல்லாமையே இவ்வாறான போட்டித் தன்மையை ஏற்படுத்துகின்றது. சரியான நேர அட்டவணை ஒன்று உருவாக்கப்படும்போது இந்த விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியும்.

விபத்துக்களைத் தவிர்ப்பது குறித்து பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான விசேட பயிற்சி ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை நுவரெலியாவில் ஆரம்பமாகியுள்ளது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இந்த விசேட பயிற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான விபத்துக்கள் காரணமாக இந்த வருடத்தில் மட்டும் 8 சத வீதமான பயணிகள் பஸ்களில் செல்வதைத் தவிர்ப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதனைத் தடுக்கும் நோக்கிலேயே சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் இந்த விசேட பயிற்சி வழங்கப்படுகின்றது என்றார். (ச)



கண்டி, பூஜாபிட்டிய பிரதேசத்தில் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சுகாதார மத்திய நிலையத்தின் திறப்பு விழாவில் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்டு நினைவுக்கல்லைத் திறந்து வைக்கின்றார்.

## தங்கம் அகழ்வதற்கு அனுமதிப் பத்திரம்

### அரசு நடவடிக்கை

கொழும்பு,மே28

கொழும்பை அண்மித்த பூகொடை பகுதியில் களனி ஆற்றில் தங்கம் அகழ்வதற்கான அனுமதிப் பத்திரங்களை அரசு வழங்கவுள்ளது.

கொழும்பு - கம்பஹா எல்லையில் அமைந்துள்ள பூகொடை என்ற புறநகர் பகுதியில் உள்ள களனி ஆற்றில் சுமார் 10 கிலோமீற்றர் நீளமான பகுதியில் ஆங்காங்கே தங்கம் படிந்துகிடப்பதாக பூகோள அளவை மற்றும் சுரங்கத்துறை தலைவர் என்.பி.விஜயானந்த தெரிவித்தார்.

பூகொடை பகுதியில் உள்ள ஆற்றின் இரண்டு கரைகளிலும் கூடியுள்ள பிரதேச மக்கள் தங்கம் தேடும் முயற்சியில் கடந்த சில நாள்களாகவே ஈடுபட்டு வருகின்றனர். பலர் அதில் பயனடைந்தும் வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

நிலத்தின் அடியில் உள்ள தங்கப் படிமங்களிலிருந்து அரிக்கப்பட்டுவரும் தங்கத் துண்டுகள் ஆற்றின் மணல் படுக்கையின் கீழே படிந்து கிடப்பதை ஆய்வு மூலம் உறுதி செய்துள்ளதாக அவர் கூறினார்.

அந்தப் பகுதியில் நிரந்தரமாக தங்கம் அகழக் கூடிய அளவுக்கு தங்கப் படிமங்கள் செறிந்துகிடப்பதற்குச் சாத்தியமில்லை என்பதால் அதனை தொழிற்துறையாக அரசினால் முன்னெடுக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதேச மக்கள் தங்கம் அகழ்வதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அரசு அனுமதிப் பத்திரத்தை வழங்கவுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

பூகோளவியல் அதிகாரிகளும் பொலிஸாரும் குறித்த பிரதேசத்தில் யாரும் தங்கம் தேடி மணல் அகழக்கூடாது என்று உத்தரவு இட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஆணைக்குழு பரிந்துரைகள் தமிழ், சிங்கள மொழிகளில்

### மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் தகவல்

கொழும்பு,மே28

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தினால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை மொழி பெயர்க்குமாறு அரசிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் தெரிவித்துள்ளது.

**நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை மொழிபெயர்க்குமாறு அரசிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை**

கடந்த 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஆணைக்குழுவின் அறிக்கை முன்மொழிவுகள் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

எனினும் இந்த அறிக்கை தமிழ், சிங்கள மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்படவில்லை.

தமிழ், சிங்கள மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளதனால் முன்மொழிவுகள் தொடர்பிலான விவாதங்கள் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## நாடாளுமன்ற தெரிவுக்குழு பொய் முயற்சி

### சோமவன்ச அமரசிங்க குற்றச்சாட்டு



கொழும்பு,மே28

நாடாளுமன்றத் தெரிவுக் குழு யோசனைத் திட்டம் ஒரு பம்மாத்து என்று ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சோமவன்ச அமரசிங்க குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அரசால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது எனவே, ஜே.வி.பி. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்காது.

வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மக்களை ஏமாற்றுவதற்காக இவ்வாறு நாடாளுமன்றத் தெரிவுக்குழு கூட்டங்கள் நடத்தப்பட உள்ளன. ஏற்கனவே சர்வகட்சிகளின் பங்களிப்புடன் பல கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மீண்டும் அனைத்துக் கட்சிகளையும் கூட்டிக் கூட்டம் நடத்த வேண்டிய அவசியமில்லை.

சமூக சமநிலையை உறுதிப்படுத்தும் வரையில் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியாது .

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் காலனித்துவ ஆட்சிக் காலம் முதலான சமூகப் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும் - என்றார். (ச)

## சூது நிலையம் சுற்றிவளைப்பு 29 பேர் கைது

கொழும்பு,மே28

கல்கிஸ்ஸையில் உள்ள உணவகம் ஒன்றின் மாடிக் கட்டடத்தில் இயங்கிவந்த சட்டவிரோத சூது நிலையம் ஒன்றை பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

கல்கிஸ்ஸை பொலிஸ் நிலையக் குழுவால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 11.30 மணிக்கு இந்தச் சூது நிலையம் சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது அங்கிருந்து 29 சந்தேகநபர்களைக் கைது செய்த பொலிஸார் 93930 ரூபா பணத்தையும் கைப்பற்றியுள்ளனர். (ச)

## தஞ்சம் கோரிய நபர்களை கைதுசெய்ய நடவடிக்கை

கொழும்பு,மே28

அரசியல் தஞ்சம் கோரி நாட்டுக்குள் பிரவேசித்த வெளிநாட்டு நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு அரசியல் தஞ்சம் கோரி நாட்டுக்குள் பிரவேசித்த ஐநூறுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு நபர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான், சீனா, ஆப்கானிஸ்தான், மாலைதீவு போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபர்கள் நீண்டகாலமாக நாட்டில் தங்கியிருப்பதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்குத் தகவல் கிடைத்துள்ளதையடுத்து குறித்த வெளிநாட்டுநபர்களைக் கைது செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.(ச)

## கணினி திருடிய நபர்கள் கைது

கொழும்பு,மே28

பாடசாலைகளின் கணினி அறைகளை உடைத்து உபகரணங்களைத் திருடிய மூன்று பேரை இறக்குவாணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர்கள் இறக்குவாணை, கஹவத்த, கொடகாவெல, கொலன்ன, உடவலவ, பனாபுர மற்றும் செவனகல பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளின் கணினி உபகரணங்களைத் திருடியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த நபர்களிடமிருந்து 57 கணினிகள் மற்றும் அவற்றுக்கான உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர். சந்தேக நபர்களை பெல்மடுல்ல மாவட்ட நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## நிதி மோசடியில் ஈடுபட்ட பெண் கைது

கொழும்பு,மே28

அரச தொழில் பெற்றுத் தருவதாகக்கூறி 10 லட்சத்துக்கு மேல் நிதி மோசடி செய்த பெண் ஒருவர் அநுராதபுரம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் அநுராதபுரம், கட்டுகெலியாவ பகுதியைச் சேர்ந்தவராவார். கல்வி, சுகாதாரம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தில் தொழில் பெற்றுத் தருவதாகக்கூறி குறித்த பெண் ஒருவரிடம் நிதி மோசடி செய்துள்ளார்.

அரச பிரதி அமைச்சர் ஒருவரின் அலுவலக சேவையாளராகச் செயற்படும் ஒருவர் ஊடாக இந்தச் செயல் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச)

## புத்தளத்தில் தும்பு உற்பத்தி தொழிற்சாலை




கொழும்பு,மே28

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் புத்தளம், மணல் குண்டு கிராமத் தில் தும்பு உற்பத்தி தொழிற்சாலை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

37 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலையிலிருந்து மாதாந்தம் 14 ஆயிரம் கிலோ கிராம் தும்பு, 4 ஆயிரம் கிலோ கிராம் கயிறு என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன என்று புத்தளம் நகர சபை தலைவர் கே.ஏ.பாயிஸ் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் புத்தளம் நகர சபையின் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஏ.ஓ.அலிகான், முன்னாள் நகர சபை உறுப்பினர்களான ரபீக், சத்ரி, மீள் எழுச்சித் திட்ட அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
16.06.1946

இறப்பு
28.04.2012

அமரர்

## புண்ணியமூர்த்தி வேலும்மயிலும்

நேற்றுப் போல் உங்கள் நினைவுகள்
இன்றும் பசுமையாய் நெஞ்சினில்......
நாள்கள் முப்பத்து ஒன்று ஆனதப்பா - ஆனாலும்
ஆறாத்துயரில் தவிக்கின்றோம்
உங்கள் நினைவில் எங்கள்
பயணம் என்றும் தொடருமப்பா

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

(சி/381)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# மஹிந்தவின் வருகையை கண்டித்து பரிஸில் ஆர்ப்பாட்டம்

பிரிட்டன் மகாராணியார் எலிசபெத்தின் விருந்தினராக பிரிட்டனுக்கு வருகை தரவுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டமொன்று பிரான்ஸ் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் உள்ள பிரிட்டன் தூதரகத்தை அண்டி அமைதியான முறையில் இந்த எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

துண்டுப்பிரசுரங்கள் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டதோடு பிரிட்டிஷ் தானிய தூதரகத்திடம் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.




இந்த மனுவை நாடு கடந்த தமிழீழ அரசின் இளையோர் பிரதிநிதி மகிந்தன் சிவசுப்பிரமணியம் தலைமை வகித்து கையளித்தார்.

இதேவேளை பிரிட்டனுக்கு வருகை தரவுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டம் தலைநகர் லண்டனில் இடம்பெற இருப்பதோடு இன்னும் பல நாடுகளிலும் எதிர்ப்புப்போராட்டங்கள் இடம்பெற இருக்கின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## நிதி ஒதுக்கீடுகள்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் மணையியல் அறை, வகுப்பறை ஆகியவற்றின் உயர் திருத்த வேலைகளுக்காக நவோதய திட்டத்தின் கீழ் 9 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று பாடசாலை அதிபர் ந. சிவகுமாரசாமி தெரிவித்துள்ளார். (ம-100)

***

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட அம்பாள் சனசமூக நிலையம் மற்றும் மூர்த்தியர் ஒழுங்கை போன்றவற்றின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். கடந்த பல வருடங்களாக திருத்தம் செய்யப்படாது காணப்பட்ட இந்த வீதியை பலரும் பயன்படுத்தி வரும் நிலையில் மக்களின் தேவை கருதி இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வீதியைத் திருத்தும் பணிகள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

***

அராலி வடக்கு சில்வஸ்ரார் விளையாட்டுக்கழக மண்டபம் நிர்மாணப் பணிப்பாகப் பன்முகப் படுத்திய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் முகமாக முதல் கட்டமாக 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழக வீரர்கள் விளையாட்டுக் கழகத்தினர் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் ஒரு கட்டத்தொகுதி வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## யோகாசனப் பயிற்சி

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் யோகாசனப் பயிற்சி வகுப்புகள் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றுவருகின்றன.

யோகாசன செயன்முறைப் பரீட்சை விரைவில் நடத்தப்படவுள்ளதால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியாக யோகாசனப் பயிற்சியை ஏற்கனவே நிறைவு செய்த மாணவர்கள் மீட்டல் வகுப்புகளில் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# தமிழர்களை திருப்பியனுப்புவதை மீள்பரிசீலனை செய்க!

## பிரிட்டன் நாடாளுமன்றில் மனு

பிரிட்டனில் அடைக்கலம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது தொடர்பான பிரிட்டனின் கொள்கையை மீளாய்வு செய்வதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தும் பிரேரணையொன்று அந்த நாட்டுப் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விவாதத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணையில் மேலும் மரணங்கள், மனித உரிமை துஷ்பிரயோகங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக பிரிட்டிஷ் அரசு தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பான கொள்கையை மீளாய்வு செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு தமிழர்களை நாடு கடத்துதல் என்ற தலைப்பிலான இந்தப் பிரேரணை பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கடந்த 23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 31 ஆம் திகதி பிவிரி-030 என்ற விமானத்தில் புகலிடம் கோரும் தமிழர்களில் ஒரு குழுவினரே பலவந்தமாகத் திருப்பி அனுப்புவதை நிறுத்துமாறு பிரிட்டன் அரசுக்கு கோரிக்கை விடுத்தே இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட ஈஸ்வரதாசன் கேதீஸ்வரன் என்ற தமிழர் 2012 ஏப்ரலில் கொல்லப்பட்டமை தொடர்பாக இந்தப் பிரேரணையில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் தமிழர்கள் கணிசமான அளவுக்கு நெருக்கடியை எதிர்கொள்கின்றனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபையால் எழுப்பப்பட்டிருந்த கவலைகள் குறித்தும் இந்தப் பிரேரணையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணையை ஈலிங் தொகுதியில் தொழில் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான விரேந்திர சர்மா முன்மொழிந்துள்ளார். வேர்த்திங் மேற்கிற்கான கன்சர் வேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பீற்றர் வாட்டம்வே, பொய்லிற்கான சமூக ஜனநாயக தொழில் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மார்க்டன்சன் கென்ற். ஐவிஸிற்கான தாராள ஜனநாயக கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அன்ட்ரூ ஜோர்ஜ், ஹெய்ஸ் மற்றும் ஷார்லிவ்ரனுக்கான தொழில் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்டொன்னெல், மான்ஸ்பீல்ட்டுக்கான தொழில் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலன் மீல் ஆகியோர் மேற்படி பிரேரணையை வழிமொழிந்துள்ளனர்.

## கண்ணீர் அஞ்சலி

### குகானந்தன் நமணன்



காயத்ரி மணவாளா நமணா
புனிதமான நீர் கூட உம்மில்
ஆசைப்பட்டு தனதாக்கிக்
கொண்டதுவோ
ஆறவில்லை மனம்
அன்றில் பறவையில் ஒன்றை
பிரித்து விட்டாயே இறைவா
என் மகளுக்கு என்ன என்று
ஆறுதல் சொல்ல

கண்ணீருடன்
சு. இராமதாஸ் மேனகா

(சி/389)(7.9.45)

## VACANCIES

### Computer Instructors
(Full Time)

19 வயதிற்கு மேற்பட்ட க.பொ.த(உ.த) அடிப்படை தகைமையுடையவராக இருப்பதுடன் பின்வருவனவற்றுள் ஒன்றையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

01.Microsoft Office
02.Graphics
03. Programming
04. Web designing
05. Multymedia
06. Accounting .

Auto CAD, Maya, 3D Studio Max,
மற்றும் Computer Hardware
கற்பிக்க கூடிய தகுதியும் முன்னனுபவமும் உடயவர்கள்
(Part Time or Full Time)

எமது
யாழ். நகர், மானிப்பாய், நெல்லியடி
கிளிநொச்சி, தண்ணீரூற்று
வவுனியா, செட்டிகுளம் கிளைகளில்
பணியாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கவும்.

**Apply before 06.06.2012**

TECHNO WORLD Studies (Pvt) Ltd

அனுப்பவேண்டிய முகவரி
The Human Resource Manager
TECHNO WORLD Studies (Pvt) Ltd
No.05, Station Road, Karappankadu,Vavuniya.
(18580)

## விண்ணப்பம் கோரல்

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள சங்கானைக் கோட்டக்கல்வி அலுவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களை இன்றைய தினத்துக்குள் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (வ-14)

பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

**CLTP Unit இனால்
Group Classes
ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

- Java/ SQL Server/ JSP/ Servelet.
- VB.Net/ SQL Server
- PHP/ MySQL/ HTML/ JavaScript
- C#/ SQL Server (Windows Application)




மேலதிக விவரங்களுக்கு
Address: 204, Brown Road, Jaffna.
Contact: 021-222 1807, 077 251 7223

Note:- குறுகிய காலத்தில் முழுமையான பயிற்சிநெறி.

## காணி விற்பனைக்கு

வேம்பிராய் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்திலுள்ள 8 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 9271528
(18623)(6-7-8)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு சு. கணபதிப்பிள்ளை
[அதிபர் - கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்]

27.05.2012 இல் தனது 35 வருட சேவையினைப் பூர்த்தி செய்யும் எமது பாடசாலை அதிபர் சு. கணபதிப்பிள்ளை அவர்களை சேவையில் உயர்வு பெற மனமார வாழ்த்துகின்றோம்

சேவைக்கான அர்ப்பணிப்பில்......


கிளி/இரணைதீவு றோ.க.பா - ஆசிரியர் (1977.05.27 - 1979.12.31)
பயிற்சிக்கலாசாலை - ஆசிரிய மாணவர் (1980.01.01 - 1980.12.31)
கிளி/பூநகரி ம.வி. ஆசிரியர் (1981.01.01. - 1982.06.30)
பயிற்சிக்கலாசாலை - ஆசிரிய மாணவர் (1982.07.01 - 1982.12.31)
கிளி/பூநகரி ம.வி - ஆசிரியர் (1983.01.01- 1986.02.16)
கிளி/செம்பன் குன்று அ.த.க.பா. - ஆசிரியர் - (1986.02.21 - 1987.08.31)
கிளி/கறுக்காய்தீவு ம.வி - ஆசிரியர் - (1987.09.01 -1992.09.14)
கிளி/செல்லியாதீவு அ.த.க.பா - அதிபர் (1992.09.15 - 1998.04.30)
கிளி/ஞானிமடம் அ.த.க.பா - அதிபர் (1998.05.01-1999.09.14)
கிளி/கறுக்காய் தீவு ம.வி - அதிபர் (1999.09.15 - 2008.02.28)
கிளி/முழங்காவில் ம.வி - அதிபர் (2008.03.01 - இன்று வரை)

பூநகரி தந்த பூமகன் நீர்
முழங்காவில் முன்னேற முழங்குபவர் நீர்
சலசலப்புகளுக்கு அஞ்சாத சத்தியவான் நீர்
சகல சௌபாக்கியமும் பெற்று சரித்திரம் படைப்பீர் நீர்

ஆசிரியர் ஒன்றியம்
கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்
(18573)(6-8-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமியார் மருமகள் பிரச்சினைக்கு காரணம்



- சந்தியா

மாமியார் மருமகள் பிரச்சினை இல்லாத குடும்பமே இல்லை எனலாம். இதற்குக் காரணம் என்ன என்பதை அறிய பெரிய ஆராய்ச்சியெல்லாம் தேவையில்லை. இதற்கு அடிப்படை பெண்களின் இயல்புதான். மாமனார் - மருமகன் பிரச்சினை ஏன் எழுவதில்லை?

பொதுவாகப் பெண்கள் தங்கள் வாழ்வுக்கு யாரையாவது சார்ந்திருக்க வேண்டிய நிலையில்தான் படைக்கப்பட்டுள்ளார்கள்.

பெற்றெடுத்துப் பேணிப் பாதுகாத்துப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி, வளர்த்து ஆளாக்கிய அருமை மகனின் அன்பு முழுமையாகத் தனக்கே கிடைக்க வேண்டும் என்று தாய் விரும்புகிறாள். அதில் ஏதேனும் தொய்வு ஏற்பட்டால் அதற்குக் காரணம் புதிதாக வந்த தன் மருமகள்தான் காரணம் என்று நினைக்கிறாள். இதைப்போன்ற மனப்பான்மை புதிதாக வந்துள்ள மருமகளுக்கும் ஏற்படும்தானே. அவளும் ஒரு பெண் அல்லவா? தன் கணவரை முழுமையாகச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்று நினைக்கும் அவள் எண்ணத்தைக் கூடத் தவறு என்று சொல்ல முடியாதுதான். கணவனின் அன்பு சற்று மாறுபடுவதாக அவளுக்குத் தோன்றும்போது அதற்குக் காரணம் தன் மாமியார்தான் என எண்ணுகிறாள்.

ஆக, மாமியார் - மருமகள் இடையே ஏற்படும் மனக்கசப்புக்கு அடிப்படைக் காரணம் தன் மீது இருவரும் கொள்கின்ற அன்பின் போட்டிதான் என்பதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஓர் ஆணுக்குப் பெரும் சவாலே தாய்க்கும் தாரத்துக்கும் இடையில் நடுநிலையாக வாழ்ந்து காட்டுவதுதான். மற்றெல்லா சவால்களும் இதற்கு அப்பால்தான்.

ஆண்மகன் தனது வாழ்க்கையின் மிக முக்கியமான இந்த இரு உறவுகளின் உணர்வுகளையும் மதித்து இருவரின் மீதும் தனக்குள்ள அன்பு சரிசமமானதுதான் என்பதை எடுத்துக் காட்டி இருவரும் தனக்கு இரண்டு கண்கள் என்று புரிய வைத்து விட வேண்டும். தன்னைப் பெற்ற அன்னை தனக்கு உயிர் போன்றவள். தன் மனைவி உடல் போன்றவள் என்ற உணர்வுடன் இருபக்கமும் ஒரே கண்ணோட்டத்துடன் பாசத்தைப் பொழிய வேண்டும். மனதுக்குள் குறை தோன்றினாலும் அதைப் பெரிதுபடுத்தக் கூடாது.

தன் மனைவியின் காரணமாக தாயின்மீது தனக்குள்ள அன்பும் பாசமும் அதிகரித்துள்ளதே தவிர குறையவில்லை என்று மகன் தாயிடம் அதிக பாசம் காட்டினால் அந்தத் தாய் மருமகளை நேசிப்பாள். அதேபோல தன் தாயின் தூண்டுதலாலேயே உன்னை நான் மேலும் நேசிக்கின்றேன் என்று மனைவியிடம் காட்டிக்கொண்டால் மருமகள் மாமியாரைத் தன் தாய்போல் கருதுவாள்.

இவ்வாறு அன்பை இருபக்கமும் ஆண்கள் பொழிந்தால் குடும்பத்தில் பிரச்சினை ஏது. இவ்வாறு நடந்து கொள்ளும்போது சில சமயங்களில் தேவை ஏற்பட்டால் மனைவியிடம் பொய் கூடச் சொல்லலாம். மனிதன் மூன்று விடயங்களில் பொய் பேசலாம். போர்க் களங்களில், இருவருக்கிடையே சமாதானம் செய்வதற்காக, தன் மனைவியைத் திருப்திப்படுத்துவதற்காக .

மாமியார் - மருமகள் பிரச்சினை ஏற்பட்டால் அதற்குக் காரணம் ஆண்களின் பலவீனம்தான் என்பதை உணர்ந்து அதைச் சீர் செய்யத்தக்க நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும்.

தாய்க்காகத் தாரத்தையோ, தாரத்துக்காகத் தாயையோ வெறுத்து ஒதுக்கக் கூடாது. இருவரும் பெண்கள் தான். பெண்மைக்கு உரிய பலவீனமான குணங்கள் இருசாராரிடமும் இருக்கவே செய்யும். அதை அனுசரித்துச் சென்றால், இருவரையுமே சமாதானம் செய்து வாழ்வது சிரமமானதல்ல, எளிதானதுதான்.

## மனைவி

மனை என்னும் வீட்டுக்கு
விளக்காக இருப்பவளே மனைவி
துணைவி என்ற சொல்லுக்கு
பொருளாக இருப்பவளே மனைவி

மண்ணவப் பிறந்தவர்க்கும்
கண்ணாக இருந்திடுவாள் மனைவி
சொன்னாலும் புரியாத
உல்லாசம் தந்திடுவாள் மனைவி

துயரென்று வேர்க்கையிலே
சாமரமாய் வீசிடுவாள் மனைவி
வாழ்க்கைப் படகு தத்தளித்தால்
பாய்மரமாய் காத்திடுவாள் மனைவி

தாய்க்குப் பின் தான் நின்று
வாய்மை அன்பைப் பொழிந்திடுவாள் மனைவி
நோய்போன்று வீழ்ந்துவிடில்
சேய் போல பார்ப்பாளே மனைவி

பேர் சொல்ல பிள்ளை வரம் கிடைத்தாலும்
நிறைவேற பொறுப்பேற்பாள் மனைவி
கணவன் அற்ற வாழ்வுதனை
கனவில்கூட வெறுத்திடுவாள் மனைவி

- ரூபி

# கடன் வாங்கி கடன் கொடுத்து....



ஊரில் பெரும்பான்மையான பெண்கள் தங்கள் குடும்பத்தில், நடக்கும் கலியாண வைபவங்களுக்கும், இன்னும் ஏனைய விசேட காரியங்களுக்கும் செல்வதற்காகப் பக்கத்து வீட்டில் தங்க நகைகளை இரவல் வாங்கி தன்னை அலங்கரித்துச் செல்வது ஊரில் பரவலாக இருந்து வரும் வழக்கமாக உள்ளது.

இது முற்றிலும் தவறானதும் தடுக்கப்பட வேண்டிய விடயமாகும். காரணம் அப்படி இரவல் வாங்கி நகைகள் அணிந்து செல்லும் பொழுது அது வழியில் எங்கேனும் தவறி விழுந்து விட்டாலோ, திருடப்பட்டு விட்டாலோ, உடைந்து பகுதி விழுந்து விட்டாலோ அல்லது ஏதேனும் அதற்குச் சேதாரம் ஏற்பட்டு விட்டாலோ நாம் அதை சொந்தக்காரருக்கு உரிய முறையில் வாங்கியபடி திருப்பிச் செலுத்த வாங்கியவர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

இன்றைய சூழ்நிலையில் பணம் இல்லாமல் தானே நாம் போதிய நகைகள் வாங்க இயலாமல் போய் விட்டது. அப்படி இருக்கும் பொழுது மற்றவர்களின் விலையுயர்ந்த நகைகளை ஒரு மணி நேரமோ அல்லது இரண்டு மணி நேரத் தேவைக்காக இரவல் வாங்கிச்செல்வதால் மேற்சொன்ன ஏதேனும் எதிர்பாராத நிகழ்வுகள் நடந்து விட்டால் அதைத் திருப்பிக் கொடுக்க முடியுமா? அல்லது அதன் தொகையை உடனே ஏற்பாடு செய்து உரியவருக்கு வழங்க முடியுமா? நகை இரவல் தந்தவர் உடன்பிறந்தவளாக இருந்தாலும் இன்றைய சூழ்நிலையில் சும்மா இருந்து விடுவாளா? அவள் சும்மா இருந்து விட்டாலும் அவள் கணவன் தான் சும்மா இருப்பானா? அதனால் நமக்கு வரும் பிரச்சினைகள், சண்டை, சச்சரவுகளைப் பெண்கள் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

நம்மிடம் உள்ள நகைகளை மட்டும் அணிந்து சென்று விட்டால் கலியாணப்பந்தல் நம்மை திரும்பி அனுப்பி விடுமா? அல்லது உண்ட சோறு தான் செரிக்காமல் நின்று விடுமா?


இன்று ஒரு பெண் விற்கும் விலைக்குத் தேவையற்ற பிரச்சினைகளை நாம் ஏன் தேடிப்போக வேண்டும்? உலக ஆசாபாசங்களை அடக்கிய, எதிலும் சிக்கனம் பேணும் நல்ல பெண் கிடைத்துவிட்டால் 'கப்பலுக்குப் போன மச்சானை, கப்பலையே வாங்க வெச்சாள்' என்று திருப்பிப் பாட வைத்து விடுவாள்.

'நல்ல குடும்பம் ஒரு சிறந்த பல்கலைக் கழகம்' அதற்குத்தான் எல்லோரும் தம்மால் ஆன முயற்சிகளை செய்துகொண்டு இருக்கிறோம். எந்தச் சொல்லுக்கும் சொந்த உழைப்பைப் பயன்படுத்துங்கள்.

- சுரபி



# குடும்ப முன்னேற்றத்துக்கு தடையாக நிற்கும் பெண்கள்!



- மிருஜா

இன்றைய சூழலில் படித்த அனைவருக்கும் பாதுகாப்பான அரச வேலை கிடைப்பது சாத்தியமில்லை. தனியார் துறையும் மாத சம்பளத்துக்கு எல்லோருக்கும் வேலை கொடுத்துவிட முடியாது. ஏதேனும் சொந்தமாக தொழில்தொடங்கி முன்னேறுவதே வழி. திருமணமான ஆண்கள் இத்தகைய முயற்சி எடுப்பதைப் பெண்கள் ஆதரிப்பதில்லை.

பெண்களில் பெரும்பாலானோர் எதிர்மறை சிந்தனை கொண்டவர்களாக இருக்கிறார்கள் பெண்கள் நஷ்டம் ஆகி விட்டால் என்ன செய்வது? என்பதையே அதிகம் கேட்கிறார்கள்.

இதைத் [illegible] என்று சொல்ல முடியாது. எதையும் நம்பிக்கையுடன் கருதாமையே. எத்தனையோ பேர் தொழில் தொடங்கி நல்ல நிலையில் இருக்கிறார்கள். அவர்களில் பெண்களும் உண்டு. அவர்களை உதாரணமாக கொள்ளாமல் அவநம்பிக்கையுடன் சிந்திப்பது குடும்பத்துக்கு மட்டும் அல்ல, நாட்டுக்கும் இழப்புத்தான்.

சுயமாக தொழில் தொடங்குவது போன்ற முயற்சி எடுக்கும்போது உடனிருப்பவர்களின் உணர்வுப்பூர்வமான ஆதரவு தேவை. கூட்டுக்குடும்பங்கள் மறைந்து போனதால் ஏற்பட்ட தீமைகளில் இது முக்கியமானது.

தைரியம் சொல்லவும், புரிந்து கொள்ளவும் இப்போது யாரும் இல்லை. மனைவி மட்டுமே உடன் இருக்கிறார். அவரும் அவநம்பிக்கையுடன் இருக்கிறார்.

பொதுவாகவே பெண்கள் ரிஸ்க் எடுக்க விரும்பமாட்டார்கள். பாதுகாப்பான நிலையையே தேர்ந்தெடுப்பார்கள் . சுயமாகத் தொழில் தொடங்கி முன்னேறிய பெண்களுக்குப் பின்னணி நல்லவிதமாக இருக்கலாம். இதில் விதிவிலக்கு இருக்கவும் வாய்ப்புண்டு. பெண்களுக்கு தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் கற்றுத் தராமல் கவனம்,கவனம் என்றே சமூகம் சொல்லிக்கொண்டிருக்கிறது.

பெண்களிடம் எதிர்மறை சிந்தனையை தொலைக்காட்சித் தொடர்கள்தான் வளர்த்துக்கொண்டிருக்கின்றன. தன்னம்பிக்கை தரும் நூல் நல்ல முயற்சிகளை, எண்ணங்களை ஏற்படுத்துவது போல தொலைக்காட்சித் தொடர்கள் நஞ்சை மனதில் ஏற்றிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் மோசமான திருப்பங்களையும், சோகங்களையுமே பார்க்கும் மனம் புதிதாக தொடங்கும் எந்த முயற்சியையும் எதிர்மறையாகவே பார்க்கும். இது ஒரு மோசமான நிலைமைக்குக் கொண்டு செல்கிறது என்பதே உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வை அரசு வழங்காது என்பதை உலகம் உணரும் வரை பொறுப்போம்

எமது கட்சியின் தேசிய மாநாட்டில் பங்கேற்பதற்காக வருகை தந்திருக்கும் அதன் உருவமாகவும், உயிராகவும், இயங்கு சக்தியாகவும் விளங்குகின்ற உங்கள் ஒவ்வொருவரையும், இந்த மட்டக்களப்பு மண்ணில் நான் உவகையுடன் வரவேற்கிறேன்.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் ஆன்மாவினது சின்னமாக விளங்குவதும், உயரிய விழுமியங்களுடன் தனக்கெனத் தனித்துவமான ஓர் அரசியற் பாரம்பரியத்தைக் கொண்டதுமான இலங்கைத் தமிழரசுக் கட்சியினது 2012 ஆம் ஆண்டில் நிகழும் கட்சியின் 14ஆவது தேசிய மாநாட்டில் அதன் தொண்டர்களாகிய நாம் பெருமிதத்துடன் ஒன்றுகூடியிருக்கின்றோம்.

இலங்கைத் தீவை வன்கவர்ந்து ஆண்ட வெளியார்களிடமிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்துவிட்டது எனப் பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னரான கடந்த 60 ஆண்டு கால வரலாற்றில் முன்னெப்போதும் இருந்திராதவிதமான ஒரு புதிரான காலகட்டத்தில் நாம் இங்கே நம்பிக்கையுடன் ஒன்றுகூடியிருக்கின்றோம்.

தமிழ் மக்களது அரசியல் அபிலாஷையின் அங்கீகாரம் பெற்ற வெளிப்பாட்டு வடிவமாக இலங்கையில் மட்டுமன்றி, அனைத்துலக ரீதியிலும் தங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக எமது மக்களால் சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமிதம்மிக்க தனிப்பெரும் அரசியல் அமைப்பாக நாம் இங்கே அடக்கத்துடன் ஒன்றுகூடியிருக்கின்றோம்.

தமக்கே உரித்தான அடிப்படை மனித உரிமைகளையும், தம்மைத்தாமே ஆளுவதற்கான நியாயமான அரசியல் அதிகாரங்களையும் கேட்டமைக்காக மட்டுமே படுகொலை செய்யப்பட்டுவிட்ட நூறாயிரம் வரையான எமது மக்களின் புதைகுழிகளின் மீது அஞ்சலித்து நாம் இங்கே ஒன்றுகூடியிருக்கின்றோம்.

தாம் நேசித்த தமது மக்களின் அரசியல் விடுதலைக்கான அமைதிவழிப் போராட்டங்கள் வெற்றியடையாத சூழலில், ஆயுதமேந்திப் போராடி, தமது தூய உயிர்களை ஈகமாய்க்கொடுத்துவிட்ட தமிழ் இளைஞர்களின் அர்ப்பணிப்புகளை மனதில் இருந்தி நாம் இங்கே ஒன்றுகூடியிருக்கின்றோம்.

அரசு எமது இனத்தின் மீது ஓர் இனப்படுகொலையை நிகழ்த்தியது என்பதையும், எமது இனத்திற்கான அரசியல் உரிமைகளை அது தொடர்ந்தும் மறுத்துவருகின்றது என்பதையும் அனைத்துலக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பதிவாக ஆக்கி அரசின்மீது குறியீட்டு ரீதியான ஓர் உலகக் கண்டனமாக ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையின் பின்பலமாகச் செயற்பட்ட வெற்றியின் நிறைவுடன் நாம் இங்கே ஒன்றுகூடியிருக்கின்றோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியானது, அதன் பிதாமகரான தேசத்தந்தை சா. ஜே. வே. செல்வநாயகத்தால் தமிழர்களுக்கென இந்தத்தீவில் ஒரு சுயாட்சிஅரசை நிறுவ வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கட்சி தனது கொள்கையையே தனது பெயராகவும், அந்தக் கொள்கையையே தனது இயங்குவிதியாகவும் கொண்டிருக்கின்ற கட்சி.

இருந்தாலும், எமது கட்சியின் பெயர், எமது கட்சியின் கொள்கையை மட்டும் எடுத்தியம்பி நிற்கவில்லை. அது எமது இனத்தின் வரலாற்றையுமே குறித்து நிற்கின்றது. இந்தத் தீவில் தமிழர்கள் உன்னதமான சமூக - பண்பாட்டு வாழ்வை மட்டுமல்லாது, தன்னிறைவான ஒரு பொருளாதாரப் பொறிமுறையையும் முன்பொருகாலத்தில் கொண்டிருந்தனர். தமக்கெனத் தனித்த அரசுகளை நிறுவி, சீரிய முறையில் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வரை அவர்கள் தம்மைத்தாமே ஆண்டனர். பின்னர், இந்தத் தீவை வன்கவர்வுசெய்த வெளிநாட்டுப் படையெடுப்பாளர்கள், தமது இலகுவான ஆளுதலுக்காக முழுத் தீவையும் ஒரேநாடு என்று ஆக்குகின்ற வரையில் - இந்தத் தீவில் இறைமையுடைய தமிழரசுகளை எமது இனம் கொண்டிருந்தது என்ற வரலாற்றின் குறியீடாகவும் எமது கட்சி திகழ்கின்றது.

எமது கட்சியின் சின்னமாக, எமது தேசபிதா தேர்ந்தெடுத்த வீடு என்பதும் அதையே குறிக்கின்றது. இந்த வீடு என்பது எமது இனத்தின் இல்லம்; எமது இனத்தின் தாயகம்; எமது இனத்தின் இறையாண்மை. எமது இனத்தின் இல்லத்தை, எமது இனத்தின் தாயகத்தை, எமது இனத்தின் இறையாண்மையை, மீளவும் மீட்டெடுத்து, எமது இனத்திற்கே அதிகாரபூர்வமாக உரித்துடையதாக்கி விடுவதுதான் எமது கட்சியின் அடிப்படைக் கொள்கை. எமது கட்சியின் அந்த அசையாத கொள்கையைத்தான் எமது கட்சியின் சின்னமான வீடு பிரதிபலித்து நிற்கின்றது.

எவ்விதமாக ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் எமது கட்சிக்கு வரலாறு ஓர் அரசியல் பிறப்பைத் தந்ததோ, அதே விதமாகவே பத்தாண்டுகளுக்கு முன்னர் எமது இனத்தின் விடுதலைப் போராட்டம் இருந்த அன்றைய காலச் சூழலுக்கு இசைவாக, வரலாறு எமது கட்சிக்கு ஒரு புதிய அரசியற் பாத்திரத்தையும் தந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற குடையின்கீழ் கொள்கை ரீதியாக ஒன்றிணைந்த தமிழ் அரசியல் கட்சிகளைத் தலைமை யேற்று வழி நடத்தும் பாத்திரமே அது.

அந்தத் தலைமைப் பாத்திரம் என்பது கூட, எமது கட்சியின் வரலாறு, பாரம்பரியம், தனித்துவம் என்பவற்றின் அடிப்படையிலிருந்துதான் வந்தது. அந்தப் புதிய கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியே இன்றுவரை விளங்கி வருகின்றது. அவ்வாறே அது என்றும் விளங்கி வரும்.

ஆயுதப் போராட்டத்தின் வீழ்ச்சிக்குப் பின்னரான தற்போதைய சூழலில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆகிய நாம்தான் தமிழ் மக்களின் முதன்மைப் பிரதிநிதிகள். முற்றுமுழுதான இலங்கைப் படைமயமாக்கத்தின் கீழ் இலங்கை அரசின் முழுமையான ஆளுகையின் கீழ், பலவிதமான அழுத்தங்களுக்கு மத்தியிலும் - துணிவுடனும், உறுதியுடனும், தெளிவுடனும் வாக்களித்த தமிழ் மக்களால் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தனிப் பெரும் கட்சி எமது கட்சி.

அந்த வகையில், இப்போது நாம்தான் தமிழர்களின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள். எவ்விதமான ஆயுதப் பின்னணிகளும் அற்ற வன்முறைப் போராட்ட வடிவங்களை என்றைக்கும் நிராகரித்த - நீண்ட ஜனநாயகப் பண்புகளைத் தன்னகத்தே கொண்ட - நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டங்களையே எப்போதும் முன்வைத்த - இலங்கைத் தமிழரசுக் கட்சியான எமக்குத்தான் அதிகூடிய இராஜீய அங்கீகாரமும் அனைத்துலக சமூகத்தால் வழங்கப்படுகின்றது. இந்த இராஜீய அங்கீகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஏற்புடையதாகவும் உரித்துடையதாகவும் கூட பரிணமித்துள்ளது.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டம், இப்போது முற்றிலும் வேறுபட்ட புதியதோர் அத்தியாயத்திற்குள் நுழைந்திருக்கின்றது. இந்தப் புதிய வரலாற்றுப் பரிமாணத்தில் இந்தப் போராட்டத்தைத் தலைமையேற்று வழிநடத்திச் செல்லும் எமது கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களாகிய நாம், எமது கட்சியின் பேராளர்களாகிய உங்களுக்கும், எமக்கு வாக்களித்துத் தம்மைப் பிரதிநிதித்துவம் செய்யும் தகுதியைத் தந்த எமது மக்களுக்கும், எமது கட்சியின் கொள்கை நிலைப்பாடு சார்ந்த ஒரு விளக்கத்தை அளிக்கவேண்டிய கடமைப்பாடு உடையவர்களாக இருக்கின்றோம்.

1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னான முதல் 30 ஆண்டுகால வரலாறு என்பது தமிழர்களைப் பொறுத்தவரையில் ஏமாற்றுதல்களாலும் அவமதிப்புகளாலுமே நிரப்பப்பட்டிருந்தது. தமிழர்களோடு எழுதப்பட்ட உடன்பாடுகள் கிழித்தெறியப்பட்டன.

தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் தூக்கியெறியப்பட்டன; சகமனிதர்களாக வாழ்வதற்குத் தமிழர்களுக்கு இருந்த உரிமைகளை நிராகரிக்கும் அரசமைப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன; இவற்றுக்கெல் லாம் நீதி கேட்டுத் தமிழினம் அமைதியாக முன்னெடுத்த மென்முறைப் போராட்டங்கள் அனைத்துமே ஆயுத வன்முறைகள் மூலம் ஒடுக்கப்பட்டன.

இந்த அவமதிப்புகள் எல்லாவற்றினதும் அடிப்படை உண்மையாக இருந்தது, எங்களுக்குள் ஓர் அகப்பலமோ, அல்லது எங்களுக்கு வெளியே ஒரு புறப் பலமோ இல்லாமல் எமது இனம் இருந்ததுதான். ஏமாற்றுதல்களாலும் அவமதிப்புகளாலும் நிரப்பப்பட்ட இந்த வரலாற்றுப் பின்னணியில்தான் - தமிழினத்திற்கென ஒரு தனியான தனித்த அரசை உருவாக்குவதைத் தவிர, வேறு வழிகள் இல்லை என்ற நிலைப்பாடு தோற்றம் கொண்டது.

அந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே எமது கட்சியையும் ஓர் அங்கமாகக் கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழம் என்ற தனியரசை உருவாக்கவேண்டும் என்ற வரலாற்றுத் தீர்மானத்தை 1976 ஆம் ஆண்டு எடுத்தது. எமது கட்சியின் அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலும், எமக்கென ஓர் அகப்பலம் இருக்கவேண்டும் என்ற அரசியற் தேவையின் அடிப்படையிலும் வன்முறையை வன்முறைமூலமே எதிர்கொள்ளத் துணிந்த தமிழ் இளைஞர்கள், ஆயுத எதிர்ப்பு இயக்கங்களாக எழுச்சி கொண்டெழுந்தனர்.

தனக்கு எதிரான வன்முறைதான் தமிழினத்தை வன்முறைப் பாதைக்கு இட்டுச்சென்றது என்பதே வரலாறு. அமைதியான போராட்டங்கள் எல்லாம் ஆயுதபலம் கொண்டு கொடூரமாக நசுக்கப்பட்ட போது, தாமும் பதிலுக்கு ஆயுத பலத்தையே நாடவேண்டும் என்ற சூழலுக்குள் தமிழ் இளைஞர்கள் தள்ளப்பட்டனர்.

வேறு வழிகள் எதுவும் இல்லை என்ற விரக்தி நிலைக்கு வந்த பின்னர், ஆயுதபலத்தை மட்டுமே தாமும் நம்பவும் - வன்முறைப் போராட்ட வடிவத்தையே தாமும் கைக்கொள்ளவும் தமிழ் இளைஞர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

வன்முறை வடிவ அரசியல் போராட்டத்தின் வரலாறு ஆரம்பித்த 1980களுக்குப் பின்னான 30 ஆண்டுகள் எமது இனத்தினது சரித்திர ஏட்டில் இன்னொரு ஆழப்பதிந்த அத்தியாயம். இரத்தமும், கண்ணீரும், வீரமும், பெருமிதங்களும், துன்பங்களும், அழிவுகளும் என நீண்டுசென்ற அந்த ஆயுதப் போர் அத்தியாயம் உண்மையில் இரண்டு விடயங்களைச் சாதித்திருந்தது.

ஒன்று, அகப்பலமாக எமது இனத்திற்கு உள்ளேயே உரு வெடுத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமாண்டமான வளர்ச்சி. அடுத்தது, எமது இனத்திற்குப் புறப் பலமாக இருக்கக்கூடிய [illegible] நிலைகளோடு பரிணமித்த இந்தியத் தலையீடு.

இந்தியாவின் [illegible] முடியாத வரலாற்று நியதியாக எமது போராட்டத்தில் இடம்பெற்றது. எமது விருப்புகள் என்னவாக இருந்தாலும், இந்தியாவின் தேசிய நலன்களுக்கு ஒத்திசைவாக அமையாத எந்த ஓர் அரசியல் தீர்வையும் இலங்கைத் தீவில் நாம் பெற்றுவிடுவதை இந்தியா வரவேற்காது என்பதுவே, இந்தியத் தலையீடு எமக்கு உணர்த்திய கட்டாயப் பாடமாக அமைந்தது.

எனினும், இந்தியத் தலையீடு என்ற அம்சத்தையே சாதகமாகப் பயன்படுத்தி, இந்தியாவின் துணையுடனும் ஆசீர்வாதத்துடனும், எமது இனம் மதிப்புடன் வாழக்கூடிய ஒரு தீர்வை ஒன்றுபட்ட இலங்கைக்குள் பெறக்கூடிய ஒரு வாய்ப்பை நாம் பற்றிநின்றோம்.

எமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், காலம் இட்ட ஒரு கட்டாயக் கோலமாக இந்தியத் தலையீடு அமைந்தது. நுட்பமான இராஜதந்திர வளைவுகளை வரைந்து, சூட்சுமமான அரசியல் வர்ணங்களைக் கலந்து, அதனை ஓர் அழகான கோலமாக ஆக்குவதும், அல்லது, அதனைக் கலைத்துச் சிதைத்து அலங்கோலமாக ஆக்கிவிடுவதும் எமது கைகளிலேயே இருந்தது.

அந்தவகையிலேயே பெரும் அகப்பலத்தை வைத்திருந்தும் கூட அடையக் கடினமான தமிழீழத் தனியரசு என்ற அசாத்தியமான ஒரு கொள்கைக்காகத் தொடர்ந்தும் உயிர்களைப் பலியிடுவதைத் தவிர்த்துவிட்டு, ஒரு புறப்பலமாக உருவெடுத்திருந்த இந்தியாவின் அனுசரணையுடன், அந்த வாய்ப்பைக் கச்சிதமாகப் பயன்படுத்தி, ஒன்றுபட்ட இலங் கைக்குள் எமது அடிப்படை உரிமைகளை விட்டுக்கொடுக்காத ஒரு தீர்வைக் கண்டறியும் முயற்சிகளை எமது கட்சி ஆதரித்தது.

மென்முறை வழிகளிலும் - வன்முறை வழிகளிலும் கடந்த 60 ஆண்டுகளாக எமது இனம் நிகழ்த்திய நீண்ட விடுதலைப் போராட்டம் எமக்குப் பல பட்டறிவுகளைத் தந்திருக்கின்றது. ஓர் இனமாக எங்களைப் புடம்போட்டு எடுத்திருக்கின்றது. கற்றறிந்த பாடங்களுக்காக நாங்கள் காவுகொடுத்த விலை மிகப் பெரியதாக இருக்கலாம்.

இருந்தாலும், ஒரு சுபீட்சமான அரசியல் எதிர்காலத்தை வேண்டி நிற்கும் இனமான நாங்கள், அந்த இலட்சியம் நோக்கி எடுத்துவைக்கவேண்டிய அடுத்த அடிகளுக்கு நாங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் அத்திவாரக் கற்கள் போன்றவை. தத்தமது தேச நலன்களை மட்டுமே மையப்படுத்தி உலக ஒழுங்கை வகுத்துச்செல்லும் உலகப் பெரும் சக்திகளின் சூட்சுமங்களைப் புரிந்து, அதற்கேற்ப மட்டுமே நாங்கள் இனி காய்களை நகர்த்திச் செல்லவேண்டும் என்பதுதான் கடந்த 60 ஆண்டுகாலப் போராட்டம். குறிப்பாக, கடந்த 30 ஆண்டுகால வன்முறை வடிவிலான ஆயுதப் போராட்டம் எமக்குக் கற்பித்துச் சென்றிருக்கும் வரலாற்றுப் பாடம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியும், மறைவும் எமக்கு உணர்த்தி நிற்பது என்னவெனில், எவ்வளவுதான் பலம் வாய்ந்ததாக இருந்தாலும், எவ்வளவுதான் தர்மத்தின்பாற்பட்டதாக இருந்தாலும், தமிழர்கள் இந்தத் தீவில் வன்முறை அரசியல் செய்வது நடைமுறைச் சாத்தியமானதாக என்றைக்குமே இருக்கப்போவதில்லை என்பதாகும். அத்தோடு, இராணுவ பலத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, உலக ஓட்டத்திற்கு ஒத்திசைவு இல்லாத அரசியல் கோட்பாட்டின் ஊடாகக் கட்டியெழுப்பப்படும் எந்த ஒரு போராட்டமும் நின்று நிலைக்காது என்பதுமாகும். அந்த வகையில்தான் அனைத்துலகப் பரிமாணங்களுடன் பிறந்திருக்கின்ற தற்போதைய புதிய சூழலில், அந்தச் சூழலுக்கு ஏற்றவகையான நெகிழ்வுத் தன்மைகளுடனும், சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடனும் பக்கபலத்துடனும் எமது உரிமைப் போராட்டத்தை நகர்த்திச் செல்லும் புதிய வழிமுறைகளை நாம் கையாளத் தொடங்கியுள்ளோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி அதன் தந்தையர்கள் கொண்டிருந்த அடிப்படைக் கொள்கையிலிருந்து விலகிச் செல்கின்றது என்றோ, அல்லது, தான் தலைமையேற்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவறான தடத்தில் வழி நடத்திச் செல்ல முனைகின்றது என்றோ எவரும் அர்த்தப்படுத்திவிடக் கூடாது. பேரம் பேசுவதற்கு அடிப்படையான அகப்பலம் எல்லாம் அழிந்தொழிந்துபோன பின்னர், நிர்க்கதியாகி, இருள் சூழ்ந்த அரசியல் எதிர்காலத்தை எதிர்நோக்கி நிற்கும் எமது மக்களுக்கு, இன்று இருக்கும் ஒரே நம்பிக்கை ஒளி அனைத்துலக சமூகம் எமது தேசிய போராட்டத்தின் மீது நியாயத்தின் அடிப்படையில் கொண்டிருக்கின்ற ஈடுபாடுதான்.

அதுதான் எம்மோடு இப்போது சேர்ந்திருக்கின்ற புதிய புறப்பலம். முன்பொரு தடவை இந்தியாவுடன் எழுந்த கருத்து வேறுபாடு, இருபதுவருடங்களாக அந்த நாட்டை எம்மிலிருந்து அகன்று நிற்கவைத்தது மட்டுமன்றி, எமக்கு எதிராகவும் செயற்பட வைத்தது என்ற வரலாற்றுப் பாடத்தை நாம் மறந்துவிடக் கூடாது.

இன்னொரு தட்வையும் நாம் அவ்வாறே செயற்பட்டு, அனைத்துலக சமூகத்தை எம்மிலிருந்து அந்நியப்படுத்திவிடக் கூடாது என்பதுதான் எமது அக்கறை. அனைத்துலகச் சமூகத்தைச் சங்கடப்படுத்தாதவகையில் அனுசரித்துப்போக நாம் செய்யும் சில மென்போக்கான விட்டுக்கொடுப்புகள் என்பவை, எமது இராஜதந்திரத்தின் நுட்ப நகர்வுகளே அல்லாமல், எமது அடிப்படைக் கொள்கைகளைக் கைவிடுவதற்கான சமிக்ஞைகள் அல்ல.

ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்பிற்கு வெளியே, ஐக்கிய இலங்கை என்ற அரசமைப்பிற்குள், தமிழர்கள் சுயமரியாதையுடனும், தன்னிறைவுடனும் வாழத் தேவையான ஆகக்கூடிய அரசியல் அதிகாரங்களை உள்ளடக்கிய ஓர் ஆட்சியலகையே தமிழ்த் தேசிய இனத்தின் இறையாண்மைப் பிரச்சினைக்கான தீர்வாக நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இத்தகைய அதிகாரங்களைக் கொண்ட ஓர் ஆட்சியலகிலேயே எமது இனத்திற்கு நீக்கமற உரித்தான உள்ளகச் சுயநிர்ணய உரிமை பூர்த்தியடைய முடியும் என நாம் நம்புகின்றோம்.

இந்த ஆட்சியலகின் விட்டுக்கொடுக்க முடியாத அடிப்படையாக இருக்க வேண்டியது இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களை உள்ளடக்கிய தமிழ் பேசும் மக்களின் பிரிக்கப்படாத வரலாற்று வாழ்விடமாகும். இந்த ஆட்சியலகில் நமது நிலத்தை நாமே ஆளுகை செய்து, நமது சமூகத்தை நாமே பாதுகாத்து, நமது பொருளாதாரத்தை நாமே வளப்படுத்தி, நமது பண்பாட்டை நாமே செழுமைப் படுத்தும் அதிகாரங்கள் எத்தகைய இடையூறுகளுமற்று உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த ஆட்சியலகிற்கான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் முன்னெடுப்பானது 1987ஆம் ஆண்டு, இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தத்தை விடவும் மேலே உள்ள ஒரு புள்ளியிலிருந்து தொடங்கி, அர்த்தபூர்வமான அதிகாரப்பகிர்வைத் தருவதாகப் பரிணமிக்க வேண்டும் என முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனையே எமது கட்சியின் நிலைப்பாடும் ஆகும்.

இந்த நிலைப்பாட்டை நாம் எடுத்ததற்கான காரணம், 13ஆவது சட்டத்திருத்தத்தையே ஒரு நேர்த்தியான தீர்வாக நாம் ஏற்றுக்கொண்டுவிட்டோம் என்பதோ, அல்லது மேற்குறிப்பிட்ட வகையிலான எமது உள்ளக சுய நிர்ணய உரிமை தொடர்ந்தும் மறுக்கப்படும் சூழலில், சர்வதேசச் சட்ட நியதிகளின் அடிப்படையில் எமக்கிருக்கும் புறவயச் சுயநிர்ணய உரிமையை நாம் பிரயோகிக்கமாட்டோம் என்பதோ அல்ல. மாறாக, இதுவே, இன்றைய சூழலில் நடைமுறைச்சாத்தியமான ஒன்றாக இருப்பதனாலாகும்.

மேலும், எமக்கான அரசியல் அதிகாரங்கள், இந்தியாவினதும் அமெரிக்கா உள்ளிட்ட உலக சமூகத்தினதும் அனுசரணையுடனும் துணையுடனுமே பெறப்படவேண்டியுள்ள தற்போதைய சூழலில் - அவற்றைப் பெறுவதற்கு நாம் முன்வைக்கும் மேற்படி தீர்வுப் பொறிமுறையானது, நியாயமான ஒன்று என அவர்களால் கருதப்படத்தக்கதாகவும் இருக்கும்.

மேலும், ஐக்கிய இலங்கைக்குள்ளான அரசியல் பொறிமுறை ஒன்றைத் தீர்வாகப் பெறக்கூடிய தன்மையே தற்போது நிலவுவதால், எம்மால் முன்வைக்கப்படும் மேற்கூறப்பட்ட தீர்வு யோசனை இலங்கைத் தீவிற்குள் வாழும் எந்தத் தரப்பினராலும் எதிர்க்க முடியாத வகையில் நியாயப்பாடு உள்ளதாகவும் இருக்கும்.

குறிப்பாக, தமிழ்த் தேசிய இனத்தின் இறையாண்மைப் பிரச்சினைக்கு நாம் காண முற்படும் எந்த ஒரு தீர்வும், தமிழர் தாயகத்தில் வாழும் முஸ்லிம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு கட்டமைப்பாக அமைய வேண்டும்; அது அவர்களது சமூக - பொருளாதார - அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்; அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய பொறிமுறையைக் கொண்டிருக்கவேண்டும்.

ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்பிற்குள், தமிழ் பேசும் மக்களாகிய எமக்கு, எமது அரசியல் - குடியியல் - பொருளாதார - சமூக - பண்பாட்டு அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக் கூடியவிதமான ஓர் ஆட்சியலகை ஏற்படுத்த இந்தத் தீவின் ஆட்சியாளர்கள் மனப்பூர்வமாக முன்வரவேண்டும்.

அந்தத் தீர்வானது, தமிழ் பேசும் மக்கள், தமது அபிலாஷைகள் தொடர்பான தமது ஜனநாயகத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய சட்டத்தகுதி உடையதாக அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்.

இப்போது நாங்கள் பொறுமை காக்க வேண்டும்.

தமிழர்களுக்கு இந்தத் தீவில் நியாயமான அரசியற் பிரச்சினைகள் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்பதையும், அந்தப் பிரச்சினைகள் புதுப்புது வடிவங்களில் பரிணமித்து வருகின்றன என்பதையும் உலகம் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. போரின் கடைசிக் காலத்தில் மிகப் பாரிய மனித அழிவுகள் இங்கே நிகழ்த்தப்பட்டன என்பதையும் உலகம் ஏற்றுக்கொண்டிருக்கின்றது.

போரை நிகழ்த்துவதற்கு இலங்கை அரசிற்கு இராணுவ ரீதியிலும், இராஜதந்திர ரீதியிலும் உறுதுணையாய் இருந்த இந்த சர்வதேச சமூகம், போர் நிகழ்ந்தபோது அரசால் தமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அதன்மீது இப்போது இறுக்கமான அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளது.

அந்த வாக்குறுதிகள் என்பவை போர் முடிவடைந்த பின்னர் தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்படும் என்பதாகும். இப்போது, போர் முடிந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும், தமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததால் விசனம் கொண்டுள்ள அனைத்துலக சமூகம் இராஜதந்திரக் களத்தில் இறங்கி அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளது.

(20B ஐப் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வை அரசு வழங்காது என்பதை உலகம் உணரும் வரை பொறுப்போம்

இந்த நேரத்தில் நாம் பொறுமைகாக்கவேண்டும்.

இனப் பிரச்சினையில் உலக சமூகத்தினர் அதீத ஈடுபாடு கொண்டுள்ள இந்த நேரத்தில், அவர்களோடு நாம் சேர்ந்து இயங்கவேண்டும். அவர்களது ஆலோசனைகளை நாம் பெற்றும், அவர்களுக்கு எமது ஆலோசனைகளை வழங்கியும் ஒத்திசைவாக இயங்க வேண்டும்.

இந்த வேளையில் அவர்களைச் சர்ச்சைகளுக்குள் சிக்கவைக்கும் விதமாகவோ அல்லது சங்கடத்திற்கு உள்ளாக்கும் விதமாகவோ நாம் செயற்படுவோமேயானால், அது எமது இனத்தைத்தான் பாதிக்கும். இப்போது எமது மூலோபாயம் என்னவெனில், இவ்வளவு வருடங்களும், மக்களின் இனப்பிரச்சினையை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என விவரித்துவந்த இலங்கை அரசின் உண்மை முகத்தை வெளிப்படுத்துவது ஆகும்.

அதாவது, தமிழருக்கு உரிமைகள் வழங்குவதை இழுத்தடித்த இலங்கை அரசின் உண்மையான பிரச்சினை, தமிழர்களுக்கு உரிமைகள் வழங்குவதற்கு அது இதயசுத்தியுடன் இல்லை என்பதை உலக சமூகத்தின் முன் நாம் தெளிவாக நிரூபிக்க வேண்டும். இன்னொரு வகையில் சொல்லுவதனால், ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்புக்குள் எமக்கான உரிமைகளைப் பெறுவது சாத்தியமற்றது என்பதை நாம் உலக சமூகத்திற்கு நிரூபிக்க வேண்டும். மேலுமொரு வகையில் சொல்லுவதானால் - தாம் எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றிபெறமுடியாது என்பதை இந்த அனைத்துலக சமூகம் தானாகவே உணரும்வரை நாம் பொறுமை காக்கவேண்டும். இன்னும் அழுத்தமாகச் சொல்லுவதானால், ஒன்றுபட்ட இலங்கை என்ற அமைப்பிற்குள் தமிழர்களுக்கான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க பேரினவாத ஆட்சியாளர்கள் ஒருபோதும் முன்வரமாட்டார்கள் என்பதை நாங்களே சொல்லாமல், அனைத்துலக சமூகம் அதுவாகவே தன் அனுபவங்கள் வாயிலாக உணர இடமளிக்க வேண்டும்.

இந்தப் பூலோகம் நீதியின் அச்சாணியில் சுழல்வதில்லை அடக்கப்பட்ட தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் எல்லாம் நியாயத்தராசில்வைத்து நிறுக்கப்படுவதுமில்லை. ஜனநாயகத்தைப் பற்றியும், மனித உரிமைகளைப் பற்றியும் பறைசாற்றுகின்ற உலகப் பெரும் சக்திகள் எல்லாம் நீதி தேவர்களும் அல்லர். அனைத் துலக வல்லரசுகளும் அவற்றைச் சார்ந்து இயங்கும் சக்திமிக்க உலக நிறுவனங்களும் ஏதோ தமது நலன்களை எல்லாம் பணயம் வைத்துவிட்டு எமக்காக இரங்கி வந்து, எமது உரிமைகளைப் பெற்றுத்தரப் போகின்றன என்றும் நாங்கள் நம்பவில்லை.

இருந்தபோதிலும் - அண்மைக்காலங்களில் மோசமான மனிதஉரிமை மீறல்களை அனைத்துலக சமூகம் வெறுமனே கைகட்டி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை என்பதும், நாங்கள் யதார்த்தத்தில் தொடர்ந்து அவதானித்துவரும் உண்மைதான்.

அதனால், தமது தேசிய நலன்களை அடிப்படையாக வைத்து அவர்கள் நிகழ்த்தும் சதுரங்க ஆட்டத்தின் ஏதோ ஒரு பகுதியாக, அவர்களது மனிதாபிமான உள்ளுணர்விற்கும் தேசநலன் சார்ந்த முனைப்பிற்கும் இடையிலிருக்கும் ஒரு புள்ளியில் எமது நலன்களும் பாதுகாக்கப்படலாம்.

அதற்கு உகந்த சூழலை நாம்தான் பேண வேண்டும். கனிந்துவரும் சூழலைக் குழப்பாமல், அனைத்துலக சமூகத்தை அசௌகரியப் படுத்தாமல், நிலைமையை நாங்கள் பக்குவமாகக் கையாள வேண்டும். அதற்காக - நாம் பொறுமை காக்க வேண்டும்.

எண்பதுகளின் நடுப் பகுதியில் இந்தியத் தலையீடு நிகழ்ந்தபோது இருந்த உலகச் செல்நெறி இப்போது மாறிவிட்டது. இப்போது ஆடுகளம் பழையதானாலும் அதைச் சூழ நிகழ்ந்துவிட்ட மாற்றங்கள் புதியவை; ஆட்டம் பழையதானாலும், அதன் தந்திரோபாயங்கள் புதியவை; இலக்குகள் பழையவைதான். என்றாலும், அவற்றை அடைவதற்கான மூலோபாயங்கள் புதியவை; ஆட்டக்காரர்கள் பழையவர்கள்தான். எனினும், அவர்கள் சேர்ந்திருக்கும் அணிகள் புதியவை. தமிழர்களுக்கும் அப்படித்தான். இலட்சியம் பழையதே . ஆனாலும், இனி நாங்கள் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் முற்றிலும் புதியவை. முன்பொருகாலம், அமெரிக்கா, இந்தியாவிற்கு எதிரான பக்கத்தில் இருந்தது. ஆனால், இன்று எமக்குச் சாதகமாகக் கனிந்து வந்துள்ள சூழலில் இந்தியாவும் அமெரிக்காவும் ஏறக்குறைய ஒரே பக்கத்தில் இருக்கின்றன.

ஆனால், இலங்கை அரசோ, இவர்களுக்கு மாறான பக்கத்தில் இருப்பவர்களுடன் நட்புறவைத் தொடர்ந்தும் வளர்த்துச் செல்கின்றது. இலங்கை அரசை வளைத்து வியூகமிட்டு ஐ. நா. மனிதஉரிமைகள் பேரவையில் அண்மையில் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையை ஆதரித்து இந்தியா வாக் களித்தமை, எமக்குச் சாதகமாக அரங்கேறிய ஓர் அற்புதமான உலக நிகழ்வு. அதனை எதிர்கால அரங்கேற்றங்களுக்கான ஓர் எதிர்வுகூறல் என்றே கருத வேண்டும்.

எனது பெருமதிப்பிற்குரியோர்களே!

**ஆளணிகள், அம்பு வில்லுகளுடன் சாதிக்க முடியாது போன ஒப்பற்ற உயரிய காரியங்களைக் கூட உயிரழிவு ஏதுமின்றிச் சாதிக்கும் மகத்தான வாய்ப்பை இந்தப் புதிய ஆட்ட ஒழுங்கு எமக்குப் பெற்றுத் தரலாம்.**

**அதனால் தான் - நாம் பொறுமை காக்க வேண்டும்.**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகிய எமக்கு இருக்கின்ற பலம் என்பது நாம் ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதுதான். தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக, நேர்மையான முறையில், சட்ட பூர்வமாக நிகழ்ந்த தேர்தல்களின் மூலம் எமது மக்கள் எம்மைத் தேர்ந்தெடுத்தனர்.

நாங்கள் மக்களின் மலையான ஆதரவைப்பெற்ற மாபெரும் அரசியல் அமைப்பு. அதனால்தான், எமது அரசியற் செயற்பாடுகளை மதித்து, அனைத்துலக சமூகமும் எமக்குரிய அங்கீகாரத்தைத் தருகின்றது. ஆனால், நாம் கடும்போக்குவாதிகள் என்றோ, நெகிழ்வுத் தன்மை அற்றவர்கள் என்றோ, மீண்டும் வன்முறைக்குத் தூபமிடும் விதமான மறைமுக எண்ணங்களைக் கொண்டவர்கள் என்றோ உலகம் கருதுமிடத்து நாமும் இன்றைய இராஜதந்திர முன்னெடுப்புகளில் இருந்து ஓரங்கட்டப்படலாம். அதனால், நாங்கள் எமது சொற்களிலும் செயல்களிலும் மிகுந்த நுட்பத்தைப் பேண வேண்டும் மிகுந்த அவதானத்துடன் காய்களை நகர்த்தவேண்டும்.

ஆதலால் - நாம் பொறுமை காக்கவேண்டும்.

முப்பது ஆண்டு கால மிக நீண்ட போர் எமது சமூகத்தின் வாழ்வாதார அபிவிருத்தியை முற்றாக முடக்கிவிட்டது என்பது உண்மைதான்; அவ்வாறு முடக்கியது மட்டுமின்றி, எமது சமூகத்தின் பொருளாதாரத்தை பல தசாப்தங்களுக்குப் பின்தள்ளிவிட்டது என்பதும் உண்மைதான்; அவ்வாறு பின்தள்ளியது மட்டுமன்றி, தயவு தாட்சண்யமின்றி நிகழ்த்தப்பட்ட போரின் நேரடியான தாக்கம், எமது சமூகத்தை, அன்றாட வாழ்வுக்கே அல்லற்படும்படியான அதல பாதாளத்தில் வீழ்த்திவிட்டது என்பதும் உண்மை தான்; எங்களை, எமது சமூகத்தை, ஒட்டுமொத்தமான எமது இனத்தையே இந்த அதல பாதாளத்திலிருந்து மீட்டெடுத்து, உலகத் தரம் வாய்ந்த ஒரு வாழ்வின் சிகரத்திற்கு இட்டுச்செல்ல வேண்டிய பெரும் கடமை, எங்கள் எல்லோரிடமும் உள்ளது என்பதுவும் உண்மைதான்.

ஆனால், அதற்காக அன்பர்களே, அரசு முன்னெடுக்கும் அபிவிருத்தி என்ற மாயப் பொறிக்குள் நாங்கள் சிக்கிவிடலாகாது. ஏனெனில், அது ஒட்டுமொத்தமான எமது இனத்தின் இருப்பையே கேள்விக் குறியாக்கும் ஒரு சூழ்ச்சிப்பொறி; ஒரு மரணப் பொறி.

எமது மக்களின் புனர்வாழ்வுப் பணிகளில் எமது ஈடுபாட்டை அரசு விரும்பவில்லை. எமது மக்களின் மீள் கட்டுமானத் திட்டங்களில் பங்கேற்க நாம் முன்வைத்த யோசனைகளை அரசு பரிசீலிக்கவில்லை. எந்த மக்களின் பிரதிநிதிகளாக நாம் உள்ளோமோ, அந்த மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான வேலைத் திட்டங்களில் எமது பங்களிப்பையும் வழங்குவதற்கு எமக்கு இருக்கும் உரிமையை, ஸ்ரீலங்கா அரசு நிராகரித்தது.

ஏனெனில், தமிழர் தாயகத்தின் குடிப்பரம்பல் கட்டமைப்பை மாற்றியமைத்து, தமிழினத்தினது தேசிய இயல்பின் அடிப்படையையே தகர்த்துவிடும் சதி நோக்கத்தையே, அபிவிருத்தி என்ற போர்வையில் இந்த அரசு நடைமுறைப்படுத்த முனைகின்றது. எனவேதான், அவல வாழ்விலிருந்து எமது மக்களை மீட்டு எடுத்துவிட வேண்டும் என்ற அவாவிலும், அவசரத்திலும் இந்த மாயப் பொறிக்குள் வீழ்ந்துவிடாமல் நாங்கள் அவதானமாக இருக்க வேண்டும்; நிதானமாக நகர வேண்டும்.

ஆனால் - எமக்கான கடமைகளை நாம் செய்வதற்கு ஏற்ற சூழல் கனிந்து வருகின்றது. அனைத்துலக சமூகத்தின் ஈடுபாடு, இலங்கை அரசுமீது கொண்டுவரும் அழுத்தம், எமது மக்களுக்கான பணிகளில் எம்மையும் கலந்திணைக்கும் நிர்ப்பந்தத்தை அரசிற்கு ஏற்படுத்தும். தவிர்க்க முடியாத கட்டாயமாக, எமது மக்களின் பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் எமது ஒத்துழைப்பைத் தேடிவரும் சூழல் அரசிற்கு ஏற்படும். ஆனால், அதுவரை, நாம் பொறுமை காக்க வேண்டும்.

இருந்தாலும், எமது பொறுமை கால வரையறை அற்றதாக நீண்டு செல்லப் போவதில்லை. எமது பொறுமைக்கும் எல்லைகள் உள்ளன. பொறுமையின் அந்த எல்லைகளை நாம் தொட்டதன் பின்னரான, அடுத்த கட்டத் திட்டங்களை நாம் கொண்டுள்ளோம். இலங்கைத் தீவில் வாழும் எமது மக்களை ஒருங்குதிரட்டி இந்த நாட்டிலுள்ள முற்போக்குச் சக்திகளின் ஒத்துழைப்புடனும், சர்வதேச சமூகத்தின் முழு ஆதரவுடனும் திடமான ஒரு சாத்வீகப் போராட்டத்தை முன்னெடுக்கவும் நாம் தயங்க மாட்டோம். காலம் குறித்து, நேர வரையறைகளை நிர்ணயித்து, நாம் அந்தத் திட்டத்தைச் செய லாக்கத் தொடங்குவோம்.

ஆனால், அந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்னதாக - ஓர் அரசியற் தீர்வைப் பெறுவதில் நாம் உளப்பூர்வமாகச் செயற்பட்ட வண்ணம், எமது இனச்சிக்கலோடு தொடர்புபட்ட எல்லாச் சக்திகளுக்கும் எமது பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுத்தருவதற்கு நாம் போதிய அவகாசம் வழங்கவேண்டும். எனவே, அதற்கு இடமளிக்கும் வகையிலும் நாம் பொறுமை காக்கவேண்டும். பொறுமை காப்பது கூட - மிகச் சக்திமிக்க ஓர் இராஜதந்திரச் செயற்பாடுதான்.

**தமிழ் மக்களின் சட்டபூர்வப் பிரதிநிதிகளான நாம் எல்லோரும் கூடியிருக்கின்ற இந்த அவையிலிருந்து, எம் எல்லோரது சார்பிலும், சிங்கள மக்களுக்கும், ராஜபக்ஷ அரசிற்கும், அனைத்துலக சமூகத்திற்குமான எமது நிலைப்பாட்டு விளக்கத்தை நான் தெளிவாக அளிக்க விரும்புகின்றேன்.**

உரிய அரசியல் அதிகாரங்களைப் பெற்று, தமது அரசியல், குடியியல், பொருளாதார, சமூக, கலாசார விடயங்களைத் தாமே நிர்வகிக்கும் ஆட்சியுரிமையை ஈட்ட வேண்டும் என்ற எமது இனத்தின் அரசியல் விருப்பு நியாயமானது; அது, தர்மத்தின் பாற்பட்டது; வரலாற்றின் வேரில் இருந்து எழுந்தது; அது எமது மக்கள் சமூகத்தின் ஓர் அடிப்படையான மனித உரிமையும் கூட; எமது அரசியல் விருப்பை அடைவதற்காக நாம் முன்வைக்கும் தீர்வானது வேறு எந்த ஓர் இனத்தினதும் இறையாண்மையைக் கேள்விக்கு உட்படுத்தாதது; இந்த நாட்டின் ஐக்கியத்தைப் பிரிக்கும் கபட நோக்கங்கள் எதுவும் இல்லாதது; வேறு எந்த ஒரு நாட்டினதும் தேசிய நலன்களைப் பாதிக்கும் எண்ணங்கள் அற்றது.

இந்த நாட்டிற்குள், உங்களது பூர்வீக நிலங்களில், உங்களுக்கான அதிகாரங்களைப் பிரயோகித்து நீங்கள் வாழ்வது போலவே, தமிழ் பேசும் மக்களும், தமது பூர்வீக நிலங்களில், தமக்கான அதிகாரங்களைப் பிரயோகித்து வாழும் உரிமையை உறுதிப்படுத்த முனைகின்றார்கள் என்ற அடிப்படை விடயத்தை நீங்கள் தயவு செய்து விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே, தனிப்பட்ட அரசியல் உள்நோக்கங்களுக்காக, இன முரண்பாட்டை முனைப்புறச் செய்து, இனத் துவேஷத்தைத் தூண்டும் விதமாக முன்வைக்கப்படும் கொள்கைகளைப் புறக்கணித்து தமிழினத்தின் நியாயமான அரசியல் அபிலாஷைகளைப்புரிந்து, அங்கீகரித்து, அவர்களையும் சகோதரர்களாக அரவணைத்து ஐக்கிய இலங்கைக்குள் நல்லிணக்கத்துடன் வாழ நீங்கள் முன்வரவேண்டும்.

ஆனால், இன்றைய அரசோ, தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு காணும் அரசியல் விருப்புறுதி எதனையும் கொண்டிருக்கவில்லை. மாறாக, தீர்வு காண்பதை நோக்கி எடுக்கப்படும் முயற்சிகளைத் தாமதப்படுத்தி, தவிர்த்து, ஒரேயடியாகக் கைவிடும் கபட யுக்தியையே அது செயற்படுத்துகின்றது. ராஜபக்ஷ அரசின் செயற்பாடுகள் அனைத்துமே நேர்மையற்று, விவேகமற்று, முதிர்ச்சியற்று இருப்பதுடன், வெறுமனே இனவாத நிலைப்பாட்டை முதன்மைப்படுத்துபவையாகவே இருக்கின்றன.

இந்த அரசு தனது இந்தக் கபட நிலைப்பாட்டை விடாப்பிடியாகத் தொடர்ந்தும் கைக்கொண்டிருக்குமானால், அது இந்த நாட்டை முன்னெப்போதும் இல்லாதவிதமான ஒரு பின்னடைவை நோக்கி மிகத் தெளிவாக இட்டுச்செல்கின்றது என்றே அர்த்தமாகும்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கிடைத்திருக்கும் இந்த இறுதி வாய்ப்பைக் கச்சிதமாகப் பயன்படுத்தி, இதயசுத்தமாக எம்மோடு கைகோக்க இந்த நாட்டின் அரசு தவறுமிடத்து, இந்த நாடு ஒரு வரலாற்றுப் பின்னடைவைச் சந்திக்கப் போவது உறுதி என்பதை இங்கே நான் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

ஒருமித்த இலங்கை என்ற அரசமைப்பிற்குள், ஒரு தீர்வு வேண்டும் என்பதே எமது தெளிவான கோரிக்கை. அத்தகைய தீர்வு ஒன்றைக் காண்பதிலேயே நாங்களும் உறுதி பூண்டுள்ளோம். அந்தத் தீர்வானது - நியாயமானதான, எம்மால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான, நடைமுறைச் சாத்தியமானதான, நின்று நிலைக்கக் கூடியதான பொறி முறைகளுடன் உருவாக்கப்பட வேண்டும். அத்தகைய ஒரு தீர்வை உருவாக்குவதற்கு, அத்தகைய ஒரு தீர்வை உருவாக்குவதில் உறுதிப்பாடு உள்ள எவருடன் இணைந்து பக்குவமாகப் பணியாற்றவும், ஒத்துழைப்பை வழங்கவும் நாங்கள் தயாராகவே உள்ளோம்.

ஸ்ரீலங்கா அரசிற்கு நாம் வழங்கவேண்டிய செய்திகளையும், தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகளான எம் எல்லோரது சார்பிலும் இந்த அரங்கத்தில் முன்வைப்பது பொருத்தமானது என நான் கருதுகின்றேன்.

ஸ்ரீலங்கா அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் போர் நடத்தப்பட்ட விதம் தொடர்பாகப் பொறுப்புக் கூறும் விவகாரம் வலியுறுத்தப்படவில்லை என்ற ஆழமான அதிருப்தி எமக்கு இருந்தாலும், அதிலிருக்கும் வேறு சில பரிந்துரைகள் உருப்படியானவை என்றே நாம் கருதுகின்றோம்.

அவை உண்மையான நல்லிணக்கமும், புரிந்துணர்வும், அமைதியும் ஏற்படுவதற்கு வழிகாட்டுபவையாக உள்ளன. குறிப்பாக, மக்களின் வாழிடங்களில் படை மயமாக்கம் குறைக்கப்படவேண்டும்; மக்களிடம் அவர்களது காணி நிலங்கள் மீள வழங்கப்பட வேண்டும்; மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்; தடுப்புக்காவலில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்; இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இயன்றளவு உச்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய ஒரு அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும் என்பன போன்ற இன நல்லிணக்கத்திற்கு அடிப்படையான பல பரிந்துரைகளை அந்த ஆணைக்குழு செய்துள்ளது.

**தன்னாலேயே நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்தப் பரிந்துரைகளை அரசு நிறைவேற்ற வேண்டும் என நாம் அதனிடம் கேட்டுக்கொள்கின்றோம். வெறுமனே வாக்குறுதிகளை மட்டுமே வழங்கியபடி இருக்காமல், விரைவாகவும் வெளிப்படையாகவும் இந்தப் பரிந்துரைகளை அரசு நிறைவேற்ற வேண்டும்.**

முப்பதாண்டு கால நீண்ட போரானது, பல இலட்சக்கணக்கான மக்களைத் தமது பூர்வீக வாழ்விடங்களிலிருந்து வேரோடு பிடுங்கி வெளியேற்றிவிட்டது. அவர்களில், இந்த நாட்டை விட்டே வெளியேறிச் சென்றுவிட்டவர்கள் ஒருபக்கம் இருக்க, பல்லாயிரக்கணக்கானோர், போர் முடிந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டபோதிலும், நாட்டிற்கு உள்ளேயே இடம்பெயர்ந்த நிலையில் இன்னமும் அகதிகளாகவே அந்தரிக்கின்றனர்.

இந்த மக்களை அவர்களது சொந்த வாழ்விடங்களில் மீளக் குடியேற்றத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு விரைந்து எடுக்க வேண்டும். குறிப்பாக, யாழ்ப்பாணத்தின் வலிகாமம் மற்றும் திருகோணமலையின் சம்பூர் பிரதேச மக்களை மீளக் குடியேற்றும் விவகாரத்தில் அரசு உடனடிக் கவனம் செலுத்தவேண்டும். தமது சொந்த வாழ்விடங்களிலேயே வாழவேண்டும் என்ற எமது மக்களின் அடிப்படை மனித உரிமையை மதித்து, ஏற்றுக்கொண்டு, தனக்குரிய பொறுப்புடன் இலங்கை அரசு செயலாற்றவேண்டும். அனைத்துலக சமூகமும் இந்த விவகாரத்தில் மேலும் கவனம் செலுத்தி, இந்த அரசு தனது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற வழிவகை செய்யவேண்டும்.

இலங்கைச் சிறைகளில், மிக நீண்ட காலமாக, தமிழ் இளைஞர்கள் பலர் எதிர்காலம் பற்றிய எவ்வித நம்பிக்கையுமற்று வாடுகின்றார்கள். போர் முடிந்து மூன்று ஆண்டுகளாகியும் இன்னமும் விடுவிக்கப்படாமல் தடுக்கப்பட்டிருப்பவர்கள் ஒருபுறம் இருக்க, போரின் பின்னாலும் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் தள்ளப்பட்டுள்ளோர் பெருமளவானோர்.

அரச படைகளினால் கைதுசெய்யப்பட்டவர்கள் ஒருபுறம் இருக்க, படையினரிடம் தாமாகவே சென்று சரணடைந்தவர்களும் இவர்களுள் ஏராளமானோர். சட்டத்திற்கு உட்பட்டுக் குற்றம் சாட்டப்பட்டும், நீதிமன்ற நடைமுறைகள் ஊடாக எவ்வித தீர்வையும் பெறமுடியாமல் காலவரையறையற்று அடைக்கப்பட்டிருப்பவர்கள் ஒருபுறம் இருக்க, கைதுசெய்யப்பட்ட மற்றும் சரணடைந்த பின்னர் தெளிவான தகவல்கள் எதுவுமின்றி மறைக்கப்பட்டு விட்டவர்களும் பெருந்தொகையானோர்.

இவர்கள் எல்லோரும் தொடர்பாக அவர்களது பெற்றோரும், குடும்பத்தினரும், உறவினர்களும் மட்டுமன்றி, ஒட்டுமொத்தமான தமிழினமே படும் வேதனைகள், பழைய காயங்களுக்குப் புதிய வலிகளைக் கொடுக்குமே அல்லாமல், அவற்றை ஆற்றுவதற்கு மருந்திடா.

இந்த விவகாரத்தை நாம் பல தடவைகள் அரசிடம் எடுத்துச் சென்றும் உருப்படியான எந்தக் காரியமும் நடக்கவில்லை; இவை தொடர்பாக எமக்கு அளிக்கப்பட்ட எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவுமில்லை. இந்த விடயங்கள் தொடர்பாக அரசு துரிதமாகச் செயற்பட வேண்டும். கைது செய்யப்பட்ட எல்லோரைப் பற்றிய உண்மை நிலையையும் அவர்களது உறவினர்களுக்கு அறியத்தந்து, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விடுவித்து இந்த விடயத்திற்கு ஒரு உறுதியான முடிவு காண வேண்டியது உண்மையான நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அத்தியாவசியமான ஒன்று என்பதை இந்த அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே, இந்த விடயத்தில் உடனடி அக்கறை காட்டி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் உடன் விடுவிக்க அரசு ஆவன செய்யவேண்டும் என இலங்கை அரசிடம் நாம் விநயமாக வேண்டிக்கொள்ளுகின்றோம்.

அனைத்துலக சமூகம் ஆழமாக உணர்ந்து கொள்ளவேண்டிய விடயங்களையும் நான் இங்கே வெளிப்படையாக வற்புறுத்த விரும்புகின்றேன்.

கடந்த முப்பது ஆண்டுகாலப் போரில் ஏற்கனவே கொல்லப்பட்டுவிட்ட மக்களுடன் சேர்த்து 2009 இல் இறுதிப்போர் நிகழ்ந்தபோது மட்டும், பல பத்தாயிரம் அப்பாவித் தமிழ்மக்கள் போர் நடத்தப்பட்ட விதத்தின் நிமித்தம் கொல்லப்பட்டுவிட்டார்கள். அந்தப் போர் நடத்தப்பட்ட விதத்திலும், அந்தப் போரில் நடந்த ஏனைய நிகழ்வுகளிலும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களும் மீறப்பட்டுள்ளனவாகவே கருதப்படுகின்றது.

இவை தொடர்பாக சுயமான - சுதந்திரமான - நீதியான விசாரணைகள் நடத்தப்பட்டு, அந்தப் போர் நடத்தப்பட்டவிதம் தொடர்பான உண்மைகள் கண்டறியப்பட்டு வெளிக்கொணரப்பட வேண்டும் என்ற கருத்தும் இப்போது அனைத்துலக மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவாலும் இத்தகைய ஒரு விசாரணை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அத்தோடு, அண்மையில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், இந்த விவகாரம் தொடர்பாகப் பொறுப்புக்கூறும் கடமைப்பாடும் வலியுறுத்தப்பட்டுள்ளது. நடந்து முடிந்த போரில் நிகழ்ந்த இந்த மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டமீறல்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்பதுவும், அவை சர்வதேச மனித உரிமை, மனிதாபிமானச் சட்ட நியமங்களுக்கு அமைவாக நடத்தப்பட வேண்டும் என்பதுவுமே எமது நிலைப்பாடுமாகும்.

**ஏனெனில், சுதந்திரமான - நியாயமான உண்மைகள் வெளிக்கொணரக்கூடிய எல்லாத்**

(21 ஐப் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வை அரசு வழங்காது என்பதை உலகம் உணரும் வரை பொறுப்போம்

தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு வெளிப்படையான விசாரணையும், நடந்த நிகழ்வுகளுக்கான உரிய பொறுப்புக் கூறலும் நீதியை நிலைநாட்டுவதற்கு மட்டுமன்றி, இந்த நாட்டில் அமைதியும், புரிந்துணர்வும், நல்லிணக்கமும் ஏற்படுவதற்கும் அத்தியாவசியமானவை என்றே நாமும் கருதுகின்றோம்.

இந்தத் தீவில் நிரந்தரமான அமைதியை ஏற்படுத்த இதுதான் இறுதி வாய்ப்பு. இந்தத் தீவில் அமைதி நிலவுவதே தமது தேச நலன்களுக்கும், சர்வதேச நலன்களுக்கும் உகந்தது எனக் கருதுகின்ற நாடுகள், இந்த இறுதி வாய்ப்பைக் கெட்டியாகப் பிடித்துப் பயன்படுத்திவிடவேண்டும். நியாயமான அரசியற் கோரிக்கைகளை முன்வைத்துத் தமிழினம் அன்று முன்னெடுத்த மென்முறைப் போராட்டங்கள் எல்லாம், வன்முறைமூலம் அடக்கப்பட்ட நிகழ்வுகள் வர லாற்றுப் பாடங்கள். 1956, 58, 61, 77, 81, 83 என நீண்ட - தமிழினத்திற்கு எதிரான இந்த வன்முறை மூல அடக்குமுறை வரலாறே, பெரும் போருக்கும் வழிகோலி பின்னர் 2009 வரையும் தொடர்ந்தது.

இப்போது மீண்டும் நாங்கள், எமது அரசியல் உரிமைகளைக் கோரி அமைதிப் போராட்டங்களைத் தொடங்குகின்ற வேளையில், முன்னரைப் போலவே, இப்போதும், மீண்டும் எம்மீது ஆயுத வன்முறை கட்டவிழ்த்து விடப்படுவதற்கான பாதகச் சூழல் இருப்பதாகத் தமிழ்மக்கள் அஞ்சுகின்றார்கள். அதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. அவ்வாறு மீளவும் எம்மீது ஆயுத வன்முறை பிரயோகிக்கப்படுமானால், அது மீண்டும் இந்தத் தீவை ஒரு மிகப் பாரதூரமான சூழலுக்குள்ளேயே இட்டுச் செல்லும் என்பதுடன், அது தமிழினத்திற்குப் பெரும் அழிவையே ஏற்படுத்தும்.

எனவே, அவ்வாறு மீண்டும் தமிழினத்தின் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்படுவதைத் தடுக்கும் பொறுப்பும் கடமையும் அனைத்துலக சமூகத்திடமே உள்ளது. நீண்ட ஆயுதப்போராட்டமும் அது நடத்தப்பட்ட விதமும் எமது மக்களுக்கு இழப்பையும், அழிவையும், களைப்பையும், சலிப்பையும் ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், போர் முடிந்ததன் பின்னான நிகழ்வுகள் எமது மக்களுக்கு விரக்தியையும், சினத்தையும், சீற்றத்தையுமே கொடுத்தபடி உள்ளன என்பதை இந்த உலகம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

வெளிப்படையாகவே இராணுவ மயப்பட்ட சூழல், தொடர்ச்சியாக இராணுவப் புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்கு உட்பட்ட வாழ்வு, பொது நிர்வாகச் செயற்பாடுகளில் பாதுகாப்புத் தரப்பின் இறுக்கமான தலையீடு, வேலை வாய்ப்புகள் வழங்கப்படுவதில் இன்னமும் காட்டப்படும் பாரபட்சம், தமிழ் பெண்களினதும் இளைஞர்களினதும் சமூக - பொருளாதார - பண்பாட்டு வாழ்வின் மீது நுட்பமாக உட்செலுத்தப்படும் சீர்கேடுகள், வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் செய்யப்படும் சிங்களமயமாக்கல், மீள்கட்டுமான மற்றும் பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களிலிருந்து தமிழர்களின் பிரதிநிதிகள் திட்டமிட்டு ஓரங்கட்டப்படல், கணிப்பிட்டுக் கச்சிதமாக மாற்றப்பட்டுவரும் தமிழர் தாயகத்தின் குடிப்பரம்பல், தமிழரின் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து தமிழ் பேசும் மக்களின் இன, மத, பண்பாட்டு, வரலாற்றுச் சின்னங்கள் அகற்றப்பட்டு தமிழர்களின் அடையாளத்தை இல்லாமற் செய்யும் நோக்குடன் பௌத்த ஆலயங்களும் மதச் சின்னங்களும் எழுப்பப்படுதல் என இவை எவையுமே நல்லிணக்கத்திற்கான அறிகுறிகள் அல்ல.

இவை எவையுமே, தமிழர்களும் சக மக்களாகக் கருதப்படுவதற்கான சமிக்ஞைகள் அல்ல; இவை எவையுமே, தமிழர்களுக்கு நம்பிக்கையையும் அமைதியையும் தருவன அல்ல; இவை எல்லாமே, தமிழினத்தை மீண்டும் ஒரு தடவை முன்னெப்போதையும் விடவும் பெருத்த ஆபத்திற்குள் இட்டுச் செல்வதற்கு இடப்படும் அடிக்கற்கள்தான்.

மானிடவியலின் மகத்துவங்களைப் போதித்து, மனிதகுல வளர்ச்சியின் மாண்புகளைப் பரப்பும் அனைத்துலக சமூகம் இங்கே, இந்தத் தீவில், பல பத்தாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்துவரும் ஒரு தேசிய இனம் இருப்பழிந்து போய்விடும் விளிம்பில் உள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். தமக்கெனத் தனித்துவமான மானிட மரபுகளைக் கொண்டு வாழும் மகிமை பொருந்திய மக்கள் சமூகத்தின் எதிர்காலம் அபாயத்தின் வாசலில் உள்ளது என்பதை உலக சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றுகூடிச் செயலாற்றியாக வேண்டும். அதற்கு, இதுதான் கடைசிச் சந்தர்ப்பம். இந்த நிலைமையை அனைத்துலக சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

மதிப்பிற்குரிய பேராளர்களே,

இலங்கைத் தமிழரசுக் கட்சியை, இலங்கைத் தமிழர்களுக்கான ஒரு மாபெரும் தலைமைச் சக்தியாக நாம் கட்டியெழுப்ப வேண்டும். மிகவும் அடிமட்டத்தில், கிராம நிலைகளில் இருந்து எழுப்பப்படும் இந்தக் கட்டமைப்பு ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுக்கவேண்டும். மக்களுக்கு உள்ளிருந்து, மக்களால், மக்களுக்காகக் கட்டியெழுப்பப்படும் இந்த மக்கள் இயக்கம் ஓர் அரசியற் சக்தியாக மட்டுமன்றி, மக்களது சமூக - பண்பாட்டு - பொருளாதார வாழ்வின் அனைத்து அங்கங்களிலும் நற்தாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் இருக்கவேண்டும்.

அதனால், ஒரு பல் பரிமாண வளர்ச்சி நோக்கிய அடுத்த கட்டத்திற்கு எமது கட்சியை நகர்த்திச் செல்வதற்கான, தூர நோக்கத்தின் அடிப்படையிலான, சீரிய வேலைத்திட்டங்களை நாம் வரைய வேண்டும். நீண்ட போரின் காரணமாகப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதும், எதிர்கால வளர்ச்சியின் தூண்களாக இருக்கப் போவதுமான எமது சமூகத்தின் இரு முதன் மைக்கூறுகளான பெண்களையும் இளைஞர்களையும் இலக்குவைத்து எமது வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

30 ஆண்டுகளாக நீண்ட பெரும் போர்ச் சூழல், எமது கட்சியைச் சீரிய முறையில் கட்டமைத் துக் கட்டியெழுப்பும் ஏதுநிலைகளை எமக்குத் தந்திருக்கவில்லை. அதனால், இப்போது பிறந்திருக்கின்ற இந்தப் புதிய சூழலை - தாயக மக்களின் பேராதரவும், அனைத்துலக சமூகத்தின் அங்கீகாரமும் கிடைத்திருக்கின்ற இந்தப் புதிய சூழலை - மக்களுக்குச் சேவையாற்ற எமக்குக் கிடைத்திருக்கும் ஒரு மகத்தான வாய்ப்பாகக் கருதி, அதனை நாம் செவ்வனே பயன்படுத்த வேண்டும்.

பெண்களே ஒரு சமூகத்தின் முதுகெலும்பு போன்றவர்கள். ஒரு மக்கள் சமூகம் நிமிர்ந்து நேராக எழுவதும், கூனிக் குறுகிச் சிதைந்து போவதும், அந்தச் சமூகத்தின் பெண் இனம் எப்படி வாழ்கின்றது என்பதைப் பொறுத்தது. அதிலும் குறிப்பாக, ஈழத் தமிழ் பெண் சமூகம் சந்தித்துவிட்ட இப்போதும் சந்திக்கின்ற துயரங்கள், வார்த்தைகளின் வரம்புகளிற்குள் அடக்கமுடியாத வரலாற்றுக்கொடுமை. எமது பெண்களின் சமூக - பொருளாதார வாழ்வைக் கட்டியெழுப்புவதே எமது கட்சியின் முழு முதற்பணியாக அமையவேண்டும்.

இளைஞர்கள், ஒரு சமூகத்தின் தூண்கள் போன்றவர்கள். ஒரு மக்கள் சமூகம் எதிர்காலத்தில் எப்படியாகப் பரிணமிக்கப் போகின்றது என்பதன் முன்னறிவிப்பாகவே அந்தச் சமூகத்தை நாளை தாங்கி நிற்கப்போகின்ற இன்றைய இளைஞர்கள் திகழ்கின்றார்கள். ஒழுக்க நெறி, தன்னம்பிக்கை, அறிவார்ந்த வாழ்வின் இன்றியமையாமை என்பவற்றை ஊட்டி, நாளைய தமிழினத்தின் தூண்களுக்கு இன்றே வலுச்சேர்க்கும் பணிகளையும் எமது கட்சி தொடங்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழர்கள் எல்லோருக்குமான தலைமைச் சக்தி. தமிழ் பேசும் மக்களின் முன்னேற்றங்கள், பின்னடைவுகள் எதிலும் - முஸ்லிம், இந்து, கிறிஸ்த்தவ சமூகங்களைப் பிரித்துப்பார்க்க முடியாது. பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனம் என்ற சொற்பதங்கள் பரவலாக முதன்மை நிலைப்பட்டுவரும் இலங்கைத் தீவின் புதிய அரசியற் சூழலில், தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒரேமக்கள் என ஒருங்கு திரள்வதே மிகத் துல்லியமான தந்திரோபாயமாக இருக்கமுடியும். அந்தவகையில், காலம் எம்மிடம் தந்துள்ள முதன்மையான பணிகளுள் ஒன்று, தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள தமிழ்பேசும் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சமூகங்கள் முழுமையையும் இந்த விடுதலைப் பயணத்தில் ஒருங்கு திரட்டுவதாகும்.

அதேபோல, தமிழர் தாயகத்திற்கு வெளியே மலையகத்திலும், தென்னிலங்கையிலும் எமது பணிகளை விரிவாக்கம்செய்து, அங்கு வாழும் தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் உள்வாங்கிக்கொள்வதற்கான நேர்த்தியான வேலைத்திட்டங்கள் வரையப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இந்தத் தீவின் சிறுபான்மைச் சமூகங்கள் அனைத்தும் தமது இன, மத, பண்பாட்டு அடையாளங்களையும் பாரம்பரியங்களையும் பாதுகாக்க வேண்டுமெனில், அவர்களுக்கு இருக்கின்ற ஒரே வழி, அவர்கள் அனைவரும் தமிழ் பேசும் மக்கள் என்ற ஒரே குடையின் கீழ் ஒன்றிணைவதே ஆகும்.

அரசில் தமிழ் பேசும் மக்கள் சார்பாக அங்கம் வகிக்கும் ஏனைய அரசியற் கட்சிகளுக்கு இருக்கும் பெரும் பொறுப்பையும் இந்தவேளையில் நான் தயவுடன் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வைத் தராமல் அரசு தாமதப்படுத்துவதற்குக் காரணம், அதன் நேர்மையற்ற, மனப்பூர்வமற்ற, நல்நோக்கற்ற உளப்போக்குத்தான். அரசின் செயற்பாடுகளுக்கு நிபந்தனையற்று ஆதரவளிப்பதற்கு, அதனோடு இருக்கும் தமிழ்பேசும் மக்கள் சார்பான கட்சி களுக்கு சுயதேவைகளும் வேறு காரணங்களும் இருக்கலாம். ஆனால், இந்தக் கட்சிகள் தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சனைக்குத் தீர்வுகாணாமல் இழுத்தடிக்கும் அரசின் நேர்மையற்ற போக்குக்குத் துணை போய் விடக்கூடாது. ஒற்றையாட்சி இலங்கை என்ற அரசமைப்பிற்குள் தீர்வுகாண தமிழ் கட்சிகளது ஆதரவும் தனக்கு உண்டு எனக் காட்டித் தீர்வின் தரத்தைக் குறைக்க அரசு எடுக்கும் கபட எத்தனங்களுக்கு இந்தக் கட்சிகள் வாய்ப்பளித்துவிடக்கூடாது.

தனிப்பட்ட மற்றும் கட்சி நலன்களுக்கு அப்பால் இனத்தின் நலனை முன்னிறுத்தி இயங்க அவை முன்னவரவேண்டும். தமிழ் பேசும் மக்கள் சார்பாக, எமது இனத்தின் இறையாண்மையைக் கேள்விக்குட்படுத்தாத ஒருவலிமையான தீர்வுயோசனையை, தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் நாம் முன்வைக்கவேண்டும். அதற்கு ஒத்துழைக்குமாறு நான் அனைத்துத் தரப்பினரையும் அன்போடு அழைக்கிறேன்.

தாயகத்தை விட்டுப் பிரிந்து பிற தேசங்களுக்குச் சென்றுவிட்ட போதிலும், தாயகத்தின் மீது கொண்டுள்ள அருகாத பற்றினாலும், தமது மக்கள் மீது கொண்டுள்ள குறையாத அன்பினாலும், தமது இனத்தின் மீது கொண்டுள்ள தெய்வீக பக்தியினாலும் புலம் விட்டுப் பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஆற்றி வரும் பணிகள் ஈடற்றவை.

இந்த மண்ணில் வாழும் ஒரு சாதாரண தமிழ் குடிமகனாக நன்றியுணர்வுடன் நான் அவர்களுக்கு மரியாதை செய்கின்றேன்.

எமது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய நாம் எல்லோரும் கூடியிருக்கின்ற இந்த மன்றமே, புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளுக்கான எனது எண்ணங்களைப் பகிர்ந்துகொள்வதற்குப் பொருத்தமான அரங்கமாகவும் உள்ளது.

இங்கே, இலங்கைத் தீவில் தமது அரசியல் நிலைப்பாடுகளை முழுமையாக வெளிப்படுத்த முடியாமல் தமிழர்கள் ஒரேயடியாக முடங்கிப்போய் உள்ளார்கள் எனத் தீவிற்கு வெளியில் வாழும் ஒரு பகுதித் தமிழர்களிடம் இருக்கும் கருத்து ஏற்புடைய ஒரு முழுமையான யதார்த்தநிலை அல்ல. அமைதியாக, ஆனால் திடமாக தமிழ் மக்கள் இங்கே பேசிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். எமது இனத்திற்கென உரித்தான அடிப்படைப் பிறப்புரிமைகளை நிலைநிறுத்துவது தொடர்பான தமது நிலைப்பாடுகளை மக்கள் வெளிப்படுத்திய வண்ணமேதான் உள்ளார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு அவர்கள் வாக்களித்ததே, அவர்கள் கொடுத்த ஒரு துணிவான, சக்திமிக்க செய்திதான். அவர்கள் மட்டுமன்றி, அவர்களின் பிரதிநிதிகளான நாங்கள் ஒவ்வொருவரும் கூட வெளிப்படையாகப் பேசுகின்றோம். எனவே, இலங்கைத் தீவிற்குள் தமிழர்கள் தமது அரசியல் விருப்புறுதியை வெளிப்படுத்த இயலாமல் முழுமையான அரசியல் முடக்கத்திற்கு உள்ளாகியுள்ளார்கள் என்ற கருத்தைத் தளர்த்த வேண்டும் என புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடம் நான் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

எமது மக்கள் எங்கு வாழ்ந்தாலும், அவர்கள் தாயகத்தில் வாழ்ந்தாலும்சரி அல்லது வெளியில் வாழ்ந்தாலும்சரி தமிழ் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எமது மக்கள் எல்லோரையும் சமமாகப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள். ஆனால், வெளியில் வாழும் மக்கள் தமது கணிப்புகளுக்கும் கற்பிதங்களுக்கும் அப்பால், தாயகத்தில் வாழும் மக்களது நிலைப்பாட்டிற்கே எப்போதும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். தாயகத்தில் இன்னமும் வாழும் மக்களின் அரசியற் தெளிவுக்கும், முடிவெடுக்கும் துணிவுக்கும் தமது அரசியற் தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் திறனிற்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் மதிப்பளிக்க வேண்டும்.

தாயகத்தில் வாழும் மக்களினது இந்த இயல்புகளில் அவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும். இலங்கைத் தீவிற்கு வெளியில் வாழும் தமிழர்கள், தீவிற்கு உள்ளே வாழும் தமிழர்களுக்காக எடுக்கும் அனைத்து அரசியல் முன்னெடுப்புகளும், பகிரங்கமாக வெளியிடும் கருத்துகளும், இங்குள்ள களநிலைக்குப் பாதகத்தை ஏற்படுத்தாத வகையில் அமையவேண்டும்.

இங்கு நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு இடையூறுகளை விளைவிக்காதவையாக அமைய வேண்டும். ஏனென்றால், இங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்ப, இங்குள்ள சூழ்நிலையை அனுசரித்து, இங்கேயே வாழும் மக்களால், இங்கேயே எடுக்கப்படும் முயற்சிகள்தான் உருப்படியான இறுதி விளைவுகளை ஒட்டுமொத்தமான தமிழ்த் தேசிய இனத்தின் மீதும் ஏற்படுத்தும்.

புலம்பெயர்ந்து உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் சமூகமே இந்த மண்ணில் இன்னமும் வாழும் மக்களின் அரசியற், பொருளாதாரப் பலம் என்பதையும் நான் இங்கு சொல்லித்தான் ஆகவேண்டும். அவர்களது இருப்பும், இயக்கமும், பங்காற்றலும் எப்போதும் உயர்த்தி மதிக்கப்படவேண்டியவை. கொடூரப் போர் நிகழ்ந்த காலத்திலும் சரி, அந்தப் போர் குரூரமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னாலும் சரி புலம் பெயர்ந்த மக்களே தாயகத்து மக்கள் ஒரேயடியாகத் துவண்டுவிடாமல் முண்டுகொடுத்து நின்றார்கள். அவர்களது ஈடுபாடும் பணிகளும், எப்போதும் இதே வேகத்துடனும் - வீரியத்துடனும் தொடரவேண்டும் என்பதே எமது ஆழ்மன விருப்பம்.

தாயக மக்களது சமூக - பொருளாதார வாழ்வின் முன்னேற்றத்தில் புலம்பெயர்ந்தமக்கள் பாரிய அளவில் பங்கெடுக்க வேண்டும். போர் முடிந்ததன் பின்னால் உருவாகியுள்ள புதிய சூழலில், அவர்களது வாழ்வாதாரங்களைக் காத்திரமாக உயர்த்த உழைக்க வேண்டும். அவர்கள் சொந்தக்காலில் எழுந்து நிமிர்ந்து நிற்பதற்கு ஏதுவான பொருளாதாரப் புறச்சூழலைப் புலம்பெயர்ந்த மக்களே ஏற்படுத்த வேண்டும். இதனை அவர்கள் மேலோட்டமாக அல்லாமல், ஆழமான ஈடுபாட்டுடன், சீராகத் திட்டமிட்டுச் செயற்படுத்தவேண்டும். இங்கு இப்போதுள்ள அகச் சூழலுக்குப் பொருத்தமான, நேர்த்தியான பொருளாதாரக் கட்டமைப்பு ஒன்றை, புலம் பெயர்ந்த மக்களே தாயகமக்களுக்காக உருவாக்கித் தரவேண்டும் என்றே நாங்கள் விரும்புகின்றோம்.

எனது பேரன்புக்குரிய பெரியோர்களே,

நாம் கூடியிருப்பது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒரு மன்றத்திலாக இருந்தாலும், எமது கட்சியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக இருப்பதாலும், என்றும் அது அவ்வாறே இருக்கப் போகின்றது என்பதாலும், எமது கட்சியினதும் கூட்டமைப்பினதும் தலைமைப்பொறுப்பில் தற்போது நானே இருப்பவன் என்ற அடிப்படையிலும், மேலும் சில விடயங்களை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெளிவுபடுத்திவிட விரும்புகின்றேன்.

ஒரு ஜனநாயக அரசியற் கட்டமைப்பிற்குள் கருத்துவேறுபாடுகள் எழுவது இயல்பானது. கருத்து வேறுபாடுகள் எழத்தான் வேண்டும். ஜனநாயகத்தின் அடிப்படையும் அதுதான். ஆனால், அமைப்பிற்குள்ளான கருத்துவேறுபாடுகள், அமைப்பிற்கு உள்ளேயே கலந்தாலோசிக்கப்பட்டுக் களையப்பட வேண்டியவையே அல்லாமல், கட்சிக்கு வெளியே பகிரங்கப் பொதுமன்றங்களில் கட்டவிழ்த்துவிடப்படக் கூடியவை அல்ல.

அது ஒரு நலமான அணுகுமுறையாகவும் அமையாது. அவ்வாறான அணுகுமுறைகள், கருத்திணக்கத்தையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக, ஏற்கனவே இருக்கும் முரண்பாடுகளைத்தான் மேலும் முற்றவைக்கும். அது மேலதிக பிளவுகளுக்கு வழிவகுப்பதுடன், எமது அரசியற் கட்சியைப் பாதிப்பது மட்டுமன்றி, ஒட்டுமொத்தமான எமது இனத்தையுமே பலவீனப் படுத்திவிடும். இதனை, மக்களின் பிரதிநிதிகளான நாங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

அதனாலேயே - உள் முரண்பாடுகள் எதனையும் பகிரங்கத்தில் விவாதிக்கும் புதிய பண்பாடு எதனையும் எமது கட்சி ஊக்குவிக்காது என்பதனையும், அதனை நாம் அனுமதிக்கக் கூடாது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் உறுதிப்படத் தெளிவுபடுத்திவிட விரும்புகின்றேன்.

ஒரு ஜனநாயகக் கட்சியின் சிறப்பியல்பு என்பது, அனைத்துவிதமான கருத்துகளுக்கும் அது வாசல்களைத் திறந்துள்ளது என்பதுதான். எமது கட்சியும் அந்தச் சிறப்புத் தன்மையை உடையது. கட்சியை மேன்மைப்படுத்தி, மக்களுக்குப் பயனுறச் செய்யவேண்டும் என்ற உயரிய எண்ணத்துடனேயே நாம் இருப்பதால், அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் வழிகாட்டக்கூடிய உருப்படியான கருத்துகளை நாம் வரவேற்கிறோம். முன்வைக்கப்படும் ஆக்கபூர்வமான கருத்துகளை ஆராய்ந்து, தேர்ந்தெடுத்து, உள்வாங்கி, செயற்படுத்தி அடுத்த கட்டம்நோக்கி நகரும் விருப்புறுதியோடு நாம் உள்ளோம் என்பதையும் நான் ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது மக்களுக்கு சுபீட்சமான ஒரு வாழ்வை விரைந்து ஏற்படுத்திவிட வேண்டும் என எமது உள்ளுணர்வு தொடர்ந்து சொல்லிக்கொண்டேயிருக்கின்றது. அதற்கான காலம் கனிந்துவரும் என்றே நாம் நம்புகின்றோம்.

சிறுகச் சிறுக, மெல்ல மெல்ல, நுட்பமான நகர்வுகள் ஊடாக இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட அனைத்துலக சமூகத்துடன் நாம் கட்டியெழுப்பிவரும் புரிந்துணர்வும் நல்லுறவும் எமது இனத்திற்கு தீர்க்கமான ஒரு பலத்தைச் சேர்த்து வருகின்றன. இந்தப் பலத்தை வைத்து, எமது இனத்தின் இறையாண்மைப் பிரச்சினைக்கு உருப்படியான ஒரு நிரந்தர அரசியற் தீர்வைப் பெற்றுவிடும் சாத்தியம் உண்டு என்றே நாம் உறுதியாக நம்புகின்றோம்.

எமது இந்த நம்பிக்கையின் ஊற்று நீங்கள்தான்.

உங்கள் எல்லோரிடமிருந்தும் எமக்குத் தேவையானது - ஒற்றுமை, நம்பிக்கை, பாதுகாப்பு, ஒத்துழைப்பு.

தமிழ்த் தேசிய இனத்திற்காக மாசற்ற ஒரு தலைமைச் சக்தியைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான உளப்பூர்வமான ஒற்றுமையை நீங்கள் ஏற்படுத்த வேண்டும்.

நேர்மையான, நேர்த்தியான ஒரு பாதை வழியே எமது மக்களுக்கு நிரந்தரமான அரசியல் விடுதலையைப் பெற்றுத்தரவேண்டும் என்ற ஒரே வேட்கையுடனேயே எமது ஒவ்வொரு அடிகளையும் நாம் பக்குவமாகப் பதித்துச் செல்கின்றோம் என்பதில் நீங்கள் முதற்கண் நம்பிக்கை வைக்கவேண்டும். நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியினதும் ஆழமான அர்த்த பரிமாணங்களைக் கற்றுக்கொண்டு அந்த முயற்சிகளுக்கு இடையூறுகளோ, களங்கமோ ஏற்பட்டுவிடாமல் அந்த முயற்சிகளின் சுமூகமான முன்னெடுப்புகளுக்கு நீங்களே எப்போதும் பாதுகாப்புக் கவசங்களாக இருக்கவேண்டும்.

ஆழமான அரசியல் அர்த்தங்களுடன் நாம் எடுத்துச் செல்லும் காத்திரமான இராஜதந்திரப் பணிகளை எமது மக்களுக்கு விலாவாரியாக எடுத்துவிளக்கி, குழப்பகரமான சூழல்களுக்குள் அவர்கள் சிக்கிவிடுவதைத் தவிர்த்து, எமது பணிகளுக்கு எல்லாவிதமான ஒத்துழைப்பையும் நீங்களே தரவேண்டும்.

எமது இனத்தின் உரிமைக் கோரிக்கைக்கான விடுதலை வேள்வியில் ஆகுதியாகிவிட்ட ஒரு இலட்சத்திற்கும் அதிகமான எமது உடன்பிறப்புகளின் ஆன்மாக்களின் மீது அஞ்சலித்து நாம் நடந்து செல்கின்றோம். அவர்களது ஆசீர்வாதங்களுடனேயே நாங்கள் இந்தப் பயணத்தைச் செய்கின்றோம்.

பழைய உலகச் செல்நெறிக்குள் அவர்களால் அடைய முடியாதுபோன அந்த இலக்கை அவர்களுக்காகவும் எங்களுக்காகவும், புதிய உலகப் புறச்சூழலில் அடையத் தேவையான எல்லாவற்றையும் நாங்கள் செய்வோம்.

அந்த வரலாற்று வெற்றியை இறந்தவர்களின் புனிதக் கல்லறைகளில் காணிக்கையாக்கி, இருப்பவர்களின் நலிந்த வாழ்வைச் செழுமைப்படுத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலைப் பந்தாட்டப் போட்டிகள்

## வென்றது முல்லை பெண்கள் அணி

வலிவடக்கு, மே 28

இலங்கைத் தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்ற அணி மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணி வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியாட்டத்தில் அம்பாறை மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியும் முல்லைத்தீவு தேசிய இளைஞர் சேவை மன்ற அணியும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சமநிலையில் காணப்பட்டாலும் நேரம் செல்லச் செல்ல முல்லைத்தீவு மாவட்டத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணி உத்வேகத்துடன் விளையாடி 12:7 என்ற புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் இரு அணிகள் உத்வேகத்துடன் களமிறங்கின. ஆயினும் முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற அணி 10:5 என்ற புள்ளிகள் முன்னிலையில் இருந்தவேளை ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்டம் நிறைவில் முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணி 22:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் அம்பாறை மாவட்ட தேசிய இளைஞர்சேவைகள் மன்ற அணியை வென்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. (த-86)

## யாழ்.அணி படுதோல்வி

வலி,வடக்கு, மே 28

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட அணி படுதோல்வி யடைந்துள்ளது.

மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இந்தப் போட்டியில் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியும் கொழும்பு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை கொழும்பு மாவட்ட அணியின் கைகள் மேலோங்கி இருந்தது. இதனால் அந்த அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

போட்டியில் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணி எதிர்ப்பைக் காட்டிய போதும் கொழும்பு மாவட்டத் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணி 25:5 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

முதல் தடவையாக தேசிய மட்டத்திலான போட்டியொன்றில் யாழ்.மாவட்டத்தில் இருந்து ஆண்கள் வலைப்பந்தாட்ட அணி கலந்துகொண்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் ஏனைய அணிகளில் இருந்து வீரர்களைத் தெரிவுசெய்யாமல் தனி ஒரு அணியை அனுப்பியமையே இந்தத் தோல்விக்கு காரணம் என விசனம் தெரிவிக்கப்படுகிறது. (த-86)



# பத்து வருடங்களின் பின் பற்றீசியனுக்கு கிண்ணம்



வலி.வடக்கு, மே 28

நிஷான் ரியுடர் பெற்ற 85 ஓட்டங்களின் மூலம் கடந்த பத்து வருடகால இடைவெளியின் பின்னர் மீண்டும் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியொன்றில் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய "ஜொலி ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்காக" 40 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் 7 இலக்குகளால் வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 37.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது.

காண்டீபன் 7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 55 ஓட்டங்களையும், டக்சன் 31 ஓட்டங்களையும், லவேந்திரா, ரஜிந்தன் தலா 30 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 24 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எரிக் பிரதாப் 7 பந்துப் பரிமாற்றம் பந்து விசி 30 ஓட்டங்களுக்குக 4 இலக்குகளையும் , சஜிந்திரன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 47 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சுஜிவன் , லிவிங்டன், கிளின்டன் முறையே 30 ,48, 52 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

236 என்ற ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம், விரைவாக ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 35.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் மூன்று இலக்குகளை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

ரியுடர் 8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 85 ஓட்டங்களையும் சஜிந்திரன் 7 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 56 ஓட்டங்களையும், சேச்சில் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களையும், ஜெகான் 25 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 48 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த டக்சன், அகிலன், காண்டீபன் முறையே 20, 32, 40 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நிஷாந் ரியுடர் சிறந்த துடுப்பாட்ட வீரராக வும் ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் எரிக் பிரதாப் சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரஜிந்தன் சிறந்த களத்தடுப்பாளராக தெரிவு செய்யப்பட்டார்.

போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மருத்திதுறை பிரதேச செயலாளரின் பாரியார் திருமதி ஜெயசீலன் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவித்தார். (86-23)



காரைநகர் சமுர்த்தி வங்கிச் சங்கம் நடத்திய விளையாட்டு விழா காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் நடைபெற்றது. இதில் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான கிடுகு பின்னுதலில் பெண்கள்

## வடமாகாண பெருவிளையாட்டு முதற்சுற்று வவுனியாவில்

வலிவடக்கு, மே 28

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் பெரு விளையாட்டுப் போட்டிகளில் முதல் சுற்று அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. முதற் கட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் வவுனியாவில் இடம் பெறவுள்ளன.

7 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆண்களுக்கான மென் பந்து கிரிக்கெட் போட்டி ஆட்டம் நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

✱வவுனியா பெரிய கோமரசன் மகாவித்தியாலயம் எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி. ✱கிளிநொச்சி மத்திய கல்லூரி எதிர் மன்னார், தலை மன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. ✱வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம் எதிர் பூநகரி மகா வித்தியாலயம். ✱யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் முல்லைத்தீவு மகாவித்தியாலயம். ✱ கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி. ✱மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. ✱முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி எதிர் மன்னார் பாத்திமா மத்திய மகாவித்தியாலயம். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சென்னையின் 'ஹட்ரிக்' கனவை தகர்த்து கொல்கத்தா சம்பியன்

**சென்னை அணியின் "ஹட்ரிக்" கிண்ணம் பெறும் கனவைக் கலைத்து முதல் முறையாக ஐ.பி.எல். சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்.**

**ஆட்ட நாயகனாக பிஸ்லாவும், தொடர் ஆட்ட நாயகனாக கொல்கத்தா அணியின் சுழல் பந்து வீச்சாளர் சுனில் நரேனும் தெரிவு செய்யப்பட்டனர்.**

ஐந்தாவது ஐ.பி.எல். தொடரின் இறுதியாட்டம் நேற்றைய தினம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது. இதில் நான்காவது தடவையாக இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்ற தமிழ் நாட்டு அணியான சென்னை சுப்பர் கிங்ஸும், முதல் முறையாக இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்ற இந்தியாவின் மேற்கு வங்க அணியான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணித்தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

கொல்கத்தா அணி இறுதி ஆட்டத்தில் அதிரடியாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மக்கலத்தை நீக்கியது. சென்னை அணி மாற்றமின்றி களம் கண்டது.

மைக்கல் ஹஸி, முரளி விஜய் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். லீ பந்து வீச்சை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து சகிப் அல் ஹசன் வீசிய பந்துப் பரிமாற்றத்திலும் அடக்கி வாசித்த சென்னை மூன்றாவது பந்து பரிமாற்றத்தில் அதிரடி வேட்டையைத் தொடக்கியது. 5.5 ஆவது பந்தை லீ வீச, நேற்று தனது 37 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய ஹஸி சிக்ஸருக்கு விளாச சென்னை அணி 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

முதல் பத்துப் பந்து பரிமாற்றங்களில் இரண்டு 'ரன் அவுட்' சந்தர்ப்பங்களை மட்டுமே சென்னை வழங்கியது. இருப்பினும் அதனை கொல்கத்தா பயன்படுத்த தவறியிருந்தது. 10 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் சென்னை இலக்கு நஷ்டமின்றி 86 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பதினொராவது பந்துப் பரிமாற்றத்தில் அணி 87 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது இலக்கினை சென்னை பறிகொடுத்தது. பாட்டியா வீசிய பந்தில் விஜய் ஓங்கி அடித்த போதும் எல்லைக் கோட்டினருகே வைத்து சகிப் அபாரமாகப் பிடியெடுத்து ஆட்டமிழக்கச் செய்தார். 32 பந்துகளில் 42 ஓட்டங்களை விஜய் பெற்றுக் கொடுத்திருந்தார். தொடர்ந்து ரெய்னா களமிறங்கினார். ரெய்னா 11.5 ஆவது பந்தில் சிக்ஸர் விளாச சென்னை 100 ஓட்டங்களைத் தாண்டியது.

ஹஸி 38 பந்துகளில் தனது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். ரெய்னா, யூசுப் பதான் பந்துப் பரிமாற்றத்தில் அதிரடியாக பவுண்டரி, சிக்ஸர்கள் விளாச இரண்டாவது இலக்குக்காக 28 பந்துகளில் 50 ஓட்டங்கள் பகிரப்பட்டது. தொடர்ந்தும் ரெய்னா தனது அதிரடிகளை தொடர சென்னையின் ஓட்ட வேகம் எகிறியது. சுனில் நரைனின் பந்து வீச்சில் 105 மீற்றர் தூரம் சிக்ஸர் விளாசிய ரெய்னா 27 பந்துகளில் தனது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். ரெய்னா அதிரடிகளால் மிரட்ட, மறுமுனையில் ஹஸி 17.1 பந்து பரிமாற்றத்தில் 42 பந்துகளில் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இரண்டாவது இலக்குக்காக 73 ஓட்டங்கள் இருவரினை யேயும் பகிரப்பட்டன. ஹஸியின் வெளியேற்றத்தை தொடர்ந்து டோனி களமிறங்கினார். வந்த வேகத்திலேயே டோனி அடுத்தடுத்து இரண்டு பவுண்டரிகள் விளாசினார்.

டோனி, ரெய்னா அதிரடி மிரட்டலில் சென்னை 200 ஓட்டங்களை எட்டிவிடும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்த போதும், இறுதிப் பந்துப் பரிமாற்றத்தை வீசிய சகிப் 8 ஓட்டங்களை மட்டும் வழங்கி சென்னையை 190 ஓட்டங்களுடன் கட்டுப்படுத்தினார்.

காட்டாறு போல் அதிரடியாக ஆடிய ரெய்னா இறுதிப் பந்தில் ஆட்டமிழந்தார். ரெய்னா 38 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கலாக 73 ஓட்டங்களையும், டோனி ஆட்டமிழக்காமல் 9 பந்துகளில் 14 ஓட்டங்களையும் பெற்றனர். 20 பந்துப் பரிமாற்றங்களில் சென்னை 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்து வீச்சில் கொல்கத்தாவின் நட்சத்திரமாக கருதப்பட்டு வரும், நடப்பாண்டு ஐ.பி.எல்.லில் அதிக இலக்குகள் வீழ்த்தியவர்களில் இரண்டாம் இடத்திலிருக்கும் சுனில் நரைன் 4 பந்துப் பரிமாற்றங்கள் வீசி 37 ஓட்டங்களை கொடுத்து இலக்கு எதனையும் வீழ்த்தவில்லை. லீ 4 பந்துப் பரிமாற்றங்களில் 42 ஓட்டங்களை கொடுத்து இலக்கு எதனையும் கைப்பற்றவில்லை. சகிப், கலிஸ், பாட்டியா தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

191 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொல்கத்தாவுக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக இருந்தது. 2 ஓட்டங்களுடன் காம்பீர் வெளியே வீசப்பட்டார். ஆனாலும் அதன்பின் பிஸ்லாவும், கலிஸும் ஆட்டத்தை தம் கையில் எடுத்துகொண்டனர். இருவரும் இணைந்து சென்னையின் பந்து வீச்சை சிதறடித்தனர். இதனால் வெற்றி கொல்கத்தாவின்பக்கம் திரும்பத் தொடங்கியது. இவர்கள் இருவரும் இணைந்து 136 ஓட்டங்களை பகிர்ந்து கொண்ட போது அதிரடியாக ஆடி அரைச் சதம் கடந்திருந்த பிஸ்லா 89 ஓட்டங்களுடன் வெளியேறினார். அதன்பின் சுக்லா (3), பதான் (1) வெளியேற சென்னை ரசிகர்களிடையே மீண்டும் வெற்றிக் கூச்சல்.

பின்னர் கலிஸ் தன் பங்குக்கு அதிரடி வேட்டையைத் தொடக்கி அரைச் சதம் கடந்தார். எனினும் பின்னர் சென்னை அணி களத்தடுப்பை இறுக்கமாக்க ஓட்ட வேகம் கட்டுப் படுத்தப்பட்டது. இந்த நிலையில் 69 ஓட்டங்களுடன் கலிஸ் வெளியேற நிலைமை சிக்கலானது. 19ஆவது பந்துப் பரிமாற்றத்தின் இறுதிப் பந்தில் சகிப் அல்ஹசன் கொடுத்த பிடி, முறையற்ற பந்து காரணமாக வீணாகிப் போனது. இதனால் மேலதிகமாக ஒரு பந்து கிடைக்க அதில் பவுண்டரி அடித்தார் ஹசன். இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் கொல்கத்தாவுக்கு 9 ஓட்டங்கள் தேவை. பரபரப்பின் உச்சத்தில் ரசிகர்கள். முதல் இரு பந்துகளிலும் தலா ஒரு ஓட்டமே பெறப்பட்டது. ஆயினும் அடுத்த இரண்டு பந்துகளையும் திவாரி பவுண்டரிக்கு விரட்ட 19.4 பந்துப் பரிமாற்றத்தில் 5 இலக்குகள் வித்தியாசத்தில் கொல்கத்தாவிடம் வீழ்ந்தது சென்னை. (நா-16-5)



## ஜோஷ்னா சம்பியன்




சென்னை ஓபன் சர்வதேச ஸ்குவாஷ் சம்பியன்ஷிப் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்திய வீராங்கனை ஜோஷ்னா சின்னப்பா கிண்ணத்தை வென்றார். மகளிர் ஸ்குவாஷ் சம்பியன்ஷிப் தொடர் சென்னையில் நடைபெற்றது. இறுதிச் சுற்றில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா, இங்கிலாந்தின் சராஹ் ஜேன் பெர்ரியுடன் மோதினார்.

முதல் செற்றை 9-11 என்று இழந்த ஜோஷ்னா பின்பு எழுச்சி கண்டு 11-4, 11-8, 12-10 என்று தொடர்ந்த மூன்று செற்களை கைப்பற்றினார்.

ஜோஷ்னா, போட்டியின் முடிவில் 3-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். ஜோஷ்னா சொந்த மண்ணில் பெறும் முதல் பட்டமாகும். மேலும், சர்வதேச அளவில் அவர் பெறும் 6ஆவது பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானும் ஐ.பி.எல்லில்?

DLF INDIAN PREMIER LEAGUE

**அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் ஆட்டங்களில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடுவார்கள் என்று ராஜீவ் சுக்லா உறுதியளித்துள்ளார்.**

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள இந்தியன் பிரிமியர் லீக் ஆட்டங்களில் பாகிஸ்தான் அணி வீரர்கள் விளையாடுவார்கள் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் இஜாஸ் பட் கூறியுள்ளார்.

சமீபத்தில் டெல்லிக்குப் பயணம் செய்த இஜாஸ் பட் ஐ.பி.எல். தலைவர் ராஜீவ் சுக்லா, சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் சரத் பவார் ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அப்போது நடைபெற்ற பேச்சுவார்த்தையில், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் ஆட்டங்களில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடுவார்கள் என்று ராஜீவ் சுக்லா தனக்கு உறுதியளித்ததாக இஜாஸ் பட் தெரிவித்தார்.

மேலும் இந்தியா- பாகிஸ்தான் நாடுகளின் கிரிக்கெட் உறவுகளின் முன்னேற்றமாக இன்று நடைபெறும் ஐ.பி.எல். இறுதிப்போட்டியைக் காண பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷாகா அஷ்ரப் இந்தியா வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரர்களின் கருத்துகளுக்கு கத்திவைக்கும் கிரிக்கெட் சபை



இலங்கை வீரர்கள் ஊடகங்களுடன் தொடர்புகளைப் பேணுவதை குறித்து மேலும் இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கைக் கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. இதன்படி ஊடகங்களுக்கு நேர்காணல்களை வழங்குவதற்கு முன்னர் இலங்கைக் கிரிக்கெட் சபையின் அனுமதியை வீரர்கள் பெற்றிருக்க வேண்டும் என இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

**ஊடகங்களுடன் நேர்காணல்களிலோ, கலந்துரையாடல்களிலோ ஈடுபட விரும்பும் இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் இலங்கைக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அஜித் ஜெயசேகரவிடம் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.**

இதன்படி ஊடகங்களுடன் நேர்காணல்களிலோ, கலந்துரையாடல்களிலோ ஈடுபட விரும்பும் இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் இலங்கைக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அஜித் ஜெயசேகரவிடம் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதற்கான சட்டதிட்டங்களை இலங்கைக் கிரிக்கெட் சபையின் வழக்கறிஞர் ஹர்ஷா அமரசேகரவிடம் கலந்துரையாடி அஜித் ஜெயசேகர வரையவுள்ளார். அந்த நடவடிக்கை நிறைவடைந்த பின்னர் அனைத்து ஒப்பந்த வீரர்களுக்கும் இந்தக் கடிதம் அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளியாகும் தகவல்களின் அடிப்படையில் இந்தத் திட்டம் வீரர்களின் ஒப்பந்தத்திலும் இடம்பெற வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வீரர்களுக்கான புதிய ஒப்பந்தங்கள் ஜூன் 1ம் திகதி ஆரம்பிக்கவுள்ள பாகிஸ்தான் தொடருக்கு முன்னர் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.


அத்தோடு இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரரும், முன்னாள் அணித் தலைவருமான குமார் சங்ககாரவிற்கு கடிதமொன்றை அனுப்பவும் இலங்கைக் கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. பத்திரிகையொன்றுக்கு அவர் வழங்கிய பேட்டி தொடர்பாகவே இந்தக் கடிதம் அனுப்பப்படவுள்ளது.

அது எந்தப் பேட்டி எனக் குறிப்பிடப்படாத போதிலும், தான் உலகக் கிண்ணத்தை அடுத்து பதவி விலகிய போது அன்ஜலோ மத்தியூஸ் அணித்தலைவராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிவித்த கருத்தே இலங்கைக் கிரிக்கெட் சபையை கோபத்திற்குள்ளாக்கியிருக்கிறது எனக் கருதப்படுகிறது.

ஏற்கனவே கடந்தாண்டு சார்ள்ஸ் கௌட்ரி உரையை லண்டன் லோர்ட்ஸில் நிகழ்த்திய போதும் இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு அழுத்தத்திற்குள்ளாகியிருந்தார் சங்ககார. அந்த உரையில் அவர் இலங்கைக் கிரிக்கெட் சபையில் வெளிப்படையான நிர்வாகம் இடம்பெற வேண்டும், தனிநபர் நலன்களைத் தவிர்த்து, கிரிக்கெட் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் கிரிக்கெட் சபை ஈடுபட வேண்டும் என்றவாறான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

(ந)

# சாதிப்பார்களா





பரிஸ்: பிரெஞ்ச் ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் தொடர் நேற்றுப் பாரிசில் தொடங்கியது இதில் உலகின் ''நம்பர் 2' வீரர் ஸ்பெயினின் நடால், பெலாரசின் அசரன்கா உள்ளிட்டவர்கள் சாதிப்பர் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டின் இரண்டாவது கிராண்ட் ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ், நேற்று பாரிசில் ஆரம்பமானது. உலகின் முன்னணி வீரர்கள் நடால், ஜோகோவிச் (செர்பியா), சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் போன்றவர்கள் பங்கேற்கின்றனர்.

## நடாலுக்கு வாய்ப்பு:

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் களி-மண் தரையில் நடக்கும். இவ்வகை மைதானத்தில் ஸ்பெயினின் நடாலை வெல்வது





எளிதல்ல. 2005 முதல் 2008 வரை தொடர்ந்து நான்கு முறை சம்பியன் பட்டம் வென்றார். 2009ல் காயம் காரணமாக பங்கேற்கவில்லை.

அடுத்து 2010, 2011ல் மீண்டும் கோப்பை வென்ற நடால், இங்கு கடைசியாக பங்கேற்ற 45 போட்டிகளில், ஒரு போட்டியில் மட்டுமே தோற்றார். இந்த அசத்தல் மீண்டும் தொடர்ந்தால், ஏழாவது முறையாக சாம்பியன் பட்டம் வெல்லலாம்.

## சவால் தருவாரா:

நடாலுக்கு ''நம்பர்-1' வீரர் ஜோகோவிச் தொல்லை தரலாம். ஏனெனில் கடைசியாக நடந்த விம்பிள்டன், யு.எஸ்., ஓபன், ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் கோப்பை வென்றுள்ளார். பிரெஞ்ச் ஓபனில் ஒருமுறை கூட இறுதிக்கு முன்னேறாத இவர், இம்முறை முதல் கோப்பை வெல்ல திட்டமிட்டுள்ளார். அதேநேரம், கடந்த வாரம் நடந்த பரிஸ் ஓபன் தொடரில், நடாலிடம் கோப்பையை பறி கொடுத்தது இவருக்கு பின்னடைவு தான்.

இவர்களுடன் ''நம்பர்-3' வீரர் ரோஜர் பெடரர், ஆண்டி முர்ரே (பிரிட்டன்), டேவிட் பெரர் (ஸ்பெயின்) போன்ற வீரர்களும் கோப்பை வெல்லும் போட்டியில் உள்ளனர்.

அசரன்கா உறுதி:

பெண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் "நம்பர்-1' வீராங்கனை பெலாரசின் அசரன்கா, இரண்டாவது இடத்திலுள்ள ரஷ்யாவின் மரியா ஷரபோவா, செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, ''நடப்பு சம்பியன்' சீனாவின் லி நாவும் கோப்பை வெல்ல கடும் போட்டிக்கு தயாராக உள்ளனர். இவர்களுடன் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ரஷ்யாவின் சுவனரேவா, ஜேர்மனியின் சபைன் லிசிக்கியும் விளையாடுகின்றனர். இந்தியா சார்பில் பெண்கள், ஆண்கள் ஒற்றையர் போட்டிகளில் யாரும் பங்கேற்கவில்லை.

(ந)


## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 22,500/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

(18625)

## வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருவிழா உற்சவம் - 2012

வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 04.06.2012 திங்கட்கிழமை பொங்கல் திருவிழாவுடன் ஆரம்பமாகி 17.06.2012 வரை விசேட நிகழ்ச்சிகளுடன் நடைபெறும்.

**தேர்த்திருவிழா - 16.06.2012 - சனிக்கிழமை**
**தீர்த்தத் திருவிழா - 17.06.2012 ஞாயிற்றுக்கிழமை**

ஆலய சுற்றாடலில் தற்காலிக கடைகள் அமைத்து வியாபாரம் செய்ய விரும்பும் வியாபாரிகள் இடங்களைப் பதிவு செய்து கொள்வதற்காக 02.06.2012 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறோம். நடைமுறை தொடர்பான விளக்கம் அன்று அளிக்கப்படும்.

சி.வேலாயுதபிள்ளை
மடத்தடி வீதி,
கொடிகாமம்

தலைவர்
பரிபாலனசபை
சிட்டிவேரம் கண்ணகைஅம்பாள்
ஆலயம்

(சி/9306)(6-7-8)

## Earn a UK Degree @ IIS CITY CAMPUS




COMPUTING
CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
BUSINESS MANAGEMENT

புதிய பிரிவு ஆரம்பம் : 10.06.2012 காலை 10.00 மணி

வார, வாரஇறுதி நாள் பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

மேலதிக விபரங்களுக்கு :- 021 4900 900

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

(C/320)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.